General Certificate of Education - Advance Level

சகாணியா வெளியீடு
Sakaniya Publication

# G.C.E. A/L
# New Syllabus

# க.பொ.த. உயர்தரம்
# புதிய பாடத்திட்டம்

பரதநாட்டியம்

பரீட்சை வினாக்களும் முன் மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன்

2012ஆம் ஆண்டு
புதிய பாடத்திட்டத்திற்கு
அமைவாக தயாரிக்கப்பட்டது.

2011, 2012, 2013, 2014
பரீட்சை வினாத்தாள்கள் விடைகளுடன்

பலவருட பரீட்சை மதிப்பீடு, மற்றும் கற்பித்தல்
அனுபவம் வாய்ந்த உயர் கல்விப் பின்புலம் உள்ள
ஆசிரியர் குழுவின் பங்களிப்புடன் வெளிவருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# General Certificate of Education Advance Level

## G.C.E A/L NEW SYLLABUS

## புதிய பாடத்திட்டம்

**பரீட்சை வினாக்களும், விடைகளும்.**

**பரீட்சைத் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டது.**

**2012 ஆம் ஆண்டு புதிய பாடத்திட்டத்திற்கமைய தயாரிக்கப்பட்டது.**

# பரதநாட்டியம்


தொகுப்பு:

**திருமதி தேவராணி கோபால கிருஷ்ணன்.**

நுண்கலைமாணி (நடனம்), Dip. in Edu.

கலா வித்தகர் (நடனம்)

சேவைக்கால ஆசிரியா ஆலோசகர் (நடனம்)

தீவக கல்வி வலயம்.

**திருமதி விஷாரத் சுபாசினி சர்வேஸ்வரன்.**

Dip. in Dance.

ஆசிரியர், கொ/ கணபதி இந்து மகளிர் மகா வித்தியாலயம்.



## சகாணியா வெளியீடு

## Sakaniya Publications

70/21 Peterson Lane

Colombo 06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2014 ஓகஸ்ட்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2014

பரதநாட்டியம் I
Baratha Dancing I

இரண்டு மணித்தியாலம்
Two hours

## பரதநாட்டியம் I

கவனிக்க:

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.
* விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்க.
* 1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (X) இடுவதன் மூலம் காட்டுக.

1. கணபதியின் துதிக்கையை அபிநயிக்கப் பயன்படும் முத்திரை
   1) மிருகசீர்ஷம் 2) சிங்கமுகம் 3) கஜகஸ்தம்
   4) திரிபாதம் 5) ஹம்ஸாஸ்யம்

2. வாரணம் ஆயிரம் சூழ வலம் வரும் நாயகன்
   1) சிவன் 2) முருகன் 3) விநாயகர்
   4) ஸ்ரீராமன் 5) விஷ்ணு

3. நுண்கலைகள் எத்தனை?
   1) ஐந்து 2) ஆறு 3) ஏழு 4) எட்டு 5) பத்து

4. ; ; / ; ; / ; ; / ; ததிங் /, கிணதொம் / ததிங், கி / ணதொம் ததிங் /, கிணதொம் //
   மேற்படி தாளாங்கத்தில் அடங்கக்கூடிய ததிங்கிணதோம் அமைந்துள்ள ஜதி எது?
   1) திஸ்ரம் 2) சதுஸ்ரம் 3) கண்டம் 4) மிஸ்ரம் 5) சங்கீரணம்

5. திருமாலின் வில் நாண் அசைந்த ஒலியால் தோன்றிய விருத்தி,
   1) பாரதி விருத்தி 2) ஆரபடி விருத்தி
   3) கைசிகி விருத்தி 4) சாத்வகி விருத்தி
   5) சங்காத்யம்

6. கதிர்காமக் கந்தனின் மயில் வாகனத்தைக் குறித்துப் புகழ்ந்து ஆடும் வண்ணம்,
   1) மயூர வண்ணம் 2) ஈரடி வண்ணம்
   3) சவுளா வண்ணம் 4) உரக வண்ணம்
   5) உக்குஸா வண்ணம்

7. 'தரண' என்ற தூய நிருத்த உருப்படி அமைந்துள்ள ஆடல் வகை
   1) ஒடிஸி 2) கதக் 3) கதகளி
   4) மணிப்புரி 5) மோகினியாட்டம்

8. கதகளி நடனத்தில் இடம்பெறும் சிருங்கார ரஸ வெளிப்பாடு நிறைந்த ஆடற் பகுதி
   1) கலாசம் 2) தோடயம்
   3) பதிஞ்ச ஆட்டம் 4) கதக் 5) மோகினி ஆட்டம்

9. ஆலய நர்த்தகிகளை 'பீதர் காலநியர்கள்' என்று அழைத்த சாஸ்திரிய நடனம்
   1) ஒடிஸி 2) மணிப்புரி 3) குச்சுப்புடி
   4) கதக் 5) மோகினி ஆட்டம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. சதிர், கதகளி ஆகியவற்றின் செய்முறைகளின் சேர்க்கையின் காரணமாக பிறந்த ஆடல்
1) குச்சுப்புடி 2) பாகவதமேளம்
3) மோகின ஆட்டம் 4) கதக்
5) ஒடிஸி

11. பாமாகலாபம், பாரிஜாத பஹரணம் போன்ற பிரசித்தமான காவியங்கள் இடம்பெற்ற நடனம்
1) மோகினி ஆட்டம் 2) பரதநாட்டியம் 3) கதகளி
4) குச்சுப்புடி 5) கதக்

12. கைகளில் பெரிய தாளங்களைத் தட்டிய வண்ணம் உத்வேகத்துடன் ஆடுவது
1) புங்சோலோம் 2) கர்த்தாசோலோம் 3) பூர்வாங்க
4) சங்கீர்த்தன 5) லைஹரோபோ

13. கொஹோம்ப கங்காரிய சடங்கில் வேடர்களைக் கொண்டு ஆடப்படும் நாட்டியம்
1) அய்லே யக்கம 2) மஹ யக்கம 3) மலே யக்கம
4) சீதா யக்கம 5) வதி யக்கம

14. பரதர் வடமொழியில் எழுதிய நாட்டிய சாஸ்திரத்தைத் தமிழில் மொழிபெயர்த்தவர்
1) திரு. எஸ். என். ஸ்ரீராமதேசிகன் 2) திரு. இ. சாம்ராஜ்
3) திரு. எஸ். தனஞ்சயன் 4) ஸ்ரீமதி ரமா வைத்தியநாதன்
5) கலாநிதி பத்மா சுப்பிரமணியம்

15. ஷோடசோபசாரம் எனக் கூறப்படும் ஆலய வழிபாட்டு முறையில் 15 ஆவதாகக் கூறப்படும் அங்கம்
1) வேத உத்சாடனம் 2) நிருத்தியோபசாரம் 3) தீபாராதனை
4) அபிஷேகம் 5) கீதவாத்தியம்

16. குறிஞ்சி நில மக்கள் முருகப் பெருமானைப் போற்றி வாழ்த்தி ஆடுவது
1) ஆய்ச்சியர் குரவை 2) வேட்டுவ வரி
3) குன்றக்குரவை 4) சாக்கையர் குரவை
5) வரிக்கோலம்

17. இரஸங்கள் எட்டு என வகுத்தவர்
1) பரத முனிவர் 2) அபிநவ முனிவர்
3) ஆனந்த குமாரசுவாமி 4) நந்திகேஸ்வரர் 5) சாரங்கதேவர்

18. சக்ரதாரி, சந்திரலேகா ஆகிய தென்னிந்தியத் திரைப்படங்களில் நடனம் ஆடிய இலங்கைக் கலைஞர்
1) பிரம்மஸ்ரீ என். வீரமணி ஐயர்
2) ஸ்ரீமதி கமலா ஜோன்பிள்ளை
3) ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி சண்முகம்பிள்ளை
4) கலைச்செல்வன் ஏரம்பு சுப்பையா
5) ஸ்ரீமதி ஜெயலக்ஷ்மி கந்தையா

19. 'நடவர' என்ற பெயர் கொண்டு அழைக்கப்படும் இறைவன்
1) சிவன் 2) முருகன் 3) விநாயகர் 4) அம்பிகை 5) கிருஷ்ணன்

20. மோகினி ஆட்டத்தில் கலாநிதிப் பட்டம் பெற்ற கலைஞர்
1) ராகினி தேவி 2) தங்கமணி 3) சாந்தராவ்
4) கனெக்றெலே 5) கல்யாணி அம்மா

21. மன்னர், அறிஞர் நிறைந்த சபையில் ஆடப்படும் ஆடல்,
1) பொதுவியல் 2) வேத்தியல் 3) கூத்து 4) ஆடல் 5) வேட்டுவரி

22. பர்வத யதி என அழைக்கப்படும் யதி
1) கோபுச்ச யதி 2) ஸம யதி 3) டமருகயதி
4) மிருதங்கயதி 5) ஸ்ரோதோவக யதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. "லயத்திலும் தாளத்திலும் வேறு இந்திய நடனம் எதுவும் கதக்கிற்கு நிகராகாது" என்று கூறிய பெரும் கலைஞர்
1) மயிலாப்பூர் கௌரி அம்மா 2) ஸ்ரீமதி ருக்மணி அருண்டேல் 3) சீதாராதேவி
4) தஞ்சை பொன்னையா 5) முத்துஸ்வாமி தீட்ஷிதர்

24. நாயகன் நாயகியரைச் சேர்த்து வைப்பதில் திறமை பெற்ற தூதர்
1) பீடமர்த்தன் 2) விடன் 3) சேடன் 4) விதூஷகன் 5) தக்ஷிணன்

25. நாட்டிய சாஸ்திரத்தில் பரதர் கூறும் விகிருத அரங்கம் என்பது
1) எண்கோணம் 2) சாய்சதுரம் 3) முக்கோணம் 4) சதுரம் 5) செவ்வகம்

26. சங்கீத அளவுகோல் என அழைக்கப்படும் நரம்புக்கருவி
1) வயலின் 2) தம்பூரா 3) வீணை 4) யாழ் 5) மோர்சிங்

27. 72 மேளகர்த்தா இராகங்களுக்கான பாடல்களை இயற்றிய கலைஞர்
1) ஷேத்ரக்ஞர் 2) வீரமணி ஐயர் 3) ஸ்ரீராமகவி
4) கவிஞர் சரபாரதி 5) ஷியாமாசாஸ்திரி

28. 'தெய்வீக ஆடற்கலை' எனும் அரிய நூலை எழுதியவர்
1) வழுவூர் இராமையாப்பிள்ளை 2) ருக்மணிதேவி அருண்டேல்
3) அடையார் லக்ஷமணன் 4) ஈ. கிருஷ்ணையர்
5) பாலசரஸ்வதி

29. யக்ஷ கானம் சிறப்புப் பெற்று விளங்கிய காலம்
1) நாயக்கர் காலம் 2) சோழர் காலம் 3) சங்க காலம்
4) சங்கமருவிய காலம் 5) மராட்டிய காலம்

30. ஜீவாத்மா, பரமாத்மா தொடர்பை வெளிப்படுத்தும் பரத நாட்டிய உருப்படி
1) அலாரிப்பு 2) புஷ்பாஞ்சலி 3) ஜதிஸ்வரம் 4) பதம் 5) தில்லானா

31. 'புஷ்டம்' என்பது எவ்வகை அபிநயத்தின் உட்பிரிவாகும்?
1) வாச்சிகம் 2) ஆஹார்யம் 3) சாத்வீகம் 4) ஆங்கிகம் 5) அபிநயம்

32. 'வாணிப்பொந்து' எனும் ஜாவளி பாடப்பட்ட மொழி
1) கன்னடம் 2) தெலுங்கு 3) மலையாளம் 4) சமஸ்கிருதம் 5) தமிழ்

33. சரணப் பகுதியில் மட்டும் பெரும்பாலும் சாகித்தியத்தை எடுத்துக் கொள்ளும் உருப்படி
1) வர்ணம் 2) ஜாவளி 3) தில்லானா
4) கௌத்துவம் 5) சப்தம்

34. கதகளி ஆடல் பற்றிய லக்ஷணங்களைக் கூறும் நூல்
1) ஹஸ்தலக்ஷண தீபிகா 2) அபிநய தர்ப்பணம்
3) அபிநய சாரசம்புடம் 4) நாட்டியக்கலை 5) ஆடற்கலை

35. 'கனகசபை' அமைக்கப்பட்டுள்ள ஆலயம்
1) சிதம்பரம் 2) பிரகதீஸ்வரர்
3) கைலாசநாதர் 4) சாரங்கபாணி
5) திருவண்ணாமலை

36. சிவனுடைய முக்கண் குறிப்பது
1) சூரியன், சந்திரன், அக்கினி 2) ஆண், பெண், அக்கினி
5) சூரியன், சந்திரன், நட்சத்திரம் 4) ஓம்காரம்
5) சூரியன், சந்திரன், ஓம்காரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37. "பூந்தோட்டத்திலுள்ள பூக்களும் செடிகளும் மரங்களும் எமது மகிழ்விற்கு பங்களிப்புச் செய்தன. இப்போது அவை எனக்கு வெறுப்பைத் தருகின்றன" இந்த உணர்வை வெளிப்படுத்தும் நாயகி

1) கண்டிதா
2) விப்ரலப்தா
3) கலகாந்தரிகா
4) வாசகஸஜ்ஜிகா
5) விரகோத்கண்டிதா

38. கீழ்வரும் ஸ்தலங்களில் கரண சிற்பங்கள் காணப்படாத ஸ்தலம்

1) சிதம்பரம் நடராஜர்
2) திருவண்ணாமலை அருணாலேஸ்வரர்
3) காஞ்சிபுரம் கைலாசநாதர்
4) சென்னை அஷ்டலக்ஷ்மி
5) தஞ்சாவூர் பிரகதீஸ்வரர்

39. தசரதன் எந்த வகையான நாயகன்

1) அநுகூலன் 2) உபபதி 3) சடன் 4) பீடமர்த்தன் 5) தக்ஷிணன்

40. சொல்லிலும் செயலிலும் சாதுரியம் உடைய நாயகி

1) விதக்தை 2) குபதை 3) குலடை 4) முதிமை 5) இலிங்கினி

41. அடானா, வசந்தா, ஆரபி ஆகிய இராகங்கள் மூலம் வெளிப்படுத்தப்படும் ரஸம்

1) ஹாஸ்யம் 2) ரௌத்ரம் 3) வீரம் 4) பயானகம் 5) அற்புதம்

42. 'வேகினி' என்பதற்குரிய பேதம்

1) ஸ்தானக பேதம்
2) மண்டல பேதம்
3) உத்ப்ளவன பேதம்
4) சாரி பேதம்
5) ப்ரமரி பேதம்

43. திருவாசி என்பது

1) படைத்தலைக் குறிக்கும்.
2) மறைத்தலைக் குறிக்கும்.
3) காத்தலைக் குறிக்கும்.
4) ஓம்காரத்தைக் குறிக்கும்.
5) படைத்தலிலிருந்து அழித்தலைக் குறிக்கும்.

44. ரஸம் வெளிப்படும்போது நிலைத்த தன்மையும் நிரந்தமானதும் மாறுபடாதுமான உணர்வு

1) ஸ்தாயி பாவம்
2) சாத்வீக பாவம்
3) சஞ்சாரி பாவம்
4) விபாவம்
5) அநுபாவம்

45. இராமநாதன் நுண்கலைக் கற்கைநெறியின் இறுதியில் 'நுண்கலைமாணி' எனும் பட்டம் வழங்கப்பட வேண்டும் என முன்மொழிந்த பேராசிரியர்.

1) சபா ஜெயராஜா
2) கா. சிவத்தம்பி
3) அ. சண்முகதாஸ்
4) கைலாசநாதக் குருக்கள்
5) பி. சாம்பமூர்த்தி

46. அபிநய அழகினால் காண்போரைக் கவரும் தன்மையைப் பெற்றவர்

1) கௌரி அம்மாள்
2) ஜெயம்மாள்
3) முத்துரத்தினம்மாள்
4) பாக்கியம்மாள்
5) சாரதாம்பாள்

47. ஸ்ரீ நடராஜமூர்த்தி வலது காலத் தூக்கி நின்றாடி காட்சியளித்த கோயில்

1) மதுரை மீனாட்சி சுந்தரேசர் கோயில்
2) சிதம்பரம் நடராஜமூர்த்தி கோயில்
3) தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோயில்
4) விருத்தாசல விருத்தகிரீஸ்வரர் கோயில்
5) வழுவூர் ஞானசபேசர் கோயில்

48. திரிகூடராயப்ப கவிராயரால் எழுதப்பட்ட நடன நாடகம்

1) குற்றாலக் குறவஞ்சி
2) கண்ணப்பர் குறவஞ்சி
3) விராளிமலைக் குறவஞ்சி
4) நல்லைக் குறவஞ்சி
5) மயிலைக் குறவஞ்சி

49. நாட்டிய சாஸ்திரத்தின் முப்பதைந்தாம் அத்தியாயம் விளக்குவது

1) நடனத்தின் பயனைப் பற்றி ஆகும்.
2) பாத்திரங்களைத் தேர்ந்தெடுக்கும் முறை பற்றி ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) முத்திரைகள், உருப்படிகளின் அசைவுகளைப் பயன்படுத்தும் முறை பற்றி ஆகும்.
4) தாளக் கருவிகள் பற்றி ஆகும்.
5) கண்களால் காதலை வெளிப்படுத்தும் முறை பற்றி ஆகும்.

50. சதிர், தாசியாட்டம் என அழைக்கப்பட்ட தமிழக சாஸ்திரிய நடனம் பரதநாட்டியம் என அழைக்கப்படட வேண்டுமென முன்மொழிந்தவர்களுள் ஒருவர்
1) இராமசாமி நாயக்கர் 2) நாராயண ஐயர்
3) முத்துலெக்ஷ்மி ரெட்டி 4) ஈ. கிருஷ்ணய்யர்
5) ராஜகோபாலாச்சாரியார்

Department of Examinations, Sri Lanka
இலங்கைப்பரீட்சைத் திணைக்களம்

53 T II

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2014 ஒகஸ்ட்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2014

பரதநாட்டியம் II
Baratha Dancing II

மூன்று மணித்தியாலம்
Three hours

## பரதநாட்டியம் II

அறிவுறுத்தல்:
* பகுதி I இல் முதலாம் வினா உட்பட இரண்டு வினாக்களுக்கும், பகுதி II இல் எவையேனும் மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

### பகுதி - I

1. i) நீர் கற்ற பதவர்ணத்தின் பூர்வாங்கப் பகுதியில் சாகித்தியத்தின் உள்ளடக்கத்தைச் சுருக்கமாக எழுதுக.
ii) நீர் கற்ற பதவர்ணத்தின் அனுபல்லவிப் பகுதி முடிவடைய வரும் தீர்மானத்தையும் முதலாவது சரணஸ்வரத்தின் ஒரு கோர்வையினையும் தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுக.

2. மணிப்புரி நடனத்தினைப் பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.
தோற்றம்
வளர்ச்சி
பயன்படுத்தும் இசை, இசைக்கருவிகள்
ஆடல்முறை
ஆடை, அணிகள், ஒப்பனை

3. i) 72 மேளகர்த்தா இராகங்களின் சக்கரங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
ii) 3ஆவது, 6ஆவது சக்கரங்களில் வரம் மேளகர்த்தாக்களின் இலக்கங்களையும் இராகங்களின் பெயர்களையும் அவற்றின் ஸ்வரஸ்தானங்களையும் எழுதுக.

### பகுதி - II

4. இலங்கையில் பாடசாலைகளும் உயர் கல்வி நிறுவனங்களும் பரதக்கலை வளர்ச்சிக்கு ஆற்றிவரும் பங்களிப்பினை விளக்குக.

5. சிறுகுறிப்பெழுதுக.
1. ஏழு தாண்டவங்கள்
2. தப்பட்டை
3. தலைக்கோலி
4. உத்ப்ளவன போதம்
5. ஆய்ச்சியர் குரவை

6. பரதநாட்டியக் கச்சேரியில் கீர்த்தனை என்ற உருப்படியைச் சேர்த்துக்கொண்ட நடனக் கலைஞரின் வாழ்க்கை வரலாறு, கலைத்தொண்டு ஆகியவற்றை எழுதுக.

7. பல்லவர் கால பக்தி இயக்கங்கள் நாட்டியக்கலையில் தாக்கம் செலுத்திய விதத்தை விளக்குக.

8. நவீன தொடர்புசாதனங்கள், தொழினுட்பங்கள் என்பன பரதநாட்டியக்கலை ஆற்றுகையில் தரும் பங்களிப்பை விவரிக்குக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரத நாட்டியம் I

## Bharatha Dancing I

விடைகள் - 2014

| வினா இல | விடை | வினா இல | விடை | வினா இல | விடை | வினா இல | விடை | வினா இல | விடை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 3 | 11. | 4 | 21. | 2 | 31. | 2 | 41. | 2 |
| 02. | 5 | 12. | 2 | 22. | 5 | 32. | 2 | 42. | 4 |
| 03. | 3 | 13. | 5 | 23. | 2 | 33. | 3 | 43. | 4 |
| 04. | 1 | 14. | 1 | 24. | 3 | 34. | 1 | 44. | 1 |
| 05. | 4 | 15. | 2 | 25. | 5 | 35. | 1 | 45. | 2 |
| 06. | 1 | 16. | 3 | 26. | 3 | 36. | 1 | 46. | 3 |
| 07. | 2 | 17. | 1 | 27. | 2 | 37. | 5 | 47. | 1 |
| 08. | 3 | 18. | 4 | 28. | 1 | 38. | 4 | 48. | 1 |
| 09. | 1 | 19. | 5 | 29. | 1 | 39. | 5 | 49. | 2 |
| 10. | 3 | 20. | 4 | 30. | 4 | 40. | 1 | 50. | 4 |

(50 x 02 = 100 புள்ளிகள்)

பரத நாட்டியம் II

## Bharatha Dancing II

விடைகள் - 2014

பகுதி - I

1. i) நீர் கற்ற பதவர்ணத்தின் பூர்வாங்கப் பகுதியில் சாகித்தியத்தின் உள்ளடக்கம்

அ) இராகம் : ஆனந்தபைரவி, தாளம் : ஆதி
"சகியே இந்த வேளையில்....................."

- தோழியே நாயகனைப் பிரிந்து நான் துன்பப்படும் இந்த நேரத்தில் நீ கேலி/நையாண்டி செய்ய வேண்டாம்.
- எந்தன் சுவாமியை அழைத்தோடி வாடி இங்கே.
  எனது தலைவனான விஷ்ணுவை / திருமாலை இங்கு அழைத்து வா
- மகிதலம் புகழும் மெத்த மகிமைராஜ நகரில்
  அனைத்து உலகமும் புகழ்ந்து போற்றுகின்ற பெருமை நிறைந்த உனது ஆட்சிக்குரிய நகரத்தில்,
- திகிரி சங்கேதம் திகழ் ராஜ கோபாலரை
  சங்கு சக்கரங்களைத் தன் திருக்கரங்களில் ஏந்தியுள்ள பெருமை மிகுந்த ராஜகோபாலர் எனப் போற்றப்படும் விஷ்ணுவை / திருமாலை
- நாகரிக மிகவும் ஸரஸ வகையாய் மலரணைமேல் அனுதினமும்
  நாகரிகமான வகையில் மலர்ப் படுக்கையில் என்றும் மகிழ்ச்சியாயிருக்க (தோழியே.....)
- அருமையாக சல்லாப மதியோடு நல்ல உல்லாச விலாச கலாப நிலாவில் குலாவ - எந்தன நல்ல பேச்சு, சிறந்த எண்ணங் கொண்டு மகிழ்வுடன் நிலவொளியில் (தலைவன், தலைவி) மகிழ்ந்திருக்க.

ஆ) இராகம் : தன்யாசி, தாளம் : ஆதி
"நீ இந்த மாயம் செய்தால்..............."

- நீ இந்த மாயம் செய்தால் நியாயம் தானோ தயா நிதியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கிருஷ்ணா) நீ இவ்வாறான குறும்புகள் செய்வது சரிதானா கருணை நிறைந்தவனே.

- பாயும் மாறன் அம்பினால் துன்புறும் பாவையைக் கண்ணால் பாராமல் இன்னும்
  மன்மதனின் அம்புகள் வருத்துகின்ற பெண்ணை (உனது) கண்களால் இது வரை ஏன் பார்க்கவில்லை?
- நீயல்லால் துணையில்லை புவிதனிலே தயை புரிவாய் நிஜமிது வனஜ நயன
  தாமரை மலர் போன்ற கண்களையுடையவனே, நீ இல்லாது இந்த உலகத்தில் (எனக்கு) துணையில்லை. எனவே (நீ) (எனக்கு) இரக்கத் காட்ட வேண்டும்.
- நினதுபயசரணம் கனவிலும் மறவா எனது தாபமற வந்தருள் இறைவா
  உன் பெருமைக்குரிய திருப்பாதங்களைக் கனவிற் கூட மறவாத எனது வருத்தத்தை நீக்க அருள் தர வேண்டும் இறைவனே.
- முரளி கான குளிர் நிறை மதி வதனனே முரஹரமுனிவர் தொழும் கமல சரணனே
  இனிய இசைதரும் புல்லாங்குழல் ஏந்தியவனே, குளிர்மை தரும் பூரண சந்திரன் போன்ற திருமுகத்தை உடையவனே, அசுரர்களை அழித்தவனே, முனிவர்களால் வணங்கப்படும் தாமரை மலர் போன்ற திருப்பாதங்களை உடையவனே.
- ராதை மணவாளா துயரமினி தாளேன் முகில் நிகர் தயாளா யதுபதியே
  ராதையின் நாயகனே, (நான்) இனி துயரத்தைத் தாங்க முடியாது. முகில் நிறத்தை ஒத்தவனே, கருணை நிறைந்தவனே.

(i - அ/ஆ - 05 புள்ளிகள்)

2. மணிப்புரி நடனம்

- இந்தியாவின் வடகிழக்குப் பிராந்தியத்திலே நிலவிவரும் நேர்த்தியான சாஸ்திரிய நடனம் மணிப்புரி நடனமாகும்.
- மணிப்புரி நடனம் மணிப்புரி இடத்தின் பெயரால் அழைக்கப்படும்.
- முனிப்பூரின் தலைநகரமான இம்பால்தான் இந்நடனத்தின் கேந்திர நிலையமாகும்.
- இங்கு பல வகையான நடனங்களும் சமயச் சடங்குகளும் உள்ளன. இவை யாவும் மணிப்புரி (நந்தன) நடனம் என அழைக்கப்படுவன.
- ஆரம்ப காலத்தில் இங்கு வாழ்ந்த மக்கள் பெரும்பாலும் சைவ சமயத்தவர்களாகச் சிவனையும் பார்வதியையும் வழிபட்டனர்.
- பின்னர் வைஷ்ணவம் பரவ கிருஷ்ணன் ராதையை வழிபடலாயினர்.
- மணிப்பூர் பல வகயையான நாகர் இனத்து நடனக் கலைஞர் வாழும் இடம்.
- மெய்திக்களது நடன நிகழ்ச்சிகள் நடக்குமிடமும், பாடலும் ஓதலும் சொல்லுமிடமும் ஒரு செழிப்பான நுட்பமான பண்பாடு பரவிய இடமாகும்.
- படைப்பின் தத்துவத்தை சடங்குகள் மூலம் நடத்தும் இடம் என்று கூறலாம்.
- 10ஆம் நூற்றாண்டில் வைணவ வழிபாடு சிறப்பாக கிருஷ்ண மதக்கோட்பாடு வேகமாகப் பரவியது.
- "வங்கக் கீர்த்தனை" முறைகளும் சைதன்னியரின் விசுவாசிகளுடைய இலக்கியமும் பாடலும் நன்றாகப் பரவியது.
- ராஜஸ்ரீ பாக்கிச்சந்திரா காலத்தில் சங்கீர்த்தனம், இரசம் என்பவற்றைச் சார்ந்த இசை, நடன மரபுகள் தோன்றின.
- இவரது அறிவும் இதயமும் ராதாகிருஷ்ண பக்தியில் தோய்ந்திருந்தன.
- இவர் ரஸத்தைப் பற்றி அறிந்ததும் அதற்கான ஆடை அணிகளைப் பெற்றதும் கனவிலேதான்.
- 1856இல் இருந்து 1886 வரையுள்ள காலகட்டத்தில் இன்னும் வலிவு பெற்றது.
- பக்தி ரஸங்களைப் பாடுவதும் சங்கீர்த்தனங்களில் 64 பாகங்களைப் பாடுவதும் அரச சபையில் முக்கிய நிகழ்ச்சிகள் ஆகின்றன.
- சங்கீர்த்தனம் என்பது நன்கு அமைக்கப்பட்ட நடனக் கோர்வை.
- மணிப்பூரில் எல்லா முக்கிய தினங்களிலும் இசையும் நடனமும் இடம்பெற்றது.
- மணிப்பூரில் வங்கதேச பாலா, அரிபாலா ஆகிய இரண்டும் வேகமாகப் பரவின.
- நடபாலா என்ற மென்மையும் அழகும் நிறைந்த புதுவகையான சங்கீர்த்தனை முறை தோன்றியது.
- வேகமும் எழுச்சியும் கொண்ட தாண்டவப் பகுதிகளும் இதில் உள்ளன.
- வைணவ கவிதை, இசை நடன மரபு செய்திகளின் வலிய பண்பாட்டின்மேல் இன்னுமொரு பாலம் போர்த்தியது போன்றதாகும்.
- மெய்த்தி, ஜசோய், ராஸ போன்ற பல மரபுகளை உள்ளடக்கிய இந்நடனத்தின் விநோதமான நிலைமையே ராஜநடனம் தோன்றக் காரணமாயிற்று.
- இசையில் 'இங்' என்ற மொழி அதிகம் பயன்படுத்தப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii)

இராகம்:ஆனந்தபைரவி தாளம்:ஆதி

| $l_4$ | 0 | 0 |
|---|---|---|
| தொம்,தக்,கதிகதிஜெம்,,;;ததகதிகதிஜெம்,<br>;;தத்,தக்,கதி<br>தொம்,தகதிகு கிடதகதரிகிட தொம்,<br>ஸகி தத்,த,ணா,தத்,த,ணா,தத்,த, | ஜெம்,தகதிகு கிடதகதரிகிடதொம்,தக்,கதி<br>ணா... | தத்,தளாங்குதகதிகுதகததிங்கிண<br>ஜெம்,தகதிகு கிடதகதரிகிடதொம்,தளாங்கு |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆ . தாளம் - ஆதி　　　　　　இராகம் - தன்யாசி**

**அனுபல்லவி முடிவடைய வரும் தீர்மானம்**

| $1_4$ | 0 | 0 |
|---|---|---|
| தீனுததத்,திமிதாஹதஜெம்,ததஜெம்,தஜெம்,தணம்,தஜெம்,தரும், | தஜெம்,கதிம்,ததிதுமிததகதிமி | தாஹதஜெம்,ததஜெம்,தஜெம்,தஜெம்,// |
| தணம்,தஜெம்,தரும்,தஜெம்,கதிம், ததீனுததத்,திமிதாஹதகஜெம்,தத | ஜெம்;தஜெம்;தரும்;கதிம்,தக | திநுமிததகதிமி தாஹதஜெம்,தத// |
| ஜெம்; தஜெம் ;தரும் ; கதிம் ,தக தீனுதிமிததகதாதிமிதகிடத | தகதா கிடத ஜொனுததகதா ஜொனு | ததிமித தகதாதீனுதிமித தக // |
| திமித கிடத தக கிடதஜொனுத தக ஜொனுததிமித தகதித்,தாம்தரிகி தொம், | ;; த,க,தித்,தாம் தரிகிடதொம், | ;; த,க,தித்,தாம் தரிகிடதொம் // |

(ii அ/ஆ – 10 புள்ளிகள்)

**அ. வர்ணத்தின் சரணஸ்வரம் (இராகம் :- ஆனந்தபைரவி தாளம்:-ஆதி)**

| $1_4$ | 0 | 0 |
|---|---|---|
| தகதிமி தகதிமி தகதிமி தகதிமி | தத்,தெய்,தாஹா | தக ததிங் கிணதொம்,// |
| தெய்யும் தத்த தெய்யும் தாம் தெய்யும் தத்த தெய்யும் தெய் தெய் | ,தெய் திதிதெய் தெய்தெய்,தெய் | திதி தெய் தெய் தெய்,தெய் திதி தெய் // |

**ஆ. வர்ணத்தின் சரணஸ்வரம் (இராகம் :- ஆனந்தபைரவி தாளம்:-ஆதி)**

| $1_4$ | 0 | 0 |
|---|---|---|
| த,க,தி,மி,தாதெய்,தெய்,த, | தித்,தெய்,தெய்,த, | தெய் தெய்,தெய்தெய் தெய்திதி தெய் // |
| தகிடதகிடதெய்யா தெய்யா தெய்யிதகிடத | கிட தெய்யா தெய்யா தெய்யி | திதி தெய்,திதி தெய்,திதிதெய் // |

(ii அ/ஆ – 05 புள்ளிகள்)

மொத்தம் = 5+10+5=20 புள்ளிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மணிப்புரி நடனத்திற்குப் பயன்படுத்தும் பக்கவாத்தியக் கருவிகளாவன: ஜாவோ, புல்லாங்குழல், மாண்திரா மிருதங்கம், சித்தார், சாரோத் என்பன. அண்மையில் ஹார்மோனியமும் சேர்க்கப்பட்டது.
- ஹிந்துஸ்தானி இசை வடிவம் பின்பற்றப்பட்டது.
- ஆடைகளில் கரப்பு அண்மையில் சேர்க்கப்பட்டது.
- குமுர் பாவாடை போல் உடுத்தப்படும். இதில் கண்ணாடித் துண்டு வைத்துத் தைத்திருக்கும்.
- குமிவுக்கு மேலாக முழங்கால் வரை அணிவது பசுவாஸ் எனப்படும் வெள்ளிழைகளால் பின்னப்பட்டிருக்கும்.
- கவல்மைதா என்பது பூணூல் போல் அணிவது. சித்திர வேலைப்பாடு கொண்டது.
- மைதாக் என்பது இடுப்பில் அணிவது. அங்கை என்பது உடலின் மேற்பாகத்தை மறைக்க அணிவது.
- வெல்வெற் துணியினால் சித்திர வேலைப்பாடு கொண்டு இது அமைந்திருக்கும்.
- நடிகர்கள் தலையின் உச்சியில் மயிரைச் சேர்த்து முடிவர். இது யூரா எனப்படும்.
- நெற்றியைச் சுற்றி கோனம் மெல்லிய துணியால் அணியப்படும்.
- மேகும்மி என்பது தலையையும் முகத்தையும் மறைக்கப் பயன்படுவது.
- சாச்சாவி என்பது மணமாகாத பெண்கள் இடுப்பில் அணியும் லுங்கி போன்றது.
- மணமானவர்கள் இதனை கழுத்தில் மெல்லிய உத்தரீயம் போல அணிவர்.
- ரவீந்திரநாத்தாகூரின் பங்களிப்பு சிறப்பிடம் பெறுகின்றது.
- தாண்டவ முறையைச் சேர்ந்த "புங்கசோலம்", "டோல்சி" என்ற மத்தளத்தை தட்டியபடி ஆண்களால் ஆடப்படும்.
- கைகளில் பெரிய தாளங்களைத் தட்டிய வண்ணம் ஆடுதல் "கர்த்தால் சோலம்" ஆகும்.

(5 x 4 = 20 புள்ளிகள்)

3. i) இந்து, நேத்ர, அக்னி, வேத, பாண, ருது, ரிஷி, வஸு, பிரம்ம, திசி, ருத்ர, ஆதித்ய

(06 புள்ளிகள்)

ii) 3ஆவது சக்கரம் - அக்னி

| தொடர் இல. | மேளகர்த்தா இராகங்கள் | ரி க த நி |
|---|---|---|
| 13 | காயகப்பிரியா | சுத்த, அந்தர, சுத்த, சுத்த |
| 14 | வகுளாபரணம் | சுத்த, அந்தர, சுத்த, கைசிகி |
| 15 | மாயாமாளவகௌளை | சுத்த, அந்தர, சுத்த, காகலி |
| 16 | சக்ரவாகம் | சுத்த, அந்தர, சதுஸ்ருதி, கைசிகி |
| 17 | ஸுர்யகாந்தம் | சுத்த, அந்தர, சதுஸ்ருதி, காகலி |
| 18 | ஹடகாம்பரி | சுத்த, அந்தர, ஷட்சுருதி, காகலி |

6ஆவது சக்கரம் - ருது

| தொடர் இல. | மேளகர்த்தா இராகங்கள் | ரிகதநி |
|---|---|---|
| 31 | யாகப்பிரியா | ஷட்ச்ருதி, அந்தர, சுத்த, சுத்த |
| 32 | ராகவர்த்தினி | ஷட்ச்ருதி, அந்தர, சுத்த, கைசிகி |
| 33 | காங்கேயபூஷணி | ஷட்ச்ருதி, அந்தர, சுத்த, காகலி |
| 34 | வாகதீஸ்வரி | ஷட்ச்ருதி, அந்தர, சதுஸ்ருதி,கைசிகி |
| 35 | சூலினி | ஷட்ச்ருதி, அந்தர, சதுஸ்ருதி, காகலி |
| 36 | சலநாட | ஷட்ச்ருதி, அந்தர, ஷட்சுருதி, காகலி |

இவற்றுடன் ஸட்ஜம், சுத்தமத்திமம், பஞ்சமம் ஆகிய ஸ்வரங்கள் அடங்குகின்றன.

(07 புள்ளிகள்)

(மொத்தம் 6 + 7 + 7 = 20 புள்ளிகள்)

## பகுதி - II

4. இலங்கையில் பாடசாலைகளும் உயர் கல்வி நிறுவனங்களும் பரதக்கலை வளர்ச்சிக்கு ஆற்றிவரும் பங்களிப்பு

- 1972ஆம் ஆண்டு பாடசாலைக் கலைத்திட்டத்தில் பரதக்கலை ஒரு பாடமாக சேர்த்துக் கொள்ளப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- செய்முறையாகவும், அறிமுறையாகவும் கற்பிக்கப்படுவதன் ஊடாக பரதக்கலை வளர்க்கப்படுகின்றது.
- ஆசிரியர்கள் கற்றல், கற்பித்தலில் புதிய நுட்பங்களை மேற்கொள்வதன் மூலமாக கலை வளர்க்கப் படுகின்றது.
- போட்டிகளில் பங்குபற்றுவதன் மூலமாக கலை ஆர்வம் தூண்டப்பட்டு பரதக்கலை வளர்க்கப் படுகின்றது.
- உயர்கல்வி நிறுவனங்களான பல்கலைக்கழகங்கள், ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள், தேசிய கல்விக் கல்லூரிகள் தேசிய கல்வி நிறுவகம் செய்முறை ரீதியாகவும், அறிமுறை ரீதியாகவும் பரதக்கலை நுட்பங்களைப் பயிற்றுவித்து கலை வளர்ச்சிக்கு பங்காற்றுகின்றது.
- எதிர்காலத்துக்கு சிறந்த பரதக்கலை விற்பன்னர்களை இந்நிறுவனங்கள் உருவாக்குகின்றது.
- நுண்கலைமாணிகளையும் இந்நிறுவனங்கள் உருவாக்குகின்றன.
- விரிவுரையாளர் நியமனங்களை வழங்கி தொழிலுக்கு வழிகாட்டுதன் மூலமான பரதக்கலையினை வளர்க்கின்றது.
- நிபுணத்துவம் வாய்ந்த கலைஞர்களை உருவாக்குவதன் ஊடாக பரதக்கலையினை வளர்க்க உதவுகின்றது.
- அவைகாற்றுகைகள் மூலமாக பரதக்கலை நுட்பங்களை வெளிக்கொணர்வதன் மூலம் கலையை வளர்க்க உதவுகின்றது.
- தேடிக்கற்றல் மூலமாக புதிய கண்டுபிடிப்புக்களையும், ஆராய்ச்சிகளையும் முன்வைத்து பரதக்கலை வளர்ச்சிக்கு பங்காற்றுகின்றது.
- வெளிநாடுகளிலிருந்து இத்துறையில் தேர்ச்சி பெற்றவர்களை வரவழைத்து செயலமர்வுகள் நடாத்துவதன் மூலமாக பரதக்கலை வளர்ச்சிக்கு உயர்கல்வி நிறுவனங்கள் பங்களிப்புச் செய்கின்றன.
- ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டு தொழில் வழிகாட்டல் இடம்பெறுகின்றது.

(20 புள்ளிகள்)

5. 1. **ஏழு தாண்டவங்கள்**

ஐந்தொழில்களைச் செய்வதற்காக சிவன் ஏழு வகையான தாண்டவங்களை ஆடினார்.

1. **படைத்தல் தாண்டவம்:** காளி தாண்டவம், முனி தாண்டவம் எனவும் அழைக்கப்படுகின்றது. முக்குணங்களில் அமிழ்ந்துள்ள ஆன்மாவிற்கு இறைவன் தனு, புவன, கரண போகங்களைப் படைத்துக் கொடுக்கிறார். இத்தாண்டவம் திருநெல்வேலி தாமிர சபையில் நடைபெறுகின்றது.
2. (i) **காத்தல் தாண்டவம் (துன்பம்) :** இதனை கௌரி தாண்டவம் என்றும் கூறுவர். மக்கட் செல்வம், கல்விச் செல்வம் வழங்கி காத்தற் தொழிலைச் செய்வது இத்தாண்டவமாகும். பாண்டி நாட்டுத் திருப்புத்தூரிலுள்ள சிற்சபையில் இது நடைபெறுகின்றது.
   (ii) **காத்தல் தாண்டவம் (இன்பம்) :** இதனைச் சந்தியா தாண்டவம் என்றும் கூறுவர். செல்வம், அரசு, புகழ் என்பன இத்தாண்டவத்தின் பயன் என்று காரணாகமம் கூறுகின்றது. மதுரை வெள்ளியம்பலத்தில் (ரஜித சபை) நடைபெறுகின்றது)
3. **அழித்தல் தாண்டவம :** இத்தாண்டவ திருவுருவத்தில் கைகளில் துடியும் தீச்சுடரும் மாறியிருக்கும். ஆன்மாக்களை இளைப்பாற்றும் செயலைக் குறிக்கும். இச்சங்கார தாண்டவம் நள்ளிரவில் சுடலையில் இடம்பெறும்.
4. **மறைத்தல் தாண்டவம் :** உயிர்களுக்கு இருவினை ஒப்பும் மலபரிபாகமும் ஏற்படுத்த இத்தாண்டவம் ஆடப்படுகிறது. திரிபுர தாண்டவம் என்றும் பெயர். திருக்குற்றால சித்ர சபையில் இடம்பெறுகிறது.
5. **அருளல் தாண்டவம் :** காளி தாண்டவம், ஊத்துவ தாண்டவம், சண்ட தாண்டவம், அனுக்கிரக தாண்டவம் எனவும் அழைக்கப்படுகிறது. மும்மலங்களிலிருந்து ஆன்மாவை விடுவித்து அதனைத் தூய்மையாகவும், ஒளியும் உடையதாகச் செய்வது இத்தாண்டவமாகும். திருவாலங்காடு இரத்தின சபையில் நடைபெறுகிறது.
6. **ஆனந்த தாண்டவம் :** ஐந்தொழில்களை ஒருங்கே காட்டும் தாண்டவம் இது. சிதம்பரத்தின் பொன்னம்பலத்தில் (கனகசபையில்) இடம்பெறுகிறது.

(04. புள்ளிகள்)

2. **தப்பட்டை**

ஒருவகை பறை - பிரதேச வேறுபாடுகளுக்கமைய இதன் பெயரும் உருவமும் சிறிதளவு வேறுபட்டுக் காணப்படுகிறது. ஒரு மரத்துண்டை அல்லது உலோகத்துண்டை வட்டமாக வளைத்து கன்றுக் குட்டியின் தோலைப்போர்த்தி உருவாக்குவர். தோலைப் போர்த்தும் விதமும் பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபடும். தோலை ஒரே சீராக வளையத்தின் மீது இழுத்துக் கட்டி இரும்பு ஆணிகளை நெருக்கமாக அடித்திருப்பார்கள். பறையைக் கழுத்திலிருந்து தொங்கவிட்டுக் கொண்டு கையினாலோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு குச்சிகளினாலோ அடிப்பார்கள். பழங்குடி மக்கள் நாட்டுப்புற மக்களால் பயன்படுத்தப்படும் DAFF வகையைச் சேர்ந்த பறைகளில் ஒன்று. தப்பு என்ற தோற்கருவி ஒரு முகக்கருவி, சேலம், தஞ்சாவூர் இராமநாதபுரம் பகுதிகளில் அதிகமாகக் காணப்படுகிறது. விவசாயிகளே பெரும்பாலும் இதனைப் பயன்படுத்துகின்றனர். ஒரு குச்சி 1/4' அளவும் மற்றையது 3/4' நீளமும் உடையது. இவை சின்னக்குச்சி, பெரிய குச்சி என அழைக்கப்படுகின்றன. இது விலாப்பகுதியில் இடது கரத்தால் இடுக்கி வைத்துக்கொண்டு வாசிக்கப்படுகின்றது. தேரோட்டம், சிறு தெய்வ வழிபாடு ஆகியவற்றில் இக்கருவி பயன்படுத்தப்படுகிறது. வடஆற்காடு, தென் ஆற்காடு ஈரோடு முதலான இடங்களில் தப்பு வாசித்து வழிபடுதல் தப்பு சேவை எனப்படுகிறது. காளியம்மன், மாரியம்மன் போன்ற தெய்வங்களுக்குப் பாற்குடம் எடுக்கும்போது முன்னால் தப்பு ஒலித்தபடி செல்வார்கள். தேர் ஓடுவது, நிற்பது, தேர்க்கட்டை போட்டு நிறுத்தப்படுவது, கட்டை எடுக்கப்பட்டு தேர் இழுக்கப் படுவது இவற்றைத் தப்பு ஒலியே தீர்மானிக்கிறது. இலங்கையில் தப்பு என இது வழங்கப்படுகிறது. இலங்கையில் மலையகப் பகுதியில் இடம்பெறும் காமன் கூத்தில் பிரதான இசைக்கருவியாக இது பயன்படுகிறது.

3. தலைக்கோலி

பகை மன்னர்களை வென்று அம்மன்னர்களின் வெண்கொற்றக் குடையின் காம்பில் பலவாகிய நவமணிகளைப் பதித்து உயரிய பொன்னால் இடையிடையே வைத்து அக்கோலை இந்திரனின் மகனான சயந்தன் எனக் கருதிக் கோயிலில் அதனை பல புண்ணிய நதிகளிலிருந்து கொண்டு வந்த நீரினால் அபிஷேகித்து முரசுகள் ஒலிக்க ஐம்பெரும் குழுவினர் சூழ ஒரு பல்லக்கில் வைத்து ஊர்வலமாக கொண்டுவந்து நடனத்தில் தலைசிறந்தவர்களுக்குத் தருதல் மரபு. பொதிகை மலை போன்ற புனித இடங்களில் வளரும் மூங்கில் கழிகளால் இக்கோல் செய்யப்பட்டு கணுவுக்கு கணு ஒரு சாண் இடைவெளி அமைக்கப்படும். ஏழு சாண் நீளமுடையது. பொன் தகட்டினால் போர்த்தப்பட்டு நவரத்தினங்கள் பதித்து உருவாக்கப்படும் என்றும் கூறப்படுகின்றது. இக்கோல் நாட்டியத்தில் சிறந்த கலைஞர்களுக்கு வழங்கப்பட்டு "தலைக்கோலி" என்ற பட்டம் கொடுத்து கௌரவித்தல் மரபு. ஐந்நூற்றுவத் தலைக்கோலி, வீராபரணத் தலைக்கோலி போன்ற பட்டங்களும் நடனமங்கையருக்கும் வழங்கப்பட்டது. ஞானசம்பந்தருடைய பாடல்களுக்கு அபிநயம் செய்த நடனமங்கையருக்கு 'சிவஞான சம்பந்த தலைக்கோலி' என்ற பட்டம் வழங்கப்பட்டது.

(04 புள்ளிகள்)

4. உத்ப்ளவனபேதம்

சுலோகம் : அலகம் கர்ததரி ஷாஸ்லோத்ப்ளவனம் மோடிதம் ததா /
க்ருபாலக மிதிக்யாகும் பஞ்சதோத்ப்ளவனம் புதைஹி //

கருத்து : அலகம் கர்த்தரி அஷ்வோத் ப்ளவனம் மோடிதம் க்ருகபாலகம்

செய்முறை :

அ. அலகம் : இரு கைகளிலும் சிகர முத்திரைகளை மார்புக்கு முன்னே பிடித்து அரை மண்டியில் அமர்ந்தவாறே மேலே எழும்பிக் குதித்துக் கைகளைத் தலைக்கு மேலாக இரு கைகளையும் வட்டமாக்கிக் கொண்டு ஆரம்ப நிலைக்குக் கொண்டு வரல்.

ஆ. கர்த்தரி : கர்த்தரி அடவு முழுவதையும் ஒருமுறை செய்தல்.

இ. அஷ்வோத்ப்ளவனம்: குதிரை பாய்வது போல் கால்களை மடித்து முன்னால் பாய்தல். (துறங்கே பதாக விநியோகத்தில் காட்டுவது போல செய்ய வேண்டும். இடது கை இடுப்பில் வைத்திருக்க வேண்டும்.)

ஈ. மோடிதம் : "தத் தெய் தாம்" என்ற அடவின் இறுதிப்பகுதி பாய்வது போல பாய்தல் கைகளும் அவ்வாறே இரு பக்கங்களுக்கும் செய்தல் வேண்டும்.

உ. க்ருபாலகம்: "உத்ப்ளவனம்" செய்வதுபோல் பாய்தல். (சுலோகம் மட்டும் - 02 புள்ளிகள்)

(பொது விளக்கம் - 02 புள்ளிகள்)

(கருத்து விளக்கம் 04 புள்ளிகள்)

5. ஆய்ச்சியர் குரவை:

முல்லை நில மக்களால் ஆடப்படுவது இது. முல்லைநில தெய்வமான திருமால் முல்லைநில மக்கள் இடையர்கள் தமக்கு நேரும் துன்பங்களிலிருந்து தம்மை விடுவிக்க வேண்டித் திருமாலை நோக்கி ஆடும் கூத்து ஆய்ச்சியர் குரவை ஆகும்.

- இடையர்கள் தமக்கு நேர்ந்த துன்பங்களை வரிசைப்படுத்தி உரைப்பது உரைப்பாட்டு மடையில் தொடங்குவதாகும்.
- துன்பங்களை நீக்க திருமாலுக்குக் கூத்தினை நிகழ்த்த முடிவு செய்யும் கருப்பம் எனப்படும் பகுதி அடுத்து அமையும்.
- அடுத்து கூத்தினைச் செய்யும் பெண்கள் அழைக்கப்படும் கொலு இடம்பெறும்.
- கூத்தை ஆரம்பிக்கும் பெண்களை முறைப்பட நிறுத்தல் என்னும் எடுத்துக்காட்டு அமையும்.
- உரிய பாடல்கள் பாடப்பட்டு பெண்கள் கூத்து பாடுதல் அடுத்து இடம்பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒன்றன் பகுதி, உள்வரிவாழ்த்து, முன்னிலை பரவல், படர்க்கைப் பரவல் என்ற பகுதிகளை அமைத்து திருமாலின் புகழைப்பாடி அவன் அருள் வேண்டுவதாய் ஆடல் அமையும். இவை அனைத்தும் இன்று நாட்டிய நாடகத்துள் இருப்பதைக் காணலாம்.
- மாயவனின் குழலூதும் சிறப்பிலிருந்து தொடங்கி மன்னன் புகழ்பாடி முடிகிறது.
- இது சாத்வதி விருத்தியில் அடங்கும்.
- ஏழிசைப் பெயர்களால் குரவை ஆடும் 7 பெண்களும் வர்ணிக்கப்படுகின்றனர்.
- இவர்கள் ஆடும் நிலை சமநிலையாகவும் கர்க்கடக முத்திரை பிடித்து முல்லைப் பண்பாடி ஆடப்படும்.
- சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவை ஆடப்பட்டது.

(04 புள்ளிகள்)

மொத்தம் 5 x 4 = 20 புள்ளிகள்)

6.
- கலைமணம் ஊட்டப்பட்ட தஞ்சை மாவட்டத்திலே கும்பகோணம் என்னும் ஊரிலுள்ள சிறிய கிராமமாகிய பந்தனை நல்லூரிலே மரபு வழி வந்த கலைக் குடும்பத்தில் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் 1869 ஆம் ஆண்டு பிறந்தார்.
- இவரது தந்தையார் பெயர் சூரியமூர்த்தி - சிறந்த இசை வல்லுநர்
- இவரது தாயார் 19ஆம் நூற்றாண்டிலே புகழ் பூத்த "நாட்டிய கலைமணிகள்" என அழைக்கப்பட்ட தஞ்சை நால்வருள் ஒருவராகிய பொன்னையாவின் புத்திரியாவார்.
- தாய், தந்தை வழியிலும் பிரபலம் வாய்ந்த கலைக்குடும்பத்தில் பிறந்தவராதலால் இவர்க்கு இயற்கையாகவே கலை ஞானம் அமைந்திருந்தது.
- குழந்தையாகவே இருந்தபோதே தந்தையாரை இழந்த இவரை இவரது மைத்துனரான குமாரசுவாமி நட்டுவனார் வளர்த்து இவருக்கு இசை, நடனம் ஆகிய கலைகளைக் கற்பித்தார்.
- தமிழ் மொழியை இராமலிங்க வாத்தியாரிடமும், தெலுங்கு மொழியை வேங்கடமகி வாத்தியாரிடமும், சமஸ்கிருத மொழியை ஆடுதுறை அறிஞர் குப்புசுவாமி கனபாடிகளிடமும் இருந்து கற்றுக் கொண்டார். இவரது 12ஆவது வயதிலே பரத நாட்டியக் கலையைத் தஞ்சாவூரிலே சபாபதி நட்டுவனாரிடமும், மாமனார் மகாதேவ நட்டுவனாரிடமும் முறையாகப் பயின்றார்.
- சீர்காழி நாராயண சாமிப்பிள்ளையிடம் பிடிலையும் கற்றுத் தேர்ச்சி பெற்றார்.
- மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் இளமையிலேயே இசை வல்லுநர்களாவும், வயலின் வித்து வானாகவும், நடனக் கலையில் திறமையுடையவராகவும் விளங்கினார்.
- இவர் பல ஜதிஸ்வரங்களையும் பதவர்ணங்களையும் நாட்டியத்திற்காக இயற்றிக் கொடுத்தார்.
- இவர் குமாரசுவாமி நட்டுவனாரிடம் பரத நாட்டியத்தை முறைப்படி பயின்று செய்முறையிலும், அறிமுறையிலும் தேர்ச்சி பெற்றார்.
- இவரிடம் பரதநாட்டியமும் நட்டுவாங்கமும் பயின்றவர்கள் பலர் உள்ளனர்.
- இவர் மிகப் பொருத்தமான அடவுகளைக் கொண்டு தீர்மானங்களை உருவாக்குவதில் நிகரற்றவர்.
- அடையாறு கலாஷேத்திரத்தை உருவாக்குவதில் திருவாட்டி ருக்மணிதேவி அம்மையாருக்குப் பக்கபலமாக நின்று அக்கலைக் கோயிலைக் கட்டியெழுப்பினார்.
- இவர் இந்தியாவில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் பரத நாட்டியக் கலையைப் பிரபல்யப்படுத்தினார்.
- இவரது முயற்சியால் அமெரிக்கா, பிரித்தானியா நாட்டைச் சேர்ந்தவர்கள் பலர் இக்கலை பற்றி அறிந்து கொள்ளப் பேருக்கம் கொண்டனர்.
- நாட்டியத்திற்கான இசை உருப்படிகளைக் குறிப்பிட்டு ஜதீஸ்வரம், வர்ணம், பதம் முதலியவற்றை இயற்றினார்.
- தமிழ் மொழியில் முப்பதுக்கும் மேற்பட்ட கீர்த்தனைகளை இயற்றியுள்ளார்.
- இவரது ஆக்கங்களில் வாஸஸ்பதி, தோடி ஆகிய இராகங்களில் அமைந்த வர்ணங்களும் பைரவி, தோடி ஆகிய இராகங்களில் அமைந்த கிருதிகளும் குறிப்பிடத்தக்கவை.
- பரதநாட்டிய மரபிலே முதன் முதலாகக் கீர்த்தனைக்கு நடனம் அமைத்த பெருமை இவரையே சாரும்.
- 1943ஆம் ஆண்டிலே எழும்பூர் ஜகந்நாதசபா இவருக்கு "நாட்டிய கலாநிதி" என்னும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது.
- வாழ்நாளில் இறுதிக்காலம் வரை எழும்பூர் லவிதகலை மன்றத்தில் கௌரவ முதல்வராகவும் இவர் விளங்கினார்.
- அன்று தமிழ்க் கோவில்களிலே நடைபெற்ற நித்திய நைமித்தியக் கிரியைகளிலே நடனம் "நிருத்தோபசாரமாக" இடம்பெற வழிகாட்டினார்.
- "நிருத்தோபசாரம் இறையார்ப்பணமாக நிகழ்த்தப்பட்ட ஷோடசோபசாரங்களிலே" ஒன்றாக விளங்க உதவினார்.
- துரதிஷ்டவசமாக நடனம் கோயில்களிலே ஆடுவது சட்டபூர்வமாகத் தடைசெய்யப்பட்டதால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடனம் இடம்பெற வேண்டிய சந்தர்ப்பத்தில் வாக்கினால் மட்டுமே "நிருத்யம் கர்ஷயாமி" எனக் கூறி பூஜையை நிறைவு செய்தனர்.

- இதனை மீண்டும் கோவிற் கலையாக்குவதற்கு மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களும், பேராசிரியர் சாம்பமூர்த்தியும் முழு மூச்சுடன் ஈடுபட்டனர்.
- அவர்களது முயற்சியும் நிறைவேறாமல் போய்விட்டது.
- பரத நாட்டிய மறுமலர்ச்சிக்குப் பின்னர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களிடம் நடனம் கற்பதற்கு அநேக மாணவர்கள் உள்ளூரிலும் வெளியூரிலும் இருந்து வந்து குவிந்த வண்ணமிருந்தனர்.
- வாலிப வயதில் தன்னை அணுகாது தள்ளாத வயதில் என் உயிரை வாங்குகின்றார்களே என அங்கலாய்த்தார்.
- "கலாஷேத்ரா" கவின்கலைக் கல்லூரியில் இவருடைய "பந்தனை நல்லூர்" பாணியிலே நடனம் கற்பிக்கப்பட்டு வருகிறது.
- யாழ் பல்கலைக்கழகத்தின் பரத நாட்டியப் பிரிவிலும் இவரது பாணியிலே நடனம் கற்பிக்கப்பட்டு வருகிறது.
- சொக்கலிங்கம் பிள்ளை அவர்கள் தனது குருவும் மாமனுமாகிய மீனாட்சிசுந்தரம் பிள்ளையுடன் 40 ஆண்டு காலம் கலைப்பணி புரிந்தார்.
- பந்தணை நல்லூர் தங்கச்சி அம்மா, பந்தணை நல்லூர் ஜெயலட்சுமி, இராம்கோபால், ஸ்ரீமதி ருக்மணி அருண்டேல், மிருணாளினி சாராபாய், சாந்தராவ், தாராசௌத்ரி, பெங்களூர் கிருஷ்ணராவ், சந்திரபாகாதேவி ஆகியோர் இவரிடம் நடனம் பயின்றோரில் குறிப்பிடத்தக்கவர்கள்.
- திருவனப்புத்தூர் சுவாமிநாதப்பிள்ளை, சொக்கலிங்கம் பிள்ளை, கந்தப்ப நட்டுவனார் ஆகியோர் இவரிடம் நடனம் பயின்றவர்கள்.
- சங்கீத வித்துவான் வைத்தியநாத ஐயர் இவரிடம் இசை பயின்றவர்.
- தியாகராஜ சுவாமிகளின் பஞ்ச ரத்ன கீர்த்தனைகளுக்கும் வேறு தான வர்ணங்களுக்கும் பல கீர்த்தனைகளுக்கும் நடனம் அமைத்தார்.
- நவசந்தி நாட்டியங்கள் வழக்கொழிந்து போகாதிருக்க பெங்களூர் பத்மலோயினி திருவிடை மருதூர் லட்சுமஜி ராஜ்யம் ஆகியோருக்கு கற்பித்து சென்னை தமிழ் சங்கத்திலும் வேறு பல இடங்களிலும் அரங்கேற்றினார்.
- சாந்த குணமும் எளிமையான பண்பும் சிவபக்தியும் கொண்ட இவர் இடுப்பில் நாலுமுழ வேட்டியும் தோளில் சால்வையும் அணிவார். தாத்தா என அன்புடன் அழைக்கப்பட்ட இவரிடம் பலர் நாட்டியத்தில் தமக்குள்ள சந்தோகங்களை தீர்த்துக் கொண்டனர்.
- பந்தணை நல்லூர் பிரகதீஸ்வரர் ஆலயத்துக்கு தினமும் சென்று வழிபடுவார்.
- அன்னதானம் வித்தியாதானம் செய்வதில் சிறந்தவர்.
- வாய்ப்பாட்டு இசை, வாத்திய இசை ஆகியவற்றிலும் தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு ஆகிய மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தார்.
- நடனத்தின் செய்முறை, அறிமுறை இரண்டிலும் சிறந்து விளங்கினார்.
- நிருத்தப் பகுதிகளில் இவர் விறுவிறுப்பான அடவுக்கோவைகள் ஜதிகள் ஆகியவற்றை நுணுக்கமான வேலைப்பாட்டுடன் சேர்த்துக் கொள்வார்.
- இவரது அபிநயம் நாட்டிய தர்மியமாகவே அமைந்து காணப்பட்டது.
- இப்பெரும் கலைஞர் 1955ஆம் ஆண்டு இறையடி சேர்ந்தார். (20 புள்ளிகள்)

7. பல்லவர் கால பக்தி இயக்கங்கள் நாட்டியக்கலையில் தாக்கம் செலுத்திய விதம்.
   - பல்லவர் காலம் தமிழ் இலக்கிய வரலாற்றிலே பக்திக் காலமாகப் போற்றப்படுகிறது.
   - இறைவனிடத்துக் கொண்ட ஆழ்ந்த அன்பினை நாயன்மார்களும் ஆழ்வார்களும் தமது பண்ணோடமைந்த திருப்பாடல்களிலே வெளிப்படுத்தினர்.
   - இறைவன் திருவருளை எண்ணி நெக்குருகி, நெஞ்சுருகிப் பாடிய தேவதரங்கள், திருவாசகங்கள், நாலாயிரம் திவ்விய பிரபந்தங்களின் பெருமை அளவிடற்கரியது.
   - இவ்வாறான பக்தி இயக்கதிலேதான் ஆடலும் பாடலும் இறைவனைக் போற்றி, முக்தியின்ப பேறடைவதற்குச் சிறந்த சாதனங்களாகக் கருதப்பட்டன.
   - பக்தி இயக்கங்கள் எனும்பொழுது சைவசமய தேவார திருவாசகங்களின் மூலம் எவ்வாறு நடனம் வளர்க்கப்பட்டதென்றும் ஆழ்வார்களின் பாசுரங்களின் மூலம் நடனம் வளர்க்கப்பட்டவை பற்றியும் விளக்கப்பட வேண்டும்.
   - பல்லவ மன்னர்கள் தொடக்க காலத்தில் சமண சமயத்தை ஆதரித்தவர்கள் என்றாலும் மகேந்திரன் என்னும் மன்னன் காலம் முதல் சைவம், வைஷ்ணவம் எனும் இரு சமயங்களும் மேலோங்கின.
   - இக்காலத்தில் கோயில்கள் பல கட்டப்பட்டு முறையான வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டமையினால் தமிழிசையும் நடனமும் கோயில்களைச் சென்றடைந்தன.
   - நாயன்மார்களும், ஆழ்வார்களும் பாடிய பாடல்கள் அனைத்தும் கோயில்களில் வழிபாட்டுப் பாடல்களாக மாற்றம் பெற்றன. இதனால் நடனமும் கோயில் வழிபாட்டில் ஓர் அங்கமாக மாற்றம் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இதிகாசம், புராணம், தலபுராணம் கூறிய இறைசெய்திகள் கலைகளில் தாக்கத்தை ஏற்படுத்தின. அதனால் நடனத்தின் அகவடிவம் முழுவதும் இறைவனைப் புகழ்வதாய் அவனது ஆற்றல்களைக் கூறுவதாய் அமைகின்றது.
- சங்ககாலத்தில் மன்னனைப் புகழ்வதாய் இருந்த நடனம் பல்லவர் காலப் பக்தி இலக்கியங்களின் செல்வாக்கினால் நடனம் கோயில்களில் இறைவனைப் புகழ்வதாய், இறைவனின் வீரத்தை எடுத்தியம்பு வதாயும் செயற்படத் தொடங்கியது.
- பக்தி இயக்கங்களின் செல்வாக்கினால் இறைவன் அரக்கர்களை வென்ற வெற்றி இறைவனின் வீதி உலா, இறைவனின் திருஓலம் எனும் செயற்பாடுகளில் நடனம் ஆடப்பட்டது.
- கோயில் நடனம் இடம்பெறத் தொடங்கியமையிலிருந்து வடமொழிப் புராணச் செல்வாக்கு வளரத் தலைப்பட்டது.
- சைவ சமயத்தில் கோவில்களில் நடனப்பணி செய்து வந்த நடனமாதர்களையே தேவாரங்களில் "தேனோர் மொழியார்", "பண்ணின் நேர்மொழி மங்கை பலர்", "சேயிழையார்", "நன்நடனமாதர்", "மடவார்", "மையார் தடல் கண்ணியர்" எனப் பலவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.
- தேவாரங்களில் உதாரணமாக "அரங்கிடை நூலறிவாளர் அறியப்படாதோர் கூத்து" என நாவுக்கரசரும் "காந்தாரம் இசையமைத்துக் காரிகையார் பண்பாட கவினார் வீதி தேம் தேம் என்று அரங்கேறிச் சேயிழையா நடனமாடும் திருவையாறே", "ஆடுவார் காடரங்காக" எனச் சம்பந்தரும் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கவை.
- மாணிக்கவாசகர் அருளிச் செய்த திருவெம்பாவைப் பாடல்கள் அனைத்தும் நாடக முறையிலும், பாவைப் பாடல்கள் பாவ வெளிப்பாட்டினை நன்கு புலப்படுத்தும் பாடல்களாய் உள்ளன.
- திருவாசகத்துள் திருவம்மானை, பொற்சுண்ணம், திருக்கோத்தும்பி, திருத்தெள்ளேணம், திருச்சாழல், திருப்பூவல்லி, திருவுந்தியார், திருத்தோணோக்கம், திருப்பொன்னூஞ்சல் எனும் தலைப்புகளிலுள்ள பாடல்கள் நடன வடிவத்துக்கு உரியவைகளே.
- வைணவ இலக்கியமான நாலாயிர திவ்விய பிரபந்தத்திலும் நடனத்திற்கு முக்கிய இடம் அளிக்கப் படுகின்றது.
- அரையர் சேவை என்பது வைணவ மத புராணங்களைச் சார்ந்தும் திருமால் எடுத்த பத்து அவதாரங்களை மையப்படுத்தியும் அமைந்துள்ளன.
- வைணவ இலக்கியங்களில் திருமாலின் பெருமைகளை அறிந்துகொள்ளும் வகையில் நடனமாடுவோர் பட்டுத் துணிகளால் தங்களை ஒப்பனை செய்து உடல் முழுவதும் மலர்மாலை சூடி, சித்திர வேலைப்பாடமைந்த தலை அணி அணிந்து ஆடுவார்கள்.
- வீணாதார மூர்த்தி, டமருகஹஸ்தன், கண்ணன், வேணுகோபாலனாகக் குறிப்பிடப்படுகின்றது.
- இவ்வாறாக பல்லவர்கால பக்தி இலக்கியங்கள் நாட்டியக் கலை வளர்ச்சியில் தாக்கம் செலுத்தியது.

(20 புள்ளிகள்)

8. நவீன தொடர்புசாதனங்கள், தொழினுட்பங்கள் என்பன பரதநாட்டியக்கலை ஆற்றுகையில் தரும் பங்களிப்பு

- மாறிவரும் உலகிற்கேற்ப நாட்டியக்கலை உலகெங்கும் ஆற்றுகை செய்யப்படும் முறையை அறிய முடிகிறது.
- நவீன தொடர்புச்சாதனங்கள் உலகின் அனைத்து இடங்களிலும் நடைபெறும் நடன ஆற்றுகைகளை உடனடியாக பார்க்கும் வாய்ப்பைத் தருகின்றன.
- புதிய சிந்தனைகளை வளர்க்க இன்றைய நவீன தொடர்புச் சாதனங்கள் உதவுகின்றன.
- பல்வேறு ஆடல் வகைகளை பார்த்து ஒப்பிட்டு அணுகி அறியும் ஆற்றலைத் தருகின்றன.
- இணையத்தளங்களை பார்வையிடுவதால் ஆற்றுகைக் கலைஞர்கள் வேகமான உலகிற்கேற்ற வகையில் தம்மை வளர்க்க முடிகிறது.
- மேற்தலை எறியி (O.H.P), பல்லூடக எறியி (*Multi Media*) முதலானவற்றைப் பயன்படுத்தி பரதநாட்டியத்தின் அடிப்படை அம்சங்களை பயிற்சி செய்து சிறந்த ஆற்றுகையை வழங்க முடிகின்றது.
- நவீன தொழினுட்பங்களை ஒலி, ஒளி, அரங்க அமைப்பு முதலியவற்றில் பயன்படுத்துவதால் நாட்டிய ஆற்றுகை மெருகு பெறுகின்றது.
- இசையமைப்பு பக்க வாத்தியங்களின் பங்கு என்பவற்றை நடன ஆற்றுகைகளுக்கேற்ப வழங்குவதற்கு நவீன தொழினுட்பங்கள் உதவுகின்றன.

(20 புள்ளிகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

**Department of Examinations, Sri Lanka**

**53 T I**

இலங்கைப்பரீட்சைத் திணைக்களம்

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2013 ஓகஸ்ட்**
**General Certificate of Education (Adv. Level) Examination, August 2013**

பரதநாட்டியம் I
**Baratha Dancing I**

இரண்டு மணித்தியாலம்
**Two hours**

## பரதநாட்டியம் I

கவனிக்க:
* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.
* விடைத்தாளின் பிறபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்க.
* 1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (X) இடுவதன் மூலம் காட்டுக.

1. ப்ரமரியினை பிரதான அசைவாகக் கொண்ட நடனம்
   1) கதகளி 2) பரநாட்டியம் 3) ஒடிஸி
   4) கதக் 5) மோகினியாட்டம்

2. ஆயத நிலையிலிருந்து இரு கரங்களையும் டோலமாக தோளின் மேல் தூக்கும் கரணம்
   1) வர்த்திதம் 2) உன்மத்தம்
   3) விருச்சிகரேசிதம் 4) கிருத்ராவலீனகம்
   5) கருடபுலுதகம்

3. மோகினியாட்டம் எவ்வரசர் காலத்தில் மிகுந்த செல்வாக்குப் பெற்றுப் புகழடைந்தது?
   1) சரபோஜி 2) சுவாதித்திருநாள்
   3) சிவாஜி 4) துளஜா
   5) சாமராஜேந்திரன்

4. நீர் நிரப்பிய செம்பை தலையில் தாங்கிக் கொண்டு தாம்பாளத்தின் விளிம்பில் நின்று தாளப்பிரஸ்தாரங்களை செய்து ஆடுவது,
   1) கொல்லகலாபம் 2) பாமகலாபம்
   3) பாலகோபாலதரங்கம் 4) லைகரோபா
   5) பாரிஜாதஹரணம்

5. புங்சோலோம் ஆடும்போது வாசிக்கப்படும் தோல் வாத்தியம்,
   1) டோல்கி 2) தப்லா 3) செண்டை 4) தம்மட்டம 5) கட்டபெர

6. மேடையில் நடனக் கலைஞரின் வலது பக்க முன் மூலையில் பக்கவாத்தியக் கலைஞர்கள் அமர்ந்து பாடுகிற மரபை முதன்முதலாக அறிமுகப்படுத்தியவர்,
   1) பாலசரஸ்வதி 2) ருக்மிணிதேவி அருண்டேல்
   3) ஈ. கிருஷ்ணையர் 4) மீனாட்சி சுந்தரம்பிள்ளை
   5) கௌரி அம்மாள்

7. கதக் நடனத்தில் லய அமைப்பு வகைகளில் முதன்மையாக உள்ளது,
   1) தாட் 2) ஆமத் 3) சலாமி 4) தத்கார் 5) கவித்

8. தனது பெரும் பொழுதை நடனக் கலைக்கென்றே செலவழித்தவர்,
   1) சிம்மவிஷ்ணு 2) மகேந்திரவர்மன்
   3) இராஜசிங்கன் 4) நந்திவர்மன்
   5) மகேந்திரவிக்கிரமன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. கண்ட ஜாதி ஜம்பைதாளம் சங்கீர்ணகதியாக மாறும்போது எடுத்துக் கொள்ளும் எண்ணிக்கை

1) 32 2) 40 3) 56 4) 72 5) 153

10. விஷ்ணு வாமன அவதாரம் எடுத்தது,

1) இராவணனை அழிக்க
2) ஹம்சனை அழிக்க
3) இரண்ணியனை அழிக்க
4) மகாபலிச் சக்கரவர்த்தியின் ஆணவத்தை அழிக்க
5) கர்ணனை அழிக்க

11. அசோகவனத்தில் சீதை சிறையிருந்தபோது அவள் எவ்வகை நாயகி?

1) விரஹோத்கண்டிதா
2) ஸ்வாதீனபதிகா
3) அபிசாரிகா
4) விப்ரலப்தா
5) கலஹாந்தரிதா

12. முருகன் சூரனை வென்று உடுக்கு அடித்தவாறு ஆடியது,

1) துடிக்கூத்து
2) பேடிக்கூத்து
3) பாவைக்கூத்து
4) குடக்கூத்து
5) குடைக்கூத்து

13. ஸட்ஜ, சுத்தரிஷப, சாதாரணகாந்தார, பிரதிமத்திம, பஞ்சம, சுத்ததைவத, கைசிகிநிஷாத மேளகர்த்தா இராகம்

1) ஹனுமத்தோடி
2) திவ்யமணி
5) தேனுக
4) ஹேமவதி
5) பாவப்பிரியா

14. இராமநாதன் நுண்கலைத்துறைக் கற்கை நெறியின் இறுதியில் தற்போது வழங்கப்படும் பட்டம்,

1) நுண்கலைமாணி
2) நுண்கலைமணி
3) கலைமாணி
4) இளங்கலைமாணி
5) நாட்டிய கலைமணி

15. முல்லை நில மக்கள் திருமால் தங்களைக் காக்க வேண்டி ஆடியது,

1) ஆச்சியர் குரவை
2) குன்றக் குரவை
3) சாக்கையர்கூத்து
4) வரிக்கூத்து
5) பேடிக்கூத்து

16. மத்தியா அதீரா நாயகியின் இலட்சணம்

1) தனக்கு அபராதம் செய்த நாயகனைப் பார்த்து மாறுபாடான வார்த்தைகளைப் பேசுபவள்.
2) நாயகனிடம் கோபத்தை வெளிக்காட்டாமல் பொய்க் கோபம் காட்டுபவள்.
3) தனக்கு அபராதம் செய்த நாயகனைப் பார்த்தவுடனே கண்ணீருடன் கொடூரமான வார்த்தைகளைப் பேசுபவள்.
4) தன்னடக்கமும் துணிவும் குறைந்தவள்.
5) தன்னடக்கமும் துணிவும் கூடியவள்.

17. நடராஜ தத்துவத்தில் சங்கார செயலைக் குறிக்கும் ஹஸ்தம்

1) சிம்ஹமுக 2) திரிசூல 3) டமருக 4) பதாக 5) அலபத்ம

18. குதிரை பாய்வதுபோல் கால்களை மடித்து முன்னால் பாய்தல் என்பது,

1) அலகம்
2) அஷ்வோத்ப்ளவனம்
3) க்ருபாலகம்
4) வேகினீ
5) விஷமசஞ்சரஹ

19. பாத்திரமானவள் பாடலைத் தானே பாடிக் கொண்டு அபிநயிப்பது,

1) சுகீத வாச்சிகம்
2) உபகீத வாச்சிகம்
3) கசப்த வாச்சிகம்
4) உபகசப்த வாச்சிகம்
5) விகித வாச்சிகம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

20. தஞ்சை சகோதரர்கள் எந்த மன்னர் ஆட்சிக் காலத்தில் தங்கள் புகழை ஈட்டிக் கொண்டனர்?
1) துளஜா 2) சரபோஜி
3) சுவாதித்திருநாள் 4) சாமராஜேந்திரன் 5) சிவாஜி

21. பேச்சுவகை பெருமளவில் காணப்படுவது,
1) ஆரபதி விருத்தியில 2) கைசிகி விருத்தியில்
3) பாரதி விருத்தியில் 4) சாத்வதி விருத்தியில்
5) ஆரபதி விருத்தியிலும் கைசிகி விருத்தியிலும்

22. திருக்குற்றாலச் சித்திர சபையில் நடராஜமூர்த்தி ஆடிய தாண்டவம்
1) சந்தியா தாண்டவம் 2) ஆனந்த தாண்டவம்
3) ஊர்த்துவ தாண்டவம் 4) திரிபுர தாண்டவம்
5) முனித் தாண்டவம்

23. கௌதம புத்தரைப் போற்றிப் புகழ்ந்து ஆடப்படும் வண்ணம
1) உதார வண்ணம 2) உக்குஸா வண்ணம
3) உரகா வண்ணம 4) சூரபதி வண்ணம
5) அஸத்ருஸ வண்ணம

24. சென்னை நடன நிகேதனில் ஏரம்பு சுப்பையா அவர்கள் கதகளியைப் பயின்ற குரு
1) அம்புபணிகர் 2) செந்துபணிகர்
3) ஸ்ரீகோபிநாத் 4) கிருஷ்ணராவ்
5) குண்ணிராமன்

25. நாட்டிய சாஸ்திரத்தில் பாத்திரங்களைத் தேர்ந்தெடுக்கும் முறை பற்றிய விளக்கம் கொடுக்கப்பட்டுள்ள அத்தியாயம்,
1) ஐந்து 2) ஒன்பது
3) இருபத்துநான்கு 4) இருபத்தெட்டு
5) முப்பதைந்து

26. ஆத்மாத, பராஸ்த என இருவகைப்படும் ரஸத்தைக் கொண்டது
1) ஹாஸ்யம் 2) சிருங்காரம் 3) கருணா 4) வீரம் 5) பீபத்ஸம்

27. வீர ரஸத்திற்குரிய ஸ்வரங்கள்
1) மத்யம, பஞ்சம 2) காந்தார, நிஷாத
3) ஷட்ஜ, ரிஷப 4) தைவத 5) ரிஷப

28. ஹேமவதி மேளகர்த்தா இராகம் அமைந்துள்ள சக்கரம்
1) திசி 2) வேத 3) ருது 4) ரிஷி 5) வஷு

29. மந்தார மலையை உயர்த்துவதற்கு விஷ்ணு எடுத்த அவதாரம்
1) மற்சியம் 2) கூர்மம் 3) வராகம் 4) பலராமன் 5) பரசுராமன்

30. பலராமனது குண இயல்புகளில் அவன் ஒரு
1) தீரசாந்தன் 2) தீரலலிதன்
3) பீடமர்த்தனன் 4) விதூஷகன்
5) தீர உதாத்தன்

31. வீரமணி ஐயரால் இயற்றப்பட்ட மிகவும் பிரபல்யமான கீர்த்தனம்
1) கற்பக வல்லியின் பொற்பதங்கள் பிடித்தேன்
2) நவரச நாயகி சிவனை அடைந்த கதை
3) கல்யாண வசந்த மண்டபத்தில்
4) நைனையம்பதி வளரும் தாயே
5) ஏனடா முருகா எனக்கிந்த மோகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32. 108 சரணங்களை ஆராய்ச்சி செய்து பரத நாட்டியத்தில் புகுத்திய பெருமைக்குரியவர்.
1) மீனாட்சி சுந்தரம்பிள்ளை 2) தண்டாயுதபாணி பிள்ளை
3) மாணிக்கம் பிள்ளை 4) இராஜரட்ணம் பிள்ளை
5) இராமையா பிள்ளை

33. மன்மதனின் அம்பு தைத்த மாத்திரத்தில் காதலர்களுக்கு ஏற்படும் அவஸ்தைகளில் 'சித்தசங்கமம்' என்பது,
1) நாயகனைக் கண்குளிரப் பார்த்து ஆனந்தப்படுதல்
2) உள்ளத்தால் அவனைக் கட்டி அணைத்துக் களித்தல்.
3) எப்போதும் அவன் நினைவாகவே இருத்தல்.
4) அந்த வருத்ததால் காம ஜ்வரம் உண்டாகுதல்.
5) லஜ்ஜையை விடுதல்.

34. கொஹொம்ப கங்காரியவினை தழுவ வந்த சம்பிரதாய நடனம்
1) உடரட்ட 2) பாஹத்றட்ட 3) சபரகமுவ 4) நையாண்டி 5) உடக்கி

35. கத்தி வேஷம் அல்லாத பாத்திரம்
1) இராவணன் 2) சிசுபாலன் 3) நரகாசுரன் 4) துரியோதனன் 5) துர்வாசர்

36. "கிருஷ்ணனின் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய உன்னை அலங்கரித்து பொழுது புலர்வதற்கு முன் விரைவாகச் செல்" இவ்வாறு சகி நாயகிக்கு கூறுகின்றாள். இந்த நாயகி யார்?
1) கலகாந்தரிதா 2) அபிசாரிகா
3) ப்ரோஷிதபத்ருகா 4) ஸ்வாதீனபதிகா
5) விப்ரலப்தா

37. கதை கருப்பொருளை ஆற்றுகைப்படுத்த நான்கு முதல் எட்டு பாத்திரங்கள் பங்கேற்பது,
1) சதிரில் 2) யக்ஷகானத்தில்
3) கூடியாட்டத்தில் 4) கதகளியில்
5) குறவஞ்சியில்

38. கௌரி மனோஹரி என்னும் மேளகர்த்தா இராகத்தின் சுத்த மத்திமம் எந்த சக்கரத்தில் அடங்கும்?
1) வஸு 2) ஆதித்ய 3) பிரம்ம 4) வேத 5) பாண

39. எவ்வகையான தலை அசைவு நிறுத்த முடியாத சிரிப்பினைக் குறிக்கும்?
1) பரிவாஹிதம் 2) ஆலோலிதம் 3) ஆலோகிதம் 4) அதோமுகம் 5) துதம்

40. ஆலம்பன விபாவம் என்பது
1) பின்விளைவு 2) மூல உணர்ச்சி
3) நிரந்தரமற்றவை 4) உணர்வை அதிகரித்தல்
5) அடிப்படைக் காரணம்

41. பாண்டிய அரசனின் சின்னம்
1) வில் 2) நந்தி 3) சர்ப்பம் 4) மீன் 5) யாழ்

42. மதுரபாவ பக்தியுடன் தொடர்புடைய ஆரம்ப நூல்
1) மணிமேகலை 2) அபிநயதர்ப்பணம்
3) கீதகோவிந்தம் 4) சீவகசிந்தாமணி
5) சிலப்பதிகாரம்

43. பிராமணர்களையும் மிகவும் சிறந்த பெண்களையும் குறிக்கப் பயன்படுத்தும் வேஷம்
1) பச்சை 2) கரி 3) மினுக்கு 4) வெள்ளைத்தாடி 5) கத்தி

44. ஹம்சவதத்தின் போது கிருஷ்ணனும் பலராமனும் மல்லர்களுடன் யுத்தம் செய்ததைக் குறிப்பது.
1) பாவைக்கூத்து 2) கொடுகொட்டி
3) மல்லாடல்கூத்து 4) பாண்டரங்கம்
5) கடையக்கூத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

45. குகைக் கோவில்களை நிர்மாணித்த அரசன்

1) மகேந்திரவர்மன் 2) சிம்மவிஷ்ணு
3) ராஜசிம்மன் 4) நந்திவர்மன்
5) தண்டிவர்மன்

46. கணவனுக்கும் மனைவிக்கும் இடையேயான பாவம்,

1) வாத்ஸல்ய பாவம் 2) சாக்கிய பாவம்
3) மதுர பாவம் 4) தாஸிய பாவம்
5) காந்தா பாவம்

47. வர்ணத்தின் பூர்வாங்கப் பகுதியில் இடம்பெறுவது,

1) பல்லவி, அனுபல்லவி, சிட்டைப் பல்லவி
2) பல்லவி, அனுபல்லவி, எத்துக்கடைப்பல்லவி
3) பல்லவி, அனுபல்லவி, முத்தாயிஸ்வரம்
4) சரணம், ஸாஹித்யம், எத்துக்கடைப் பல்லவி
5) முத்தாயிஸ்வரம், சரணம், சிட்டைப் பல்லவி

48. ஈ. கிருஷ்ணய்யர் முதலில் யாரிடம் நடனக்கலைப் பயிற்சியைப் பெற்றுக் கொண்டார்?

1) கௌரி அம்மாள் 2) குமாரசுவாமி நட்டுவனார்
3) மதுராந்தகம் ஜகதாம்பாள் 4) கந்தப்பா நட்டுவனார்
5) முனுஸ்வாமி நட்டுவனார்

49. 'நெத்தி மாலய' என்னும் சிறிய கிரீடம் அணிந்து ஆடப்படும் நடனம்

1) சபரகமுவ 2) கதகளி 3) உடறட்ட 4) வேஸ் 5) யக்ஷகான

50. ராதை, கிருஷ்ண்ன், சகி ஆகிய மூவரையும் கதாபாத்திரங்களாகக் கொண்டு கீதகோவிந்தத்தில் இருந்து எடுக்கப்பட்ட உருப்படி,

1) பதம் 2) அஷ்டபதி
3) கீர்த்தனம் 4) ஜாவளி
5) கௌத்துவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Department of Examinations, Sri Lanka
இலங்கைப்பரீட்சைத் திணைக்களம்

53 T II

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2013 ஓகஸ்ட்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2013

பரதநாட்டியம் II
Baratha Dancing II

மூன்று மணித்தியாலம்
Three hours

# பரதநாட்டியம் II

அறிவுறுத்தல்கள்:

* பகுதி **I** இல் முதலாம் வினா உட்பட இரண்டு வினாக்களுக்கும், பகுதி **II** இல் எவையேனும் மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி - I

1. i) நீா் கற்ற வா்ணத்தின் முத்தாய்ஸ்வரத்திற்குரிய ஸ்வரங்களையும் அதற்கான கோர்வை ஒன்றினையும தாள அங்க குறியீட்டுடன் எழுதுக.

2. i) ஒடிஸி நடனத்தின் தோற்றம், வளர்ச்சி பற்றி எழுதுக.
   ii) ஒடிஸி நடனத்தின் அமைப்பு முறை பற்றி எழுதுக.
   iii) ஒடிஸி நடனத்தின் பிரபல்யமான நடனக் கலைஞர்கள் பற்றி எழுதுக.

3. i) நாயகன் என்பவன் யார்?
   ii) நால்வகை நாயகா்களைக் குறிப்பிட்டு, ஒவ்வொரு நாயகா்களுக்கும் இதிகாசங்களிலிருந்து உதாரணம் தந்து விவரிக்க.

## பகுதி - II

4. "சோழர் காலம் கலைகளின் பொற்காலம்" இது பற்றி எழுதுக.

5. i) பரதநாட்டியக் கச்சேரியில் அணிசேர் இசைக்கருவிகளின் முக்கியத்துவம் யாது?
   ii) பரதநாட்டியக் கச்சேரியில் பயன்படுத்தும் அதி முக்கிய நரம்புக் கருவி ஒன்றின் படத்தினை வரைந்து, அதன் பாகங்களைக் குறிப்பிட்டு தோற்றம், அமைப்புப் பற்றி விபரிக்குக.

6. பரதநாட்டியத்தின் மறுமலர்ச்சியில் ஸ்ரீமதி ருக்மணிதேவி அருண்டேல் அவர்களின் பங்களிப்பினை விளக்குக.

7. i) அரங்கம் என்றால் என்ன என்பதை விளக்குக.
   ii) நாட்டிய சாஸ்திரத்தின்படி பரதர் கூறியுள்ள அரங்கம் பற்றி விளக்குக.
   iii) மேடை ஒளி பற்றி விளக்குக.
   iv) மேடை அலங்காரம் பற்றி விளக்குக.

8. தற்காலத்தில் பல்கலைக் கல்வியை நிறைவு செய்து வெளியேறும் நடனப் பட்டதாரிகள் நடனத்தைக் கற்பிக்க விரும்புகிறார்கள். மேடை நிகழ்ச்சிகளை வழங்க முன்வருவதில்லை. இதற்கான காரணங்களைத் தொகுத்து எழுதுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரத நாட்டியம் I

## Bharatha Dancing I

விடைகள் - 2013

| வினா இல | விடை | வினா இல | விடை | வினா இல | விடை | வினா இல | விடை | வினா இல | விடை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 4 | 11. | 1 | 21. | 3 | 31. | 1 | 41. | 4 |
| 02. | 2 | 12. | 1 | 22. | 4 | 32. | 5 | 42. | 3 |
| 03. | 2 | 13. | 5 | 23. | 5 | 33. | 2 | 43. | 3 |
| 04. | 3 | 14. | 1 | 24. | 3 | 34. | 1 | 44. | 3 |
| 05. | 1 | 15. | 1 | 25. | 5 | 35. | 5 | 45. | 1 |
| 06. | 2 | 16. | 2 | 26. | 1 | 36. | 2 | 46. | 5 |
| 07. | 4 | 17. | 5 | 27. | 3 | 37. | 5 | 47. | 3 |
| 08. | 3 | 18. | 2 | 28. | 1 | 38. | 4 | 48. | 3 |
| 09. | 4 | 19. | 1 | 29. | 2 | 39. | 2 | 49. | 1 |
| 10. | 4 | 20. | 2 | 30. | 2 | 40. | 5 | 50. | 1 |

(50 x 02 = 100 புள்ளிகள்)

பரத நாட்டியம் II

## Bharatha Dancing II

விடைகள் - 2013

**பகுதி - I**

1. 8ஆம் 9ஆம் பக்கங்களில் பார்க்க.
2. i) **ஒடிஸி நடனத்தின் தோற்றம், வளர்ச்சி**
   - ஒரிஸா மாநிலத்தின் பல கிராமங்களிலுள்ள பழைய நாடோடி நடன மரபுகளான தோடிபுவா மரபு, படைக்கலமரபு, மகரிமரபு என்பவை குறிப்பிடத்தக்கவை.
   - கி.பி. 7ஆம் நூற்றாண்டில் சைவக் கோட்பாடுகள் ஒரிஸாவில் கலந்தமை ஒடிஸி நடனத் தோற்றத்தின் அடிப்படைக் காரணிகளில் ஒன்று.
   - கி.பி. 6ஆம் நூற்றாண்டு முதல் கடவுள் வழிபாட்டில் நடனம் ஒரு அங்கமாகியது.
   - இங்கு காணப்பட்ட ஆடல்கள் சிற்பிகளைத் தூண்டி சிற்பக்கலை வளர உதவின.
   - சுவர் ஓவியங்கள், விளக்கப் பிரதிகள் ஒரிஸாவின் தனித்துவமான நடனத்தை எடுத்துக் காட்டுகின்றன.
   - நாட்டிய சாஸ்திரம் கூறும் நடனப் பண்புகள் ஒரிஸா ஆலயங்களில் உண்டு.
   - கி.பி. 11ஆம் நூற்றாண்டு முதல் வைஷ்ணவ மதச் செல்வாக்கு ஏற்படுகிறது.
   - ஜகந்நாத வழிபாட்டில் நடனம் ஒரு அங்கமாகியது.
   - ஆந்திரா, குஜராத் நடனக் கலைஞர்கள் பூரியில் குடியேறியமை.
   - தேவதாசிகள், மஹரிகள் இறைவழிபாட்டிற்கான நடனக் கலைஞர்களாக நியமிக்கப்பட்டனர்.
   - 19ஆம் நூற்றாண்டு முதல் 20ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் ஆலயங்களிலும் அரச சபைகளிலும் நடனம் முக்கிய செயற்பாடாகியது.
   - கீதகோவிந்த ஆசிரியர் ஜெயதேவர், இராமானந்தராய் முதலியோர் ஒடிஸியில் நடனம் இறைவனின் வழிபாட்டிற்குரியதாக்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. i)

இராகம் : ஆனந்தவைரவி
தாளம் : ஆதி

## முக்தாயிஸ்வரம் ஸாகித்தியம்

ஸா, கரிஸ நிநி. ஸா, மகரிஸ நி. / ஸா, ப ம க ரி நி. / ஸக கம பா ; //
நா கரி மிக வும் ஸரஸவகை யாய் மலரணைமேல் அநுதினமும் //

பத ப ஸ்நி ஸ் க்ா ரி ஸ்ரி ஸ்நி நிஸ் / பஸ்நி த பா ம / க மா கரி ஸா நி. //
அருமையாக ஸல்லாப மதியொடுநல்ல உல்லாஸ வில்லாஸ க லாவும் நிலா வில் //

ரிக
ஸ கா ம //
கு லா வ // ஸகியே

(06 புள்ளிகள்)

## முக்தாயிஸ்வரம்

**கோர்வை I**

தெய், ; தத், தெய், தத், தெய், தாஹா தெய், ; தித் , தெய், தித், தெய், தாஹா / தெய், ; தத், தெய், ; தாஹா ; / தித், தெய், தாஹா தெய், ; ; ; //
தெய், ஹத், தெய், ஹி, தெய், ஹத் , தெய், ஹி, தெய், ஹத், தெய், ஹி,
தெய், திதிதெய், திதி / தெய், தெய், திதி தெய்,;
தெய், திதி தெய், / திதிதெய், தெய், திதி, தெய், ; தெய், திதி //
தெய், திதிதெய், தெய், திதி தெய், ; ; தத் ; தணா தத் ; தணாதத் ; த / ணா ..........................................

**கோர்வை II**

தெய், யும், தத், த, தெய், யும், தா ; தெய், யும், தத், த, தெய், யும், தா ; / தெய், யும், தத், த தெய், யும், தா; / தெய, யும், தத், த, தெய், யும், தா; //
தத், தெய், தாம் ; தித், தெய், தாம் ; தத் தெய், தாம் ; தித், தித், தெய், ; / தத், தெய், தாம் ; தித், தெய், தாம் ; / தத், தெய், தாம் ; தித், தித், தெய், ; //
தெய், தெய், தாம் ; தெய், ஹத், தெய், ஹி, தெய், ஹத், தெய், ஹி, த, க, தி, மி, / த , கி, ட, தெய், திதி தெய், த, க, / த, கி, ட, தெய், திதி தெய், த, க, //
த, தி, ட, தெய், திதி தெய், ; ; தத் ; தணா தத் ; தணா தத் ; த / ணா ..............................

(14 புள்ளிகள்)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

முக்தாயிஸ்வரம்

இராகம் : தன்யாசி
தாளம் : ஆதி

நீ தபா மகரி ஸாநிஸ கமபா / தபமகரிஸநிஸ / ரிஸமக மபதப //
நீயல்லால் துணையில்லை புவிதனிலே தயை புரிவாயே நிஜ மிது வனஜநயன
மபகமப மபநி பநிஸ்நிதபமா / பநிஸ்தாப மப / காமப நிநிஸ்ா //
நினது பப சரணா் கனவிலும் மறவா் எனது தாப மற வந்தருள் இறைவா
ரிநிஸ் பாநிமப கமம பபநிநி / நிக்ரிஸ் நிஸ்நித / பகமப மகரிஸ //
முரளி கானகுயில் நிறைமதி வதனனை முரஹரா முனிவர் தொழுக்கமல சரணனை
காமபநிஸ்ா க்ாம்க்ரிஸ்நித / பாகம பநிஸ்நி / ரிஸ்ா நித பமப //
ராதைமணவாள புரமினிதாளோன் முகில்நிகர் தயாளா யதுபதியே

|4 O O

தத், தெய், தாம் ; தித், தெய், தாம் ; தெய், ; தெய், ; தெய்,; தெய், ; / தா ; தெய், ; தெய், ; த, ; / தெய், ; தெய்,; தெய்,; தெய்,; //
த, க, த, கி, ட, த, கி, ட, த, கி, ட, த, கி, ட, த, க, / தெய், ஹத், தெய், ஹி, தெய், ஹத்,
தெய், ஹி, / தெய்,ஹத், தெய்,ஹி, தெய், ஹத், தெய், ஹி, //
தா ; தெய்,; தெய், ; த, ; தித், ; தெய், ; தெய், ; த, ; / த, க, த, கி, ட, த, க, த, / கி, ட, த, கி, ட, த, கி, ட, //
தெய், ஹத், தெய்,ஹி, தெய், ஹத், தெய், ஹி, தெய், ஹத்,
தெய், ஹி, தெய், ஹத், தெய்,ஹி, / தெய்,யா தெய்,யி, தெய், திதிதெய், ; / ; தெய், திதிதெய், ; தெய் ,திதிதெய், //

## கோர்வை II

தெய், ; தித், தாம் ; தெய், தெய், தாம் ; தெய், ; தெய், ; தெய், தெய், தாம் / தெய், யா தெய்,யா தெய்,யி, த, க, / தி, மி, தெய்,யா தெய் , யா, தெய், யி, //
த, க, த, கி, ட, த, க, த, கி, ட, திதிதெய், திதிதெய், திதிதெய், / த, ; க, ; தி, ; மி, ; / த, ; க, ; தி, ; மி, ; //
த, தெய், தெய், த, தி, தெய், தெய், த, த, தெய், தெய், த, தி, தெய், தெய், த, / தெய், ஹத், தெய், ஹி, தெய்,
தெய், திதி தெய், / தெய், ஹத், தெய், ஹி, தெய், தெய், திதி தெய், //
த, கி, ட, த, கி, ட, த, கி, ட, த, கி, ட, த, க, தி, மி, / தெய், திதி தெய், ; ; தெய், தெய், திதி / தெய், ; ; தெய், தெய், தெய், திதிதெய், //

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இங்கு வாழ்ந்த கவிஞர்களின் பாடல்களுக்கு அபிநயம் அமைத்தமையால் நடனக் கலை வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டது.
- ஒடிஸி என்பது பல நடனத் துணுக்குகளின் தொகுப்பு என்று கூறப்பட்டமை ஒடிஸி நடனச் சிறப்பிற்குச் சான்று. (08 புள்ளிகள்)

ii) ஒடிஸி நடனத்தின் அமைப்பு முறை

திரிபங்க நிலை : உடலின் மேற்பகுதி, தலை, இடுப்பு ஆகியவை ஒரு பக்கமாகச் சரிந்திருக்கும். கால் பூமியுடன் தொடர்புபட்டிருக்கும். குதிக்கால், உள்ளங்கால், பெருவிரல் தொடர்புகள் நாட்டிய சாஸ்திரத்தைத் தழுவியபவை. சமபாத நிலையுடன் நடனம் ஆரம்பமாகும். நீள் சதுர நிலையான சௌக நிலையில் உடம்பு சமனாகப் பிரிக்கப்படும். இரு கால்களுக்கிடையில் 4 தாலம் இடைவெளி உள்ளது. அடிப்படை நிலைகளில் மீனதண்டி, பர்துல, கோ, துவிமுக குறிப்பிடத்தக்கன. இருக்கும் நிலையான பைத, நடைகளுக்குரிய சாலிகள் சிறப்பானவை.

கோயிலில் நீண்ட நேர நிகழ்ச்சியாக நடைபெற்று வந்தது. கடவுள் வாழ்த்துடன் ஆரம்பம். சுத்தநிருத்தத்துடன் உச்ச நிலை. பூமிப்ரணாமத் என்ற பூமாதேவி வணக்கத்துடன் நடனம் ஆரம்பம். பின் பிக்நராஜ்பூஜா என்னும் கணபதி பூஜை இடம்பெறும். தொடர்ந்து படுகபைரவருக்குரிய பட்டு நிருத்தியம் இடம்பெறும். இசைக் கருவிகளை வாசிக்கும் அபிநயத்தை வெளிப்படுத்தும் இப்பகுதி ஒடிஸி நடனத்தில் கடினமானதாகும். இதில் இடம்பெறும் சொற்கட்டுக்கள் கதக்பரன்கள், பரத நாட்டியத் தீர்மானங்கள் போன்றவை. அடுத்து இஷ்ட தேவதாவந்தனம் என்ற அமைப்பில் நிருத்தம், நிருத்தியம் இணைந்து அபிநயிக்கப்படும். ஸ்வரபல்லவி என்ற ஆடல் தூய நிருத்தமாக ஹஸ்தாபிநயங்களுடன் இடம்பெறும். கீதாபிநயம் அல்லது அபிநய நிருத்தம் தொடர்ந்து இடம்பெறும். இதில் அஷ்டபதி, உபேந்திரராஜ், பனமலிதாஸ் முதலானவை அபிநயிக்கப்படும். சஞ்சாரி பாவங்கள் இடம்பெறும். கீதகோவிந்தத்தின் தசாவதாரப் பாடல்கள் ஒடிஸி நடனத்தில் பயன்படும். தூய நிருத்தமான தரஜன் என்ற நிருத்தப்பகுதியும், முடிவாக மோக்ஷ நிருத்யம் என்பதும் இடம்பெறும். (08 புள்ளிகள்)

- ஒரிஸாவில் எழுந்த நடன நூல்கள் நடனக் கலையின் செழிப்பிற்கு உதவின.
- பூரிநகர் பற்றிக் கூறும் "மதல் பஞ்சி" யில் நடனக் கலைஞர்கள் பற்றிக் காணப்படும் குறிப்புகள் ஒடிஸியின் சிறப்பைக் காட்டுகின்றன.
- சிற்பம், ஓவியம், நடனம், கவிதை முதலானவற்றிற்குரிய கலைஞர்கள் ஒன்றிணைந்து கலைகளை வளர்த்தமை ஒடிஸியின் வளர்ச்சிக்கு உதவிற்று.
- நடனம் தவிர்ந்த கலைகளுக்குள் நடனம் புகுத்தப்பட்டமை ஒடிஸி நடன உயர்ச்சிக்குப் பலமாக அமைந்தது.
- ஒரிஸாவில் எழுந்த கவிதைகள் இசைப்படுத்தப்பட்டு நடனம் அமைக்கப்பட்டமை ஒடிஸி நடன வளர்ச்சிக்கு உதவியது.
- ஜகந்நாதர் ஆலய உற்சவங்கள் நடனத்திற்கான வாய்ப்புகளை வழங்கியமை ஒடிஸி நடனம் வளர்ச்சியடைய உதவிற்று.
- ஒடிஸி ஆடலின் ஆரம்ப வடிவங்கள் பின்னர் நாட்டிய சாஸ்திரம் கூறும் ஆடல் இலக்கணங்களை உள்வாங்கி உயர்நிலை பெற்றன. உ-ம்: மயூர பஞ்ச என்பது ஈட்டிக்கோல் என்ற படைக்கல நடனத்தின் புதிய வடிவம்.
- ஒடிஸி நடனம் ஆலயங்களில் வளர்ந்தமை, வெளியே பொழுதுபோக்கிற்காகப் பயன்படுத்தப்பட்டமை என்பன அதன் வளர்ச்சிக்குப் பக்கபலமாக அமைந்தது.

iii) ஒடிஸி நடனத்தின் பிரபல்யமான நடனக் கலைஞர்கள்

சம்யுக்தா பாணிக்கிரஹி : முப்பது ஆண்டுகளாக ஒடிஸி நடனத்தை ஆடிப் பிரபலம் பெற்றவர். பிநாதி மிஸ்ரா, குங்கும்தாஸ் ஆகியோரும் குறிப்பிடத்தக்கவர். ஒரிஸாவிற்கு வெளியேயுள்ள இந்திராணி ரஹ்மான், ரீதாதேவி, யாமினி, கிருஷ்ணமூர்த்தி, சோனால் மாசிங், ஐக்கிய அமெரிக்கக் கலைஞர் வறெடெரிகா, கனடாவைச் சேர்ந்த ஆன் மேரி காஸ்ரன் முதலானோரும் இளங் கலைஞர்களான அலோக பணிக்கர், மாதவி முத்கல், குங்கும் தாஸ், குருபங்கஜ் சரண்தாஸ், கேலுசரன் மகபத்திரன் ஆகியோரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

(04 புள்ளிகள்)

3. i) நாயகன் எனப்படுபவன் மக்கள் தலைவனாகவும் உயரிய பிறப்பு, வளர்ப்பு என்பவற்றைக் கொண்டவனாகவும், எல்லோரிடனும் இன்முகம் காட்டி அன்பாகப் பேசிப் பழகுகின்றவனாகவும், எல்லோராலும் விரும்புகின்றவனாகவும், உள்ளமும் உணர்வுகளும் தூய்மையானவனாகவும், நாவன்மை, நற்குடிப்பிறப்பு, உறுதி, இளமை, புத்திசாலித்தனம், உற்சாகம், சக்தி, ஞாபகசக்தி, கற்பனாசக்தி, கலைகளில் தேர்ச்சி, சுயமரியாதை கௌரவம் ஆகிய குணங்களைக் கொண்ட வனாகவும் வீரம், தைரியம், தேஜஸ் உள்ளவனாகவும் இருக்க வேண்டும்.

(04 புள்ளிகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii) தீரோதாத்தன உதாரணம் : ஸ்ரீராமர்

இவர் தன்னடக்கமுள்ளவனாகவும் சூதுவாது அகம்பாவம் அற்றவனாகவும் திகழ்கின்றான். தசரதன் இராமனைப் 14 வருடங்கள் காடாள வேண்டும் என்று கூறிய போது அதை மிகவும் பணிவுடனும் தன்னடக்கத்துடனும் ஏற்றுக் காடாளச் செல்கின்றான். இவரது உடலுறுதியும் மன உறுதியும் இவரது தோற்றப் பொலிவைப் பார்த்த மாத்திரத்திலேயே காணக் கூடியதாகவுள்ளது. அடுத்து இவர் மக்கள் மேல் கொண்ட அன்பும், ஆதரவும் இவர் காடாளச் செல்லும்போது மக்கள் கண்ணீர் மல்க வழியனுப்பி வைத்ததில் இருந்து தெரிய வருகின்றது.

மேலும் 'குகன்' இடம் தோழமையுடன் பழகியமை இவன் தற்பெருமை அற்றவன் என்பதை அடையாளப்படுத்துகின்றது. வில்லை உடைத்தமை வீரத்திற்கு எடுத்துக்காட்டாகவும் அமைகின்றது.

தற்பெருமை அற்றவன் - குகனிடம் தோழமையுடன் பழகியமை

வீரம் - வில்லை உடைத்தமை

உதாரணம் : ஸ்ரீராமர்

**தீரோதாத்தன**

கர்வம் உள்ளவன்; தற்புகழ்ச்சி, கோபம், பெருமை, அவசரபுத்தி உடையவன். சுலபமாகக் கோபங் கொள்வான். பொறாமையுள்ளவன்; மந்திரமாய வித்தைகளுக்கு உடன்படுவான். தான் சொல்வதை மற்றவர் செய்ய வேண்டும் என எதிர்பார்ப்பவன் தீரோத்தாத்தன் எனப்படுவான். இவன் நாயகன் என்னும் நிலையில் இருப்பினும் நற்குணங்கள் அற்றவனாக விளங்குவான். இந்நாயகன் தீரோதாத்தனுக்கு எதிரான குணம் படைத்தவன். உதாரணம் : துரியோதனன், இராவணன்

**தீரலலித்தன்**

தன்னடக்கமுள்ள நாயகன் கவலையும், யோசனையும் அற்றவனாய் இருப்பான். இளகிய மன முடையவன், எல்லோரிடும் மகிழ்ச்சியாகவும் சமூகமாகவும் பழகுபவன், கலைகளிலும் சாஸ்திரங் களிலும் ஆர்வம் மிக்கவன் எவனோ அவனே தீரலலித்தன்.

**தீரசாந்தன்**

தன்னடக்கம், கட்டுப்பாடு, அமைதி, சாந்தம், பொறுமை ஆகிய குணங்களை உடையவன். பொதுவான பிராமண குலத்தைச் சேர்ந்தவனாக இருப்பான். மகிழ்ச்சியும் திருப்தியும் கொண்டவனாகவும், பரிசுத்தமான மனங் கொண்டவனாகவும் இருப்பான்.

**உத்தம நாயகன்**

தீரோதாத்தன் இற்கு விடை எழுதப்பட்டது போன்று உதாரணத்துடன் விவரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(16 புள்ளிகள்)

## பகுதி - II

4. "சோழர் காலம் கலைகளின் பொற்காலம்"

- வடக்கில் கங்கை தொடக்கம் தெற்கே இலங்கை வரையும் கடல் கடந்த நாடுகளிலெல்லாம் சுமார் 400 ஆண்டுகள் சோழப் பேரரசு நிலைபெற்றது.
- ஆட்சிச் சிறப்பாலும், வாணிபத்தாலும் ஈட்டிய பொருள் கொண்டு கோயிற் திருப்பணிகள் மூலம் பெரும்புகழ் ஈட்டினர்.
- இவர்களுடைய ஆட்சிக்காலமே அரசியல் வரலாற்றிலும், கலை வரலாற்றிலும் பொற்காலமாகத் திகழ்கின்றது.
- சோழர்காலக் கட்டிடக் கலை வரலாற்றில் விஜயாலய சோழீச்சரம் குறிப்பிடத்தக்கது.
- கட்டிடக் கலையின் அடுத்த வளர்ச்சி கோரங்கநாதர் கோயிலில் காணலாம்.
- முதலாம் இராஜராஜன் தொடக்கம் முதலாம் குலோத்துங்கன் வரையான காலப்பகுதி சிறப்பானது.
- இக்காலத்தில் இராஜராஜன் கட்டிய தஞ்சைப் பெரிய கோயிலும், இராஜேந்திர சோழன் கட்டிய கங்கைகொண்ட சோழேச்சரக் கோயிலும் சிறப்பானதாகும்.
- கட்டிட நுணுக்கத்திலும் கலை நுணுக்கத்திலும் சோழர் காலச் சிற்பங்கள் சிறந்து விளங்குகின்றன.
- கோயில்களில் இராமாயணக் காட்சிகள், சிவபுராணக் காட்சிகள் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன.
- மூவர் கோயிலில் உள்ள சிவனார் ஆடும் சதுரதாண்டவ வடிவமும், தெய்வத் திருவுருவச் சிலைகளும் குறிப்பிடத்தக்கவை.
- தஞ்சைப் பெரிய கோவில் தூண்களில் 108 கரணங்களுள் 81 கரணங்கள் செதுக்கப்பட்டுள்ளன.
- விநாயகர் நர்த்தன விநாயகராக வடிக்கப்பட்ட காலம் இதுவாகும்.
- தஞ்சை சிவன் கோயிலிலுள்ள ஓவியங்கள் சோழரின் ஓவியச் சிறப்புக்கு சான்றாகும்.
- திரிபுரதகனக் காட்சியும், தாருகாவனக் காட்சியும் அழகாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன.
- இக்கால ஓவியங்கள் அக்கால மக்களின் ஆடைவகைகளையும், ஆபரணச் செழிப்பையும் எடுத்துக் காட்டுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சோழர் காலத்தில் கோயில்களில் தேவாரத் திருப்பதிகங்கள் பாடுபவர்களுக்கு மானியங்களை வழங்கியிருந்தனர்.
- இக்காலத்தில் நாலாயிரத் திவ்விய பிரபந்தம் இசையமைக்கப்பட்டது.
- ஆலயங்களில் பண்ணிசை முறைப்படி ஓதப்பட்டதால் தமிழிசை பாதுகாக்கப்பட்டது.
- இக்காலத்தில் தஞ்சைக்கோயிலில் மட்டும் 400 தேவதாசிகள் பணிபுரிந்தமையும் அவர்களுக்கு ஆளுக்கொரு வேலி நிலம் கொடுக்கப்பட்டதையும் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.
- இக்காலப் பகுதியில் இசை நுணுக்கம், இந்திர காளியம், பரத சேனாபதியம், கூத்தநூல் போன்ற பல நூல்கள் எழுதப்பட்டன.
- சாந்திக்கூத்து, விநோதக் கூத்து ஆகிய இருவகைக் கூத்துக்களும் ஆடப்பட்டன.
- அகமார்க்க நட்டுவம், அபிநய நட்டுவம் என இருவேறு சிறப்பு நட்டுவநிலைகள் இருந்தன.
- இக்கால வழக்கிலிருந்த பல்வகை ஆட்டங்களுள் இறைதிருமுன் நிகழ்த்தப்பட்ட வைகறை ஆட்டங்கள் குறிப்பிடத்தக்கவை.
- தளியிலார், பதியிலார், ஆடல்பெண்டிர், தேவரடியார்கள், தளிர்சேரிப்பெண்டுகள் என ஆடல்மகளிர் பல வகையாக அழைக்கப்பட்டுள்ளனர்.
- ஆடற் கலைத்திறனை வளர்க்க கோயில்களில் நட்டுவர்களும், தலைக்கோலிகளும் இருந்தனர்.
- ஆடல் நிகழ்த்தப்பட்ட அரங்குகள் நாட்டிய மண்டபம் என்றும் நிருத்த மண்டபம் என்றும், நாடகசாலை என்றும், நானாவித நாடகசாலை என்றும் அழைக்கபட்டுள்ளன.
- திருலோலக்க மண்டபம், நிருத்த மண்டபம், திருக்காவனம், திருவரங்கு, சதுர்சாலை, அம்பலம் என பல மண்டபங்களில் ஆடல்கள் நிகழ்ந்தன.
- திருவீதிகளிலும் ஆடல் நிகழ்ந்தது.
- ஆடலில் சிறந்து விளங்கிய பெண்களுக்கு தலைக்கோலிப் பட்டம் வழங்கப்பட்டது.
- ஆடல், பாடல், அழகு மூன்றிலும் சிறந்து விளங்கிய மாதவிக்கு தலைக்கோலிப்பட்டம் வழங்கப்பட்டது.
- ஐந்நூற்றுவத் தலைக்கோலி, வீராபரணத் தலைக்கோலி போன்ற பட்டங்கள் வழங்கப்பட்டன.
- ஞானசம்பந்தர் தேவாரப் பாடல்களை சிறப்பாக அபிநயித்த ஆடல் மகள் ஒருத்தி "சிவஞானசம்பந்த தலைக்கோலி" என அழைக்கப்படுகின்றாள்.

வேறு பொருத்தமான குறிப்புகள் இருப்பின் விடைக்கேற்ப புள்ளி வழங்கவும். (20 புள்ளிகள்)

5. i) நடனக் கச்சேரிகளில் நடனத்திற்கு மேலும் மெருகூட்டுவதிலும் இசைக் கருவிகளாகும். இசைக் கருவிகளின் வகைகள் தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, மிடற்றுக்கருவி, கஞ்சற்கருவி. (10 புள்ளிகள்)

தோற்கருவி - மிருதங்கம்

ஒரு பரத நாட்டியக் கச்சேரியை நெறியாள்கை செய்து அதனைக் கொண்டு நடத்தும் நடத்துநராக நட்டுவனார் விளங்குகின்றார். இவரின் ஜதிக்கோர்வைகட்கும் தீர்மானங்கட்கும் அமையவே மிருதங்கம் வாசிக்கப்படும். நடனமாடுபவரின் உள் உணர்வுகளை நாதம் தட்டி எழுப்புகின்றது. களைப்பையும் பொருட்படுத்தாது சிரித்த முகத்துடன் மகிழ்ச்சியாக ஆடும் இயல்பினை மிருதங்கம் ஏற்படுத்துகின்றது. நடனமாடுபவர் நான் என்ற உணர்வை இழந்து நடனத்துடன் ஒன்றுவதற்கு மிருதங்கம் உதவுகின்றது. நடன மகளிருக்குச் சுறுசுறுப்பையும் உற்சாகத்தையும் ஏற்படுத்துகின்றது. மேலும் நாட்டிய நாடகத்தில் சண்டைக் காட்சிகள், மரம் வெட்டுதல், மரம் அரிதல், கத்தி தீட்டுதல், குதிரையின் குளம்பொலி, அம்மியில் அரைத்தல், உரலில் உலக்கை இடித்தல், தேர்பவனி, ரௌத்திரம், வீரம், பயானகம், அற்புதம் ஆகிய ரஸங்களைப் பிரதிபலித்தல் நாதக்கட்டு ஏற்பட்டு கச்சேரியைப் பார்ப்பவர்கட்கு சுவையாக இருக்கும். லயவிந்நியாசம்.

துளைக்கருவி - புல்லாங்குழல், நரம்புக்கருவி - வயலின்

பாவ வெளிப்பாடு, உணர்ச்சி வெளிப்பாட்டை அதிகரிக்கும். காட்சி விதானிப்பதற்கு உதவும். ராகவெளிப்பாடு, வாய்பாட்டுடன் ஒத்திசைவு, உயிரூட்டம் சஞ்சாரி பாவத்திற்கு உதவுதல்.

ii) இசைக்கருவி - வீணை

இசைக்கருவிகளில் சிறப்பான வாத்தியமாக விளங்குவது வீணையாகும். இது இந்திய சங்கீதத்திற்கு அணிகலனாக விளக்குவதுடன் இந்தியாவின் தேசிய வாத்தியமாகவும் விளங்குகின்றது. வீணா, வேணு, மிருதங்கம் எனும் வாத்தியத் த்ரத்தில் முதலாவதாக இவ்வாத்தியம் கருதப்படுகின்றது. கலைமகளின் கையில் இவ்வாத்தியம் இருப்பதிலிருந்து இதன் பெருமை நன்கு புலப்படுகின்றது. இவ்வாத்தியத்தில் இந்திய சங்கீதத்தின் பல நுட்பங்களையும் தத்துவங்களையும் நுணுக்கங்களையும் வாசிக்கக் கூடியதாக இருப்பதனால் இதனைச் சங்கீத அளவுகோல் என்று கூறுவர்.

இவ்வாத்தியமானது வேதகாலந் தொட்டு வாசிக்கப்பட்டு வந்துள்ளது. ஆனாலும் 17 ஆம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றாண்டிலேயே தற்காலத்து உருவத்தையும் அமைப்பையும் பெற்றது. இரகுநாத மன்னர் தஞ்சாவூரை அரசு புரிந்த காலத்திலேயே இவ்வாத்தியம் முழு வளர்ச்சியடைந்ததாகையால் தஞ்சாவூர் வீணையென்றும், இரகுநாத வீணையென்றும் இது அழைக்கப்படுகின்றது.

வீணையானது ஒரு நரம்புக் கருவியாகும். சுருதிக்காகவும், தாளத்திற்காகவும் இவ்வாத்தியத்திலேயே 3 தந்திகள் இணைக்கப்பட்டுள்ளன. இதனால் இவ்வாத்தியம் சகல வாத்தியம் என்று கூறப்படுகின்றது. சுருதிக்காகத் தனியே தந்திகள் பொருத்தப்படாத வாத்தியம் நிஸ்கள வாத்தியம் எனப்படும். ஒரே நேரத்தில் வெவ்வேறு ஸ்தாயிகளில் 2, 3 ஸ்வரங்கள் வாசிக்கக்கூடிய வசதியைக் கொண்டுள்ள வாத்தியங்களில் வீணையுமொன்று. இதனால் இவ்வாத்தியம் பஹுத்வனி வாத்தியம் என்று அழைக்கப்படும். வீணை வாத்தியத்தில் 3\2 ஸ்தாயிகள் வாசிக்கலாம். நான்கு தந்திகள் வாசிப்பதற்காகவும், 3 தந்திகள் சுருதிக்காகவும், தாளத்திற்காகவும் அமைந்துள்ளன. வாசிக்கும் தந்திகளுக்காகக் குடத்தின் மேற்பாகத்தில், நடுப்பகுதியில் ஒரு குதிரை (பாலம்)யும், தாள, சுருதித் தந்திகளுக்காக பக்கவாட்டில் மற்றொரு குதிரை (பக்கப் பாலம்) உள்ளன. பலா மரத்தினால் இவ்வாத்தியம் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாத்தியத்தின் பாகங்கள்:

1. குடம்
2. மேற்பலகை
3. தண்டி
4. சுரைக்காய்
5. பிரடைகள்
6. யாழிமுகம்
7. மேளச்சட்டம்
8. மெழுகுச்சட்டம்
9. 24 மெட்டுக்கள்
10. குதிரைகள்
11. லங்கர்
12. நாகபாசம்
13. உருட்டுக்கள் (சிறு வளையங்கள்)

வீணையின் அமைப்பு:

தண்டியின் ஒரு பக்கத்தில் குடமும், மற்றொரு பக்கத்தில் யாழி முகமும் இணைக்கப்பட்டிருக்கும். தண்டியானது குடப்பக்கத்தில் சற்றுப்பருத்தும், யாழிமுகப் பக்கத்தில் சற்றுச் சிறுத்தும் இருக்கும். தண்டியின் இரு பக்கங்களிலும் மெழுகுச் சட்டங்கள் உண்டு. அவற்றின் மேலாக 2 ஸ்தாயிகளைத் தழுவிய 24 மெட்டுக்கள் வெண்கலத்தினாலாவது, வெள்ளியினாலாவது, எ்.கினாலாவது செய்யப்பட்டிருக்கும். யாழி முகத்திற்கு அருகிலிருக்கும் சுரைக்காய் ஒரு தாங்கியாகவும், ஒலிபெருக்கும் சாதனமாகவும் பயன்படுகிறது. வாசிக்கும் தந்திகள் நான்கும் லங்கர்களின் நுனியிலுள்ள வளையங்களில் முடியப்பட்டுக் குதிரையின் மேலும், மெட்டுக்களின் மேலும் சென்று பிரடைகளில் பிணைக்கப்பட்டிருக்கும் லங்கர்கள் வீணையின் மூலாதாரம் எனப்படும் நாகபாசத்தில் இணைக்கப்பட்டிருக்கும் லங்கர்களின் மேல் உள்ள சிறு உருட்டுக்கள் (வளையங்கள்) நுட்பமாகச் சுருதி சேர்ப்பதற்கு உதவும். இந்த உருட்டுக்களை நாக பாசப் பக்கம் தள்ளினால் சுருதி அதிகரிக்கும். யாழிமுகப்பக்கம் தள்ளினால் சுருதி குறையும். இதேபோன்று பிரடைகளை யாழிமுகப் பக்கம் திருப்பினால் சுருதி அதிகரிக்கும். நாகபாசப்பக்கம் திருப்பினால் சுருதி குறையும். வாசிப்பும் தந்திகள் நான்கின் பெயர்கள்:

1. ஸாரணி(ஸ)
2. பஞ்சமம் (ப)
3. மந்தரம் (ஸ)
4. அனுமந்தரம் (ப)

தாளத்தந்திகள் மூன்றின் பெயர்கள்:


1. பக்க ஸாரணி (ஸ)
2. பக்க பஞ்சமம் (ப)
3. ஹெச்சுஸாரணி (ஸ)

வாசிக்கும் தந்திகளில் ஸாரணித் தந்தியை மத்திம ஸ்தாயி ஸட்ஜத்திற்கும், பஞ்சமத் தந்தியை மந்திரஸ்தாயி பஞ்சமத்திற்கும், மந்தரத் தந்தியை மந்திரஸ்தாயி ஸட்ஜத்திற்கும், அனுமந்தரத் தந்தியை அனுமந்திரஸ்தாயி பஞ்சமத்திற்கும் சுருதி சேர்க்க வேண்டும்.


சுருதிக்காகவும் தாளத்திற்காகவும் பயன்படும் தந்திகளில் பக்க ஸாரணித் தந்தியை மத்தியஸ்தாயி ஸட்ஜத்திற்கும் பக்க பஞ்சமத் தந்தியை மத்தியஸ்தாயி பஞ்சமத்திற்கும் ஹெச்சுஸாரணித் தந்தியைத் தாரஸ்தாயி ஸட்ஜத்திற்கும் சுருதி சேர்க்க வேண்டும். வீணை வாத்தியத்தில் தாளத்தினை சிறப்புற வாசிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வீணை




### வயலின் (VIOLIN)



பாகங்கள் :

| | |
|---|---|
| *01. சுருள் தலைப்பு* | *02. பிரடைப்பெட்டி* |
| *03. பிரடை* | *04. மேல்மெட்டு (Topnut)* |
| *05. உடற்பாகத்தின் மேற்புறம்* | *06. விரற்பலகை* |
| *07. விலாப்பலகை* | *08. தந்தி* |
| *09. நாதத்துளை* | *10. பாலம்* |
| *11. சுருதி சீராக்கி* | *12. வால்தண்டு (தந்தி தாங்கி)* |
| *13. தந்திதாங்கி நாண்* | *14. செருகாணி (Endpin)* |
| *15. வில்முனை* | *16. வில் குச்சி* |
| *17. வில் மயிர்* | *18. பூண்* |
| *19. முத்துச்சிப்பி தகடு* | *20. நாணிறுக்கிக் கட்டை* |
| *21. வில்லின் திருகாணி* | |

(10 புள்ளிகள்)

6. i) பரதநாட்டியத்தின் மறுமலர்ச்சியில் ஸ்ரீமதி ருக்மணிதேவி அருண்டேல் அவர்களின் பங்களிப்பு

- நடனக் கலைக்கே பெரும்பாலும் தம் வாழ்நாளை அர்ப்பணித்த இவ் அம்மையார் 1904ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 29ஆம் திகதி சமஸ்கிருத அறிஞருமான நீலகண்ட சாஸ்திரிக்கும் திருவையாற்றினைச் சேர்ந்த ஷேஷம்மாளுக்கும் ஆறாவது பிள்ளையாகப் பிறந்தார்.
- இளம் வயதில் சங்கீதத்திலும் ஏனைய கவின்கலைகளிலும் விருப்புடையவராகத் திகழ்ந்தார்.
- இசையில் ஈடுபாடுள்ளவராதலால் இசைக் கலைஞராகவே விளங்க வேண்டுமென விரும்பினார்.
- சமய பண்பாட்டுப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பிரம்மஞான சங்கத்துடன் நெருங்கிய உறவு கொண்டிருந்தார்.
- இவர் அவுஸ்திரேலிய நாட்டைச் சேர்ந்த டாக்டர் G. S. அருண்டேலை 1920ஆம் ஆண்டில் திருமணம் செய்தார்.
- வைதீகப் பிராமண குடும்பத்தைச் சேர்ந்த ருக்மணிதேவி தம்மிலும் மிக வயது கூடிய ஆங்கிலேயர் ஒருவரைத் திருமணம் செய்தமை அக்காலச் சூழ்நிலையில் ஒரு புரட்சிகரமான துணிச்சலான செயலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சுற்றுலாவின்போது 1926இல் அவுஸ்திரேலியாவிலே உலகப் புகழ்பெற்ற ருஷிய பலே நடனக்காரியான அன்னோ பவ்லோவினையும் அவரது நடனக் குழுவினரையும் இவர் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.
- கிளியோநோட்டியிடம் ருக்மணிதேவி பலே நடனம் கற்கத் தொடங்கினார்.
- ஆனால் அன்னாபவ்லோவ இந்திய நடனங்களைக் கற்குமாறு இவரைத் தூண்டி திசை திருப்பினார்.
- சதிர், சின்னமேளம், தாஸி ஆட்டம் எனப் பலவாறு அழைக்கப்பட்டதை சட்டபூர்வமாக ஒழிப்ப தற்குப் பாடுபட்டார்.
- 1932ஆம் ஆண்டு பந்தனை நல்லூர் மீனாட்சிசுந்தரம்பிள்ளையின் மாணவிகளான ஜீவரத்தினம் ராஜலக்சுமி சகோதரிகளின் அற்புதமான நடன நிகழ்ச்சியைக் கண்டு களித்த பின் தாமும் அக்கலையைக் கற்கத் தொடங்கினார்.
- மயிலாப்பூர் கௌரி அம்மாளிடம் நடனப் பயிற்சியை (அடையாறு) ஆரம்பித்து சரஸியாக்சலு சப்தத்தை முதலாவது பாடமாகக் கற்றார்.
- எதிர்ப்பின் மத்தியிலும் தனது பயிற்சியை திறம்பட மேற்கொண்டார்.
- பந்தனை நல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களிடம் முறைப்படி பரதம் பயின்றார்.
- 1935ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அடையாறில் இவரின் அரங்கேற்றம் நடைபெற்றது.
- சமுதாயச் சூழ்நிலையில் இவ் அரங்கேற்றம் புதியதோர் திருப்பத்தை ஏற்படுத்தியது.
- இந்நடனத்தை பார்த்த பலரும் "கோவில் சிலையே உயிர்பெற்று எழுந்து வந்தது" போல் இருந்தது என வர்ணித்தனர்.
- மொண்டசூரி பள்ளிக்கூடம், அருண்டேல் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆகிய கல்வி நிறுவனங்களை நிறுவினார்.
- இந்திய அரசு பத்மபூஷண் விருது வழங்கிக் கௌரவித்தது.
- அமெரிக்காவிலுள்ள வெயின் பல்கலைக்கழகமும், இந்தியாவிலுள்ள ரவீந்திரபாரதி பல்கலைக் கழகமும் கலாநிதிப் பட்டங்களை வழங்கியது.
- இவர் அமைத்த கலாஷேத்திரம் என்ற கலைக்கூடம் சர்வதேசக் கலைக்கழகம் என அழைக்கப்படுகிறது.
- 1985ஆம் ஆண்டு கலாஷேத்திராவின் பொன்விழாக் கொண்டாட்டம் நடைபெற்றது.
- நடனக் கச்சேரிகளை சதிர்க்கச்சேரி என அழையாது பரத நாட்டியக் கச்சேரி என அழைத்தார்.
- இவர் 1986ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்.
- எமது நாட்டுக் கலைஞர்களான சாந்தா பொன்னுத்துரை, திருமதி கமலா ஜோன்பிள்ளை, திருமதி லீலாம்பிகை செல்வராஜன், திருமதி அனுசுயா தர்மராஜா, இயலிசைவாரிதி ந. வீரமணி ஐயா ஆகியோர் கலாஷேத்திராவில் கற்றவர்கள். (20 புள்ளிகள்)

7. i)
- அரங்கம் என்பது நாடகமோ நடனமோ நடைபெறும் மேடையாகும்.
- பழங்காலத்தில் கிராமங்களில் திறந்த வெளியில் நடனங்கள் நிகழ்த்தப்பட்டன.
- கோயில்களில் நடன அரங்கு கூத்தம்பலம் என அழைக்கப்பட்டது.
- நடனம் செய்வதற்குரிய அரங்கினை உருவாக்க செய்ய வேண்டிய முறைகள்:
  - ♦ வெகுதான்ய என்று கூறக்கூடிய ஆண்டில் பூரணை யோகத்தில் பஞ்சமி திதியில் அரங்கு கட்ட வேண்டிய பூமியில் (நிலத்தில்) உள்ள ஈசான மூலையில் (வடகிழக்கு) முகூர்த்தம் செய்ய வேண்டும்.
  - ♦ அரங்கிற்குரிய கம்பத்தை நடுவதற்கு உத்திரட்டாதி, உத்திராடம், ரோகிணி, மிருகசிரிடம், பூசம் ஆகிய நாட்களும் மகரம், விருச்சிக லக்கினங்களும் உரியன ஆகும்.
  - ♦ கீழ் மேலாக 64 முழ நீளமும் அகலமும் வடகீழாக 32 முழ அகலமுமாய் மண்டபம் செய்து நான்கு பக்கங்களிலும் வாயில்கள் அமைக்க வேண்டும்.
  - ♦ அரங்கின் சுவர்களைக் கண்ணாடி போல சுத்தம் செய்து சித்திரங்களை வரைந்து நிலைக் கண்ணாடிகளைப் பொருத்த வேண்டும்.
  - ♦ பூரண கும்பம் வைத்து தூபங்கள் இட்டு மணியாலும் மலராலும் கட்டப்பட்ட மாலைகளை அரங்கில் தொங்கவிட வேண்டும் என்று மகாபாரத சூடாமணி விளக்கியுள்ளது. இதனைப் போன்றே சிலப்பதிகார உரையிலும், பஞ்ச மரபிலும், நாட்டிய சாஸ்திரத்திலும் விளக்கப் பட்டிருத்தலைக் காணலாம். (05 புள்ளிகள்)

ii)
- அரங்க அமைப்பு விகிருஷ்டம், சதுரச்ரம், திரியச்ரம் என மூன்று வகைப்படும்.
- நீளம் அதிக அளவிலும் அகலம் குறைவாகவும் உள்ள விகிருஷ்டம் எனப்படும்.
- நீளமும் அகலமும் சரிசமமாக உள்ள சதுர அமைப்பு சதுரச்ரம் எனப்படும்.
- முக்கோண வடிவில் மூன்று சமமான அளவுள்ள அமைப்பைக் கொண்டது திரியச்ரம் எனப்படும்.
- அளவைக் கொண்டு நாட்டிய மண்டபம் ஜேஷ்டம் (பெரியது), மத்திமம் (நடுத்தரமானது), அவரம் குறைந்த அளவுள்ளது என மூன்று வகைப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஜேஷ்டம் என்பது 108 கை நீளமும், மத்திமமானது 64 கை நீளமும், அவரமானது 32 கை நீளமும் கொண்டிருக்கும்.
- ஜேஷ்டம் தேவதைகளுக்கும், மத்திமம் மன்னர்களுக்கும், அவரம் பொது மக்களுக்கும் ஏற்றதாகும்.
- இவற்றில் மத்திமம் சிறப்பானது. ஏனெனில் பாட்டும் உரையாடலும் மண்டபத்திற்குள் எல்லா இடங்களிலும் இருப்பவர்களுக்கு நன்கு கேட்கும். (05 புள்ளிகள்)

iii) ஒளி விதானிப்பு

அரங்கின் காண்பிய மூலங்களுள் ஒளி மிகவும் பல்துறை பயன் வாய்ந்ததொன்றாகவுள்ளது. ஆற்றுவோருக்கும் மேடைப்பரப்பிற்கும் ஒளி பாய்ச்சுவது ஒளியமைப்பின் அடிப்படை நோக்கமாகும். ஆயினும் ஒளி மூலம் மனநிலையைச் சிருஷ்டிக்கவும் ஒரு நாளின் நேரத்தைச் சுட்டிக்காட்டவும் மேடையின் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கு இயக்கத்தை மாற்றவும் முடியும். அரங்கின் ஏனைய மூலகங்களை வாழ்வில் நாம் காண்பது போன்று ஒளியையும் வாழ்வில் காண்கின்றோம். வரலாற்று நோக்கில் பார்க்குமிடத்து அரங்கிற்கு வந்த கடைசிக் காண்பிய மூலகம் ஒளியமைப்பாகும். பயன்படுத்தப்படும் கருவிகள், நுட்பங்கள் என்பவற்றைப் பொறுத்தவரையில் ஒளியமைப்பே மிகவும் முன்னேற்றமானதாகவுள்ளது.

அரங்கின் ஒளியில் பரந்துபட்ட அழகியல் அல்லது கலையின் கலைத்துவ சாத்தியப்பாடுகளை முதன் முதலில் கண்டவர் "அடொல்ப் அப்பியா" (*Adolph Appiah*) என்ற சுவிஸ் தேசத்து காட்சி விதானிப்பாளர் ஆவார். நல்ல ஒளியமைப்பு என்பது ஆழம், மனநிலை, மர்மம், போலிப்பாவனை, வேறுபாடு, உணர்ச்சி மாற்றம், நெருக்கம், பயம் என்பவற்றை அதிகரிக்கச் செய்யும்.

மேடை நிகழ்வுகளில் ஒளி விளக்குகள் இன்றியமையாததாகின்றன. அந்த விளக்குகளின் அமைப்பு மேடையிலுள்ள கலைஞர்களைப் பாதிக்கா வண்ணம் இயங்குமாறு இருக்க வேண்டும். ஒளிக்கற்றையின் அளவு, ஒளியைக் கூட்டியும் குறைத்தும் தரக்கூடிய ஒளிக்குறைப்பான், நிறச்சல்லடை ஆகியவற்றால் ஒளியின் அளவு கட்டுப்படுத்தப்படும். அளவுபடுத்தப்பட்ட ஒளி, பார்வையாளரின் கூர்மையான பார்வை, மனநிலை ஆகியவற்றை ஆளுமை செய்யும். அதிக வெளிச்சம் இன்பியல் நிகழ்வுகளுக்கும், குறைந்த வெளிச்சம் துன்பியல் நிகழ்வுகளிற்கும் பயன்படுத்தப்படுகிறது. இதேபோல தூக்கலான வண்ணங்கள் (*Warm Colours*) இன்பியலுக்கும், மென்மையான நிறங்கள் (*Cool Colours*) துன்பியலுக்கும் பயன் படுத்தப்படுகின்றன.

மேடை ஒளிகளின் வகைகள்

1. குவிந்த ஒளிகள் (*Spot Light*)

   இவை குறித்த ஓர் இடத்தில் கூர்மையான, தெளிவான, குவிவான ஒளியைப் பாய்ச்ச உதவும். இவற்றுள் அசையும் குவிவொளிகளும், நிலையான குவிவொளிகளும் உண்டு. அசையும் குவி வொளிகள் மேடையில் நடைபெறும் இயக்கங்களைத் தொடர்ந்து காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும்.
2. பரப்பு ஒளிகள்

   பொதுவான ஒளியூட்டுகை மூலம் சிறிய பரப்புகளிற்கு ஒளி பாய்ச்சப்படும். இவ்வொளி மூலங்கள் மூலமாக மேடை முழுவதும் ஒளியைப் பரப்ப முடியும்.
3. கீற்று ஒளிகள் அல்லது கரை ஒளிகள்

   மேடையின் ஒரு பகுதியை அல்லது ஒரு காட்சியமைப்பை ஒரு நிரை ஒளிகளின் மூலம் ஒளியூட்டுதல் செய்ய இது பயன்படும்.

ஒளியமைப்பின் நன்மைகள்

1. காண்பு நிலை அல்லது கட்புலனாகும் நிலையை விளக்குகிறது.

   நடைமுறையில் வெளிச்சத்தை ஏற்படுத்தல் அல்லது காண்பு நிலையை ஏற்படுத்தல்.
2. காலத்தையும் இடத்தையும் நிலைநிறுத்துதல்

   நாளொன்றின் நேரத்தைக் (விடியற்காலை, பகல், மாலை, சூரிய அஸ்தமனம்) காட்ட உதவும். ஆண்டின் பல்வேறு பருவ காலங்களையும் காட்ட முடியும்.
3. மனநிலையைச் சிருஷ்டிப்பதில் துணைபுரிதல்

   ஆற்றுவோர் குறித்த மனநிலையை வெளிப்படுத்தல்.

   மகிழ்வான மனநிலை : பிரகாசமான ஒளி, பிரகாசமான வர்ணங்கள்

   சோகம் சார்ந்த மனநிலை : மங்கல் ஒளி, மங்கல் வர்ணங்கள்
4. தயாரிப்பின் மோடியை மீளவலியுறுத்தல்

   நிகழ்வு யதார்த்த மோடி சார்ந்ததா அல்லது யதார்த்த மோடி சாராததா என்பதைக் காட்டும்.

   உதாரணம் : யதார்த்த மோடி : சூரிய ஒளி, விளக்குகள்
5. பார்வைக் குவிவுகளை வழங்கிக் காண்பிய இணைப்பாக்கத்தைச் சிருஷ்டித்தல்

   ஒளியை வெவ்வேறு இடங்களில் குவிப்பதன் மூலம் பார்வையாளர் எவை எவற்றைப் பார்க்க வேண்டும் என்பதைக் குவித்துக் காட்ட முடியும்.
6. காண்பிய அசைவில் ஒரு சீரினை அல்லது ஒரு லயத்தை நிலைநிறுத்தல்

   திடீர் திடீரெனச் செய்யப்படும் ஒளி மாற்றங்கள் ஒரு லயத்தையும் மெதுவான மாற்றங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறொரு லயத்தையும் நிலைநிறுத்தும். நடன அசைவுகள் போல ஒளிமாற்ற அசைவுகளையும் காட்சிமாற்ற அசைவுகளையும் தீர்மானிக்க வேண்டும்.

**மேடை ஒளியூட்டலின் பண்புகள்**

1. **பிரகாசம் அல்லது செறிவு:** மங்கலாக்கிகள் என்னும் கருவிகள் மூலம் ஒளியை மங்கலாக்கவும் பிரகாசமாக ஆக்கவும் முடியும்.
2. **வர்ணம்:** ஒளிக்கருவிகள் முன்பக்கத்தில் பல்வேறு வர்ணத்தாள்களைப் பொருத்துவதன் மூலம் அரங்கில் நூற்றுக்கணக்கான ஒளி வர்ணங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.
3. **திரை:** பல பக்கங்களிலிருந்தும் ஒளி பாய்ச்சப்படும் போது நிழல் விழாது தவிர்க்கப்படும்.
4. **அசைவு:** பல்வேறு வகையான மங்கலாக்கிகளைப் பயன்படுத்தி மேடையின் பல்வேறு இடங்களிலும் ஒளியை வெவ்வேறு வேளைகளில் அல்லது தேவைக்கேற்ப பாய்ச்ச முடியும். சூரிய உதயம், அஸ்தமனம் போன்றவற்றை மேடையில் படைக்க இந்த அசைவு உதவும். (05 புள்ளிகள்)

iv) **மேடை அலங்காரம்**

தனியே ஆடப்படும் பாரத நாட்டியத்திற்கு காட்சி ஜோடனைகள் தேவையில்லை. என்றாலும் மேடையை மங்களகரமாக அலங்கரிப்பது என்பது மிகவும் அவசியம். நல்ல நடனமானாலும் அதை விளிக்கும் விதத்தில் கலையம்சம் இருக்க வேண்டும். மேடையில் ஒருவர் ஆடுவதற்குக் கருப்பு / நீல நிறங்களில் திரையைப் பின்னாலும், பக்கங்களிலும் கட்டுவது வழக்கமாய் உள்ளது. பக்கங்களில் கட்டப்படும் திரைகள் ஒன்றன்பின் ஒன்றாகச் சற்று இடைவெளிகளுடன் கட்டுவது நல்லது. பக்கங்களைப் பூரணமாக மறைத்து விட்டால் விளக்குகள் வைக்க இடைவெளியின்றி ஆடுபவருக்கு காற்றோட்டம் இல்லாமல் போய்விடும். இந்தத் திரைகள் யாவும் ஒரே வண்ணத்தில் அமைய வேண்டும். பின் திரையில் கொசுவங்கள் நிறைய இருந்தால் இன்னும் நன்றாக இருக்கும். அப்படி இல்லாமல் ஒரே சீராக இருந்தால் அழகிய சீரான கோலங்களையோ, சிறிய சித்திரங்களையோ கொண்ட துணிகளை அதில் வைத்து அலங்கரிக்கலாம். தொம்பை, வாசமாலை போன்றவற்றைப் பயன்படுத்தலாம். குத்து விளக்குகளையும் மங்கலமான பொருட்களையும் பயன்படுத்தலாம்.

அலங்காரம் என்ற பெயரில் மிகையாகப் பொருட்களை மேடையில் வைத்து விட்டால் ஆடுபவர்களைவிட அந்தப் பொருட்கள் ரசிகர்களின் கவனத்தை ஈர்த்துவிடும். ஆலய சூழ்நிலையை உருவாக்கும்படி ஆங்காங்கே சிறிய பொருட்களை உபயோகிக்கலாம். ஆடுபவரின் இடப்பக்க மேடையின் முன் பகுதியில் ஆடல்வல்லானின் சிலையை வைக்கும் வழக்கம் இருக்கின்றது. இதனடியில் நல்ல துணியை விரித்து பூரண கும்பம் வைத்து இருப்பர். ஆடுபவரின் வலப்பக்கத்தில் பக்கவாத்தியக் கலைஞர்கள் அமர்ந்திருப்பர். அவர்களிற்கு சிறிய மேடை இருந்தால் அதனையும் ஜமுக்காளத்தில் மூட வேண்டும். நடன நாடகங்களில் சில குறிப்பிட்ட பயனை அளிக்க நிழல் வடிவங்களைப் பயன்படுத்தலாம். இன்னும் சில காட்சிகளை கொசுவத்தை திரைக்குப் பின் அமைத்தால் கனவுக் காட்சி / பேய்த் தோற்றம் / தெய்வத் தோற்றம் போன்ற சாதாரண வாழ்க்கைக்கும் உண்மைச் சம்பவத்திற்கும் அப்பாற்பட்ட பொருட்கள் உணர்த்தப்படும்.

8. தற்காலத்தில் பல்கலைக் கல்வியை நிறைவு செய்து வெளியேறும் நடனப் பட்டதாரிகள் நடனத்தைக் கற்பிக்க விரும்புகிறார்கள். மேடை நிகழ்ச்சிகளை வழங்க முன்வருவதில்லை. இதற்கான காரணங்கள்

- பணச் செலவு
  - i) பக்கவாத்தியங்களிற்கு
  - ii) கொஸ்ரியூமிற்கும், வேறு உடைகளிற்கும்
  - iii) அரங்கம், ஒலி, ஒளி, மண்டபத்திற்கும்
- ஆக்கத்திறனை வளர்த்துக் கொள்ளாமையால் புதிதாக உருப்படிகள் அமைப்பதில் பின்நிற்றல்.
- அர்ப்பணிப்பின்மை.
- நட்டுவாங்கத்திறனை வளர்த்துக் கொள்ளாமை.
- பாடசாலையில் அதிபர், ஆசிரியர்கள் ஒத்துழையாமை.
- பாடசாலையில் மேலதிக நேரத்தைச் செலவிட விரும்பாமை.
- திருமணமானவர்களிற்கு குடும்பப் பிரச்சினைகள்.
- நேரடியாக விமர்சனங்களை ஏற்கும் மனத்திடம் இன்மை.
- பாத்திர இலட்சணம் மாறுதல்.
- பிரத்தியேக வகுப்புகளில் கவனம்.
- தன்னம்பிக்கை இன்மை.
- உலகமயமாக்குதலால் - பார்ப்பதற்கு நேரமின்மை.
- ஊடகங்களின் ஆதிக்கம்.

இதுபோன்று மாணவர்களின் விடைகளில் வேறு குறிப்புகள் இருப்பின் அவற்றைப் பார்வையிட்டுப் புள்ளி வழங்கவும். (20 புள்ளிகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

Department of Examinations, Sri Lanka

இலங்கைப்பரீட்சைத் திணைக்களம்

53 | T | I

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2012 ஓகஸ்ட்

General Certificate of Education (Adv. Level) Examination, August 2012

பரதநாட்டியம் I | இரண்டு மணித்தியாலம்
Baratha Dancing I | Two hours

## பரதநாட்டியம் I

கவனிக்க:

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.
* விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்க.
* 1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (X) இடுவதன் மூலம் காட்டுக.

1. கிருஷ்ணனாட்டம், இராமனாட்டம் ஆகிய ஆட்டங்களிலிருந்து உருவாகிய நாட்டிய மரபு
   1) கதகளி 2) மணிப்புரி 3) ஒடிஸி 4) கதக் 5) பரதநாட்டியம்

2. சோக பாவம் எந்த ரஸத்தைத் தோற்றுவிக்கின்றது?
   1) சாந்தம் 2) ரௌத்ரம் 3) கருணை 4) பயம் 5) பீபட்சம்

3. பரத நாட்டியக் கச்சேரியில் நடுநாயகமாக விளங்கும் உருப்படி
   1) அலாரிப்பு 2) வர்ணம் 3) பதம் 4) கீர்த்தனம் 5) தில்லானா

4. மேளகர்த்தா எண் 28 இனைக் கொண்ட ராகம்
   1) ஹனுமத்தோடி 2) மாயாமாளவகௌளை 3) நடபைரவி
   4) ஹரிகாம்போஜி 5) தீரசங்கராபரணம்

5. ஆனந்தத் தாண்டவ மூர்த்தம் காணப்படும் திருச்சந்நிதி
   1) சிதம்பரம் 2) பிரகதீஸ்வரர் 3) சோமேஸ்வரம்
   4) அருணாசலேஸ்வரர் 5) விருத்தகரீஸ்வரர்

6. பரத நாட்டியத்திற்கு நட்டுவாங்கம் செய்வதில் தனக்கென ஒரு பாணியை அமைத்துப் புகழ் ஈட்டியவர்
   1) மீனாட்சி சுந்தரம்பிள்ளை 2) பொன்னையாபிள்ளை
   3) இராஜரட்ணம்பிள்ளை 4) இராமையாபிள்ளை
   5) தண்டாயுதபாணிப்பிள்ளை

7. துச்சாதனனைப் போன்ற கொடியவர்களுக்குத் தீட்டப்படும் தாடியின் வர்ணம்
   1) வெள்ளை 2) மஞ்சள் 3) ஊதா 4) கருநீலம் 5) சிவப்பு

8. கரணங்கள் முதன்முதலில் வெளிப்படுத்தப்பட்ட கோவில்
   1) சிதம்பரம் 2) கைலாசநாதர் 3) பிரகதீஸ்வரர்
   4) நந்திவர்மன்பாகூர் 5) அருணாசலேஸ்வரர்

9. பழமை வாய்ந்த குற்றாலக் குறவஞ்சியை இயற்றியவர்
   1) தஞ்சை சரபோஜி 2) திரிகூடராயப்பகவிராயர் 3) நாராயணதீர்த்தர்
   4) முத்துஸ்வாமி தீட்சிதர் 5) சுப்பராயர்

10. இசை ஆடல் பெருமளவில் காணப்படும் விருத்தி
    1) பாரதி 2) ஆரபதி 3) கைசிகி
    4) சாத்வதி 5) ஆரபதியும் சாத்வதியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. மிஸ்ரஜாதி அடதாளம் கண்டகதியாக மாறும்போது எடுத்துக் கொள்ளும் எண்ணிக்கை
1) 90 2) 110 3) 126 4) 162 5) 198

12. உணர்ச்சி வழியாக புகுந்து உயிரை நிறைவிப்பது
1) கவிதைக்கலை 2) நாடகக்கலை
3) இலக்கியக்கலை 4) நுண்கலை 5) கட்டடக்கலை

13. லய சுத்தம் என்பது
1) சரியான உடல் அசைவு
2) சரியான கால், கை அசைவு
3) கடினமான அசைவை வெளிப்படுத்தல்
4) கால் அசைவுகள் சரியான தாளத்திற்கு அமைதல்
5) நால்வகை அபிநயங்கள் மூலம் பாவத்தினை வெளிப்படுத்தல்

14. பணம், வஸ்திராபரணம் பெறும் முகமாக அநேக ஆண்களின் காதல் இச்சையைத் தீர்ப்பதற்கு இணங்கும் நாயகி
1) பரகியா 2) சாமானியா 3) முக்தா
4) விரஹோத்கண்டிதா 5) ஸ்வாதீனபதிகா

15. சம்போக சிருங்கார நாயகி என்பவர்
1) கண்டிதா 2) அபிசாரிகா 3) விப்ரலப்தா
4) சுவாதீனபதிகா 5) ப்ரோஷிதபத்ருகா

16. சிருங்காரத்தின் எதிர் ரஸம்
1) ஹாஸ்யம் 2) கருணை 3) பீபட்சம் 4) அற்புதம் 5) வீரம்

17. கத்தி வேஷத்தினை தரிக்கும் கதாபாத்திரம்
1) அர்ச்சுனன் 2) இராவணன் 3) அனுமான் 4) ஆதிவாசி 5) கடவுள்

18. மனிதனை வாகனமாகக் கொண்ட தேவர்
1) அக்கினி 2) நிருத்தி 3) யமன் 4) குபேரன் 5) மன்மதன்

19. தீரலலிதனுக்குரிய குணாதிசயங்களை எடுத்துக் காட்டும் கதாபாத்திரம்
1) துரியோதனன் 2) ஸ்ரீராமன் 3) கிருஷ்ணன் 4) புத்தர் 5) பலராமன்

20. அற்புத ரஸத்தின் ஸ்தாய் பாவம்
1) விஸ்மய 2) ரதி 3) ஹாஸ்ய 4) குரோத 5) உற்ஸாஹ

21. முதலாவது மண்டி அடவினை ஒரு தரம் செய்தலுக்கு ஒப்பானது
1) சமஸூசி 2) பார்ஷ்வஸூசி 3) மோடிதம் 4) ப்ரேங்கணம் 5) ப்ரோரிதானி

22. கௌரியம்மாளின் நாட்டிய ஆசான்
1) கிருஷ்ண நட்டுவனார் 2) முனுஸ்வாமி நட்டுவனார்
3) கந்தப்ப நட்டுவனார் 4) நாகப்பா நட்டுவனார் 5) சாமு நட்டுவனார்

23. ஐம்புலன்களையும் தனது பூரண கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பவன்
1) உத்தமநாயகன் 2) மத்தியம நாயகன்
3) அதம நாயகன் 4) சடன் 5) தக்ஷிணன்

24. சாத்வீகபாவ ஸ்லோகத்தில் 'பிரளய' என்பதன் கருத்து
1) ஸ்தம்பித்தல் 2) புல்லரித்தல் 3) வியர்த்தல் 4) மயக்கம் 5) நடுங்குதல்

25. பாலகோபாலா தரங்கம் ஆடப்படும் நாட்டிய மரபு
1) பரதம் 2) ஒடிஸி 3) கதக் 4) குச்சுப்புடி 5) மணிப்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. 'திருமயிலைக் குறவஞ்சி' எனும் நடன நாடகத்தினை இயற்றியவர்
1) பிரம்மஸ்ரீ கந்தசாமி ஐயர்
2) திரிகூடராயப்பகவிராயர்
3) பிரம்மஸ்ரீ நடராஜ ஐயர்
4) நாராயணதீர்த்தர்
5) பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர்

27. 'சிந்து வண்ணம்' இடம்பெறும் நடன மரபு
1) பஹாத்தரட்ட
2) சப்பிரகமுவ
3) உடரட்ட
4) கொஹோம்பகங்காரிய
5) வேஸ்நட்டும

28. தஞ்சையிலும் மதுரையிலும் ஆடற்கலை பெரிதும் வளர்ச்சியடையக் காரணமாகவிருந்த அரசர்களின் ஆட்சிக்காலம்
1) சங்ககாலம் 2) பல்லவர்காலம் 3) சோழர்காலம் 4) பாண்டியர்காலம் 5) நாயக்கர்காலம்

29. சேமக்கலம் எனும் வாத்தியத்தினை இசைப்பவர்
1) நட்டுவனார் 2) சிங்கடி 3) பொன்னானி 4) சூத்திரதார 5) அண்ணாவியர்

30. பண்டைய தமிழ்க் கூத்தர்கள் பயன்படுத்திய இசைக்கருவியான முகவீணை ஒரு
1) நரம்புக்கருவி 2) துளைக்கருவி 3) கஞ்சக்கருவி 4) தோற்கருவி 5) வில்கருவி 18

31. கரணங்களில் 50 ஆவது கரணத்தின் பெயர்
1) தலபுஷ்பபுடம்
2) புஜங்காஞ்சிதகம்
3) லலாடதிலகம்
4) லலிதம்
5) விஷ்ணுக்ராந்தம்

32. தரி கிட தொம்
கிடதக தரிகிட தொம்
தக்கிடதக தரிகிட தொம்
தித்தக் கிடதக தரிகிட தொம்
தத் தித் தக் கிடதக தரிகிட தொம்
இந்த யதி
1) ஸ்ரோதேவஹ யதி
2) சமயதி
3) விஷம யதி
4) கோபுச்ச யதி
5) டமருக யதி

33. ராதா ஒரு
1) முக்தா நாயகி
2) பிரகல்பாதீரா
3) மத்தியா
4) மத்தியாதீரா
5) மத்தியாஅதீரா

34. ஹாஷ்ய ரஸத்திற்குரிய மிகவும் பொருத்தமான வியபிசாரிபாவங்கள்
1) சோம்பல், கொடுங்குணம், சிரிப்பு
2) கோபம், பொறாமை, சிரிப்பு
3) சிரிப்பு, சந்தேகம், பொறாமை
4) பொறாமை, சோம்பல், சிரிப்பு
5) சந்தோஷம், கவலை, சிரிப்பு

35. பரத நாட்டிய மரபிலே முதன்முதலாக மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் அமைத்த உருப்படி
1) பதம் 2) கீர்த்தனை 3) ஜாவளி 4) தில்லானா 5) அஷ்டபதி

36. மேளகர்த்தா அட்டவணையில் எட்டாவது சக்கரத்தின் பெயர்
1) அக்னி 2) வேத 3) வஸு 4) ருத்ர 5) ஆதித்ய

37. மலையகத்து மக்களால் ஆடப்படும் காமன் கூத்திற்கு முக்கியமாக இசைக்கப்படும் இசைக்கருவி
1) மத்தளம் 2) உடுக்கை 3) சேமக்கலம் 4) தப்பட்டை 5) பறை

38. முந்திய சதிர்க் கச்சேரிகளில் பக்கவாத்தியம் காணப்பட்டது
1) நடனமாடுபவரின் பின்புறத்தில் நிற்க
2) நடனமாடுபவரின் பின்புறத்தில் அமர்ந்திருக்க
3) நடனமாடுபவர் பக்கவாத்தியமின்றி தானே பாட
4) மேடையின் வலது பக்கம் அமர்ந்திருக்க
5) மேடையின் இடது பக்கம் அமர்ந்திருக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39. கரணங்களை ஆய்வு செய்து கலாநிதிப்பட்டம் பெற்ற நாட்டியக் கலைஞர்
1) பத்மா சுப்பிரமணியம் 2) சுவர்ணமுகி 3) சந்திரலேகா
4) சுதாராணி ரகுபதி 5) கணகரேலே

40. மூத்த கலைஞர்களுக்கு இலங்கையில் இந்து சமய கலாசார அமைச்சு வழங்கிக் கௌரவிக்கும் பட்டம்
1) கலைமணி 2) நுண்கலைமாமணி 3) கலாவித்தகர் 4) கலாசூரி 5) கலாபூஷணம்

41. சனி பகவானைக் குறிக்கப் பயன்படும் முத்திரை
1) வலதுகை பதாகம் - இடதுகை சிகரம்
2) வலதுகை முஷ்டி - இடதுகை முஷ்டி
3) வலதுகை சிகரம் - இடதுகை திரிசூலம்
4) வலதுகை திரிசூலம் - இடதுகை சிகரம்
5) வலதுகை பதாகம் - இடதுகை சூசி

42. சட்ஜம், சுத்த ரிஷப, அந்தரகாந்தார, சுத்த மத்திம, பஞ்சம, சுத்ததைவத, கைசிகி நிஷாத இந்த மேளகர்த்தா ராகம்
1) நாமநாராயணி 2) ஹனுமத்தோடி 3) நடபைரவி
4) சாருகேசி 5) வகுளாபரணம்

43. சாக்கிய பாவம் என்பது
1) தாய்க்கும் சேய்க்கும் இடையேயானது.
2) ஊழியக்காரிக்கும் வீட்டுத் தலைவனுக்கும் இடையேயானது.
3) காதலனுக்கும் காதலிக்கும் இடையேயானது.
4) கணவனுக்கும் மனைவிக்கும் இடையேயானது.
5) நண்பர்களுக்கு இடையேயானது.

44. பதங்களின் தந்தை என அழைக்கப்படுபவர்
1) ஷியாமா சாஸ்திரி 2) க்ஷேத்ரக்ஞர்
3) மைசூர் சதாசிவராவ் 4) ஸ்ரீராமகவி 5) கவிகுஞ்சர பாரதி

45. பங்கரா என்னும் பிரசித்தி பெற்ற கிராமிய நடனம் காணப்படும் மாநிலம்
1) ஆந்திரா 2) பஞ்சாப் 3) ராஜஸ்தான் 4) பீகார் 5) அசாம்

46. மதன சைந்நியத்தில் மன்மதனின் ரதம்
1) குதிரை 2) அம்பு 3) தென்றல் 4) கிளி 5) அன்னம்

47. ஒரு பாதி ஆணாகவும் மற்றைய பாதி பெண்ணாகவும் வேடம் தரித்து, நீண்ட பின்னல் சடையுடன் முகத்தினை பெண் போன்று ஒப்பனை செய்து ஆடப்பட்ட கூத்து
1) பாவைக்கூத்து 2) கடையக்கூத்து 3) பேடிக்கூத்து 4) மரக்கால்கூத்து 5) துடிக்கூத்து

48. பதாக, ஸ்வஸ்திக, டோலா, அஞ்சலி, கடகாவர்த்தனம், சகட, பாஷ, கீலக, கபித்த, சிகர, கூர்ம ஹம்ஸாஸ்ய, அலபத்ம ஆகிய இந்த ஹஸ்தங்கள்
1) சம்யுத ஹஸ்தங்கள் 2) நிருத்த ஹஸ்தங்கள்
3) அசம்யுத ஹஸ்தங்கள் 4) பொருள் கை
5) தொழில் கை

49. என் அன்புக்குரிய கணவனைச் சந்திக்க அடர்ந்த காட்டுக்குள் நெடுந்தூரம் செல்ல வேண்டி இருக்கிறது. ஆனாலும் எனக்குப் பயமில்லை எனத் துணிவு கொண்ட நாயகி
1) அபிஸாரிகா 2) ப்ரோஷிதபத்ருகா
3) வாஸக ஸஜ்ஜிகா 4) ஸ்வாதீனபதிகா 5) கலஹாந்தரிகா

50. பரத நாட்டியத்திற்கு அபிநயதர்பணம் போல ஹஸ்தலக்ஷணதீபிகாவுக்குரியது
1) குச்சுப்புடி 2) கதகளி 3) மோகினியாட்டம்
4) கதக் 5) மணிப்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2012 ஒகஸ்ட்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2012

| | | |
|---|---|---|
| பரதநாட்டியம் | II | மூன்று மணித்தியாலம் |
| Baratha Dancing | II | Three hours |

## பரதநாட்டியம் II

அறிவுறுத்தல்:

* பகுதி I இல் முதலாம் வினா உட்பட இரண்டு வினாக்களுக்கும், பகுதி II இல் எவையேனும் மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

### பகுதி - I

1. i) அலாரிப்பின் இலட்சணத்தை எழுதுக.
   ii) மிஸ்ர அலாரிப்பினை தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுக.

2. i) தசாவதாரத்தில் ஒவ்வொரு அவதாரத்திலும் இடம்பெறும் நாயகர்களை வகைப்படுத்துக.
   ii) ஒவ்வொரு அவதாரங்களிலும் காணப்படும் பொதுவான ரஸங்களும் ஸ்தாய் பாவமும் யாவை?
   iii) ஒவ்வொரு அவதாரங்களினதும் நோக்கம் யாது?

3. i) நீர் கற்ற வர்ணத்தின் இரண்டாவது திரிகால தீர்மானத்தினை அங்க அடையாளங்களுடன் எழுதுக.
   ii) வர்ணத்தின் முக்கியத்துவம் பற்றி எழுதுக.

### பகுதி - II

4. பின்வருவனவற்றிற்குச் சிறுகுறிப்புகள் எழுதுக.
   i) குடக்கூத்து
   ii) ஜன்னிய ராகம்
   iii) 4 வகை விருத்திகள்
   iv) நாட்டிய சாஸ்திரம்

5. i) நாட்டியத்தின் மறுமலர்ச்சி பற்றி எழுதுக.
   ii) மறுமலர்ச்சிக்கு ஈ. கிருஷ்ணய்யரின் பங்களிப்பினை எழுதுக.

6. i) குச்சுப்புடி நடனத்தின் தோற்றம், வளர்ச்சி பற்றி எழுதுக.
   ii) குச்சுப்புடி நடன நாடகங்கள் பற்றி எழுதுக.

7. "இலங்கையில் பாடசாலைக் கலைத்திட்டத்தில் நாட்டியக்கலை புகுத்தப்பட்டமையானது, சிறந்த கலைஞர்களையும் இரசிகர்களையும் உருவாக்க உதவுகிறது" ஆராய்க.

8. "ஆலயங்களில் நடனக்கலையின் வளர்ச்சி" பற்றி எழுதுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரத நாட்டியம் I

**Bharatha Dancing I**

விடைகள் - 2012

| வினா இல | விடை | வினா இல | விடை | வினா இல | விடை | வினா இல | விடை | வினா இல | விடை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 1 | 11. | 1 | 21. | 3 | 31. | 3 | 41. | 4 |
| 02. | 3 | 12. | 4 | 22. | 2 | 32. | 1 | 42. | 5 |
| 03. | 2 | 13. | 4 | 23. | 1 | 33. | 3 | 43. | 5 |
| 04. | 4 | 14. | 2 | 24. | 4 | 34. | 3,4 | 44. | 2 |
| 05. | 1 | 15. | 4 | 25. | 4 | 35. | 2 | 45. | 2 |
| 06. | 4 | 16. | 3 | 26. | 5 | 36. | 3 | 46. | 3 |
| 07. | 5 | 17. | 2 | 27. | 1 | 37. | 4 | 47. | 3 |
| 08. | 3 | 18. | 2 | 28. | 5 | 38. | 1 | 48. | 2 |
| 09. | 2 | 19. | 3 | 29. | 3 | 39. | 1 | 49. | 1 |
| 10. | 3 | 20. | 1 | 30. | 2 | 40. | 5 | 50. | 2 |

(50 x 02 = 100 புள்ளிகள்)

பரத நாட்டியம் II

**Bharatha Dancing II**

விடைகள் - 2012

பகுதி - I

1. i) அலாரிப்பு என்பது பரத நாட்டியக் கச்சேரி நிரலில் முதன் முதலாக இடம்பெற்று வருகின்ற நடனமாகும். இந்நடனமானது ஆடல் நங்கை தன்னை இறைவனுக்கு அர்ப்பணிப்பதாகவும், குரு, பெரியோர், அவையோர் ஆகியோருக்கும் அஞ்சலி செலுத்தும் முகமாகவும் அமைந்துள்ளது. தாள லயத்தினை வெளிப்படுத்தும் சுத்த நிருத்தத்திற்கு நல் உதாரணமாகும்.

அலாரிப்பு என்ற சொல் அலர், அலரு, அலரி, அலரிம்பு, அலர்பு, அல்லரிப்பு எனப் பல வகையாகச் சுட்டப்படுகின்றது. அலர் என்ற சொல் தமிழில் மலர்வது எனப் பொருள்படும். இவ் உருப்படியானது நடனமாடுபவர் தன் உடலை மலராக நினைத்து கடவுளுக்குத் தன்னை அர்ப்பணிப்பது போல் அமைக்கப்பட்டுள்ளது.

பரத நாட்டியக் கச்சேரியின் தொடக்கத்தில் கடவுள் வணக்கமாகவும் சபை வணக்கமாகவும் இவ் ஆடல் வகையினைக் கச்சேரி சூடுபிடிப்பதற்கென ஆடப்படும் நடனம். கச்சேரி நிரலில் அலாரிப்பு முதன் முதலில் ஆடப்படும் உருப்படியாகும்.

"தா தெய் தெய்யும் தத் தாம் கிடதக" என்று ஆரம்பித்து "தாம் தித்தாம் தெய் தத்தெய்" என்று தொடரும் சொற்றொடர் மூன்று காலங்களில் தொடர்ந்து முழுமையாக மூன்று முறை உச்சரிக்கப்படும். இதற்கு முதலில் நின்றும் பின் அமர்ந்தும் இறுதியில் நகர்ந்தும் ஆட வேண்டும். அஞ்சலி கைகளுடன் கழுத்தாட்டல் பின்பு தோளை அசைத்தல், கைகளை அசைத்தல், முழங்காலை வளைத்தல், பாதங்களை உபயோகித்தல் என்று படிப்படியாக நடன அசைவுகள் இந்நடனத்தில் மலர்வதைக் காணலாம்.

அலாரிப்பு துளிர்விட்டு மெல்ல மலரும் நடனமாக விளங்குகின்றது. இதனை சிலர் அப்பியாச நடனம் என்பர். அங்க பிரத்தியாங்க உபாங்கங்கள் அனைத்திற்கும் இதில் வேலையுண்டு. இது தாளக்கட்டுப்பாட்டுக்குள் அடங்கிய தூயநிருத்த உருப்படியாகும். இவ் அலாரிப்பு நாட்டை இராகத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடப்படும். இதனை திஸ்ரம், சதுஸ்ரம், கண்டம், மிஸ்ரம், சங்கீரணம் ஆகிய ஐந்து ஜாதிகளிலும் செய்யலாம். (05 புள்ளிகள்)

ii) மிஸ்ர அலாரிப்பு

இராகம் – நாட்டை

தாளம் – மிஸ்ரசாபு

1ஆம் காலம்

| | | | | |
|---|---|---|---|---|
| தா ; ; | = | தெய் ; ; தெய், யும், | | // |
| தத், ; த, | = | தாம் ; கிடதக | | // |
| தத், தெய்,; | = | யா ; தெய், யும், | | // |
| தத், ; த, | = | தாம் ; கிடதக | | // |
| தாம் ; ; | = | ; ; தித், ; | | // |
| தாம் ; ; | = | ; ; கிடதக | | // |
| தெய், ; | = | ; ; தத், ; | | // |
| தெய், ; ; | = | ; ; கிடதக | | // |

2ஆம் காலம்

| | | | |
|---|---|---|---|
| தாம் ; தித், | = | தா ; கிடதக | // |
| தெய், ; தத், | = | தெய், ; கிடதக | // |

3ஆம் காலம்

| | | | | |
|---|---|---|---|---|
| தாம், தித் தா | = | ; தரி | கிடதக | // |
| தெய் ; தத் தெய், | = | ; தரி | கிடதக | // |
| தாரி தகிண | = | ஜெம், ; | ததரித | // |
| கிண ஜெம் ; ; | = | தகணக | ஜெம், தரி | // |
| தக ததிங்கிண | = | தொம், ; | தக ததிங் | // |
| கிணதொம், ; | = | தகததிங்கிணதொம், | | // |
| தாம் ; ; | = | தாம் ; | ; ; | // |
| த்ருகுடு தக தக | = | த்ருகுடு தக | த்ருகுடு தக | // |
| த்ருகுடு தக தக | = | த்ருகுடு தக | த்ருகுடு தக | // |
| த்ருகுடு தக தக | = | த்ருகுடு தக | த்ருகுடு தக | // |
| தளாங்கு தொம், | = | தக ததிங்கிண தொம், | | // |
| தா ; ; | = | தெய் ; | தெய், யும், | // |
| தத், ; த, | = | தாம் ; | கிடதக | // |
| தாம் ; ; | = | ; ; | ; ; | // |

(15 புள்ளிகள்)

2. i) நாயகன் — அவதாரம்

| நாயகன் | அவதாரம் |
|---|---|
| தீரோதாத்தன் | ஸ்ரீராமர் (ஸ்ரீராமர் அவதாரம்) |
| தீரோத்ததன் | இராவணன் (ஸ்ரீராமர் அவதாரம்) |
| தீரலலிதன் | கிருஷ்ணர் (ஸ்ரீராமர் அவதாரம்) |
| தீரசாந்தன் | புத்தர்பெருமான் |

(05 புள்ளிகள்)

| ii) ரஸம் | ஸ்தாயி பாவம் |
|---|---|
| வீரம் | உற்சாகம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| அற்புதம் | விஸ்வமயம் | |
| பயம் | பயம் | |
| கோபம் (ரௌத்தரம்) | குரோதம் | (03 புள்ளிகள்) |

iii) தசாவதாரம் அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாடுவதற்காக திருமால் எடுத்த அவதாரம்.

1. மச்ச அவதாரம் - சோமுகாசுரன் கடலுக்கடியில் ஒளித்த வேதங்களை மீட்பதற்காக.
2. கூர்ம அவதாரம் - தேவர்கள் திருப்பாற் கடலைக் கடையும் போது அமுதம் பெறுவதற்கு உதவுவதாகும்.
3. வராக அவதாரம் - இரணியகசிபு பூமியை கடத்திச் சென்று பாதாளத்திற்குள் ஒளித்த போது காப்பதற்காகும்.
4. நரசிம்ம அவதாரம் - இரண்யாட்சனை அழித்து பக்தப்பிரகலாதனுக்கு அருள் வழங்குவதற்காகும்.
5. வாமன அவதாரம் - மாபலிச் சக்கரவர்த்தியின் ஆணவத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டுவதற்காகும்.
6. பரசுராம அவதாரம் - கார்த்தவீரியனை அழித்து தந்தை சொல்லை நிலைநாட்டுவதற்காகும்.
7. இராம அவதாரம் - இராவணனை அழித்து தர்மத்தை நிலைநாட்டுவதற்காகும்.
8. பலராம அவதாரம் - } ஹம்சன் சிசுபாலன் போன்றோரை அழித்து தர்மத்தை நிலைநாட்டு
9. கிருஷ்ண அவதாரம் - } வதற்காகும்.
10. கல்கி - அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டுவதற்காகும்.

(12 புள்ளிகள்)

3. i) தீர்மானம் (11ஆம் பக்கத்தில் பார்க்க) (05 புள்ளிகள்)

ii) **வர்ணத்தின் முக்கியத்துவம்:** பரத நாட்டியத்தில் மிகவும் முக்கியமான உருப்படி வர்ணமாகும். வர்ணம் நாட்டியத்தின் இதயம் போன்றது. இது பூர்வாங்கம், உத்தராங்கம் என இரு பாகங்களைக் கொண்டது. இதில் பூர்வாங்கமானது பல்லவி, அனுபல்லவி, முத்தாயிஸ்வரத்தையும் உத்தராங்கமானது சரணம், சிட்டாய்ஸ்வரத்தையும் கொண்டிருக்கும்.

வர்ணத்தில் ஒவ்வொரு ஸ்வரக் கோர்வைகளுக்கும் சாகித்தியமும் அமைந்திருந்தால் அது பதவர்ணமாகும். இது சௌக்க காலத்தில் பாடி ஆடுவதற்கு இடமளிக்கக்கூடிய கருத்துக்களை ஊகிக்கும்படியாக பாடல் அமைந்திருக்கும். பத வர்ணங்களை தான வர்ணங்கள் போல மூன்று காலத்தில் பாடுவதில்லை. வார்த்தைகள் அதிகம் கொண்டு ஆனால் கீழ் காலத்திலேயே பாடப்படும். சிலர் உத்தராங்கத்தில் விறுவிறுப்பான காலத்தில் எடுப்பர். பதவர்ணத்திலே ஒவ்வொரு வாக்கியத்திற்கும் இடையில் ஜதிக் கோர்வைகள் சேர்க்கப்பட்டு ஆட வேண்டும். எத்துக்கடைப் பல்லவி (சரணம்) ஆரம்பமாகும்போது விறுவிறுப்பான ஜதி சேர்க்கப்பட்டிருக்கும். இசை பாவம் நடனம் ஆகிய மூன்று அம்சத்திலும் மிகச் சிறப்பாக விளங்கக் கூடிய உருப்படி வர்ணம். இதைச் சுமார் 20 நிமிடத்திலிருந்து ஒரு மணித்தியாலம்வரை ஆடலாம். பத வர்ணம் நர்த்தகியின் அயராத அப்பியாசத்தை மெருகுபடுத்திக் காட்டுவதாகத் திகழ்கின்றது. பொதுவாக வர்ணம் நாயகா நாயகி பாவங்களில் அமைந்திருக்கும். (15 புள்ளிகள்)

## பகுதி - II

4. i) **குடக்கூத்து**

தென்னிந்தியாவில் பதினொரு வகைக் கூத்து மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. மாதவி ஆடிய பதினொரு வகைக் கூத்துகள் அல்லியம், கொடுகொட்டி, குடக்கூத்து, குடைக்கூத்து, மற்கூத்து, பாண்டரங்கம், துடிக்கூத்து, பேடிக்கூத்து, மரக்கால்கூத்து, பாவைக்கூத்து, கடைக்கூத்து என்பனவாம். இதிலே குடக்கூத்து பாணாசுரனால் சிறைப்பட்ட தன் மகனை மீட்பதற்காக மன்மதன் மண்ணாலும் செம்பாலும் எலும்பினாலும் செய்யப்பட்ட குடத்தைத் தலையின் மேல் வைத்து ஆடிய நடனம். இந்நடனம் பல வகைப்படும். நடனம் ஆடுபவர் ஒன்றையோ அல்லது பல குடங்களையோ தலையில் தாங்கிய வண்ணம் மத்தளத்தின் வாசிப்புக்கேற்றவாறு ஆடுவர். இந்நடனத்தை இடைச்சேரிப் பெண்களும் ஆடுவார்கள். தங்களுடைய குல தெய்வமாகிய கிருஷ்ணனைப் போற்றிப்பாடி ஆடும் நடனமாதலால் அவர்களுக்குப் பிடித்த நடனமாக இருந்தது. நடனத்தை ஆடுபவர்கள் குடங்களைத் தலைமேலும் தோள் மீதும் தாங்கி ஒவ்வொன்றாக ஆகாயத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம் : ஆனந்தபைரவி
தாளம் : ஆதி

**தீர்மானம் II**

|4 O O

தஜ்,ஜெம், தரிதக தா ; தகுந்தரி கிடதக தகஜெம், தரிதக தெய்,; / தகுந்தரிகிடதக தஜ்,ஜெம், தரிதக / தா; தகஜெம், தரிதகதெய், ; //
தஜ்,ஜெம், தரி தகஜெம், தரி தா, தீ, கிடதகதரி கிடதொம், ;
தஜ், ஜெம், தரி /தகஜெம், தரி தா, தீ, கிடதகதரிகிட / தொம், ; தஜ், ஜெம், தரி
தகஜெம், தரி //
தா, தீ, கிடதகதரிகிடதொம், ; ; தத்; தணா தத்; தணா தத்; த / ணா ....................................

இராகம் : தன்யாசி
தாளம் : ஆதி

**தீர்மானம் II**

|4 O O

தத், தத், கத், தித், தா ; தத் , தக், கத், தித், கிடதகதரிகிட தொம், ; கிடதகதரிகிட /தொம், ; கதித், தநஜ், ஜொணுதாஹத /கிடதகதரித், த தணதணதா; //
தணத், தஜொணு ஜொணு தா; ஜொணுத், த திமிதிமி தா ; திமித், தகிடதக / தா ; தரித், த தணதணத், த ஜொணு /ஜொணுத், ததிமி திமித், த கிடதரிதத //
ணதணதஜொணு ஜொணுததிமி திமிதகிட திதா திதா திமிதகிட
ததிங்கிணதொம் / ;;;;;; தரிதத / ணதணதஜொணுஜொணுத திமிதிமிதகிட //
திதா திதாதிமிதகிட ததிங்கிணதொம் ;;;;;; தரிதத /ணதணதஜொணுஜொணுததிமி
திமிதகிட / திதாதிதா திமிதகிட ததிங்கிணதொம் //



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எறிந்து பிடித்து ஆடினார்கள். இது குடங்கள் வட்ட வடிவமாக அசைவதைக் குறித்து. இந்நடனம் கேரளாவில் காணப்படும் பிரபல்யம் வாய்ந்த விஷ்ணு கோயிலுக்கு வழிகாட்டும் படிகளில் உள்ள இரும்புப் பாதையில் குறிக்கப்பட்டுள்ளது. கிருஷ்ணனை போரில் வென்ற போது குடக்கூத்து ஆடியதாக சிலப்பதிகார உரை எழுதிய ஆசிரியர் கூறுகின்றார். பாணாசுரனை போரில் வெல்வதற்காக குடக்கூத்து ஆடியதாக சிலப்பதிகார உரை கூறுகின்றது. (05 புள்ளிகள்)

ii) **ஜன்னிய ராகம்**

ஜனக ராகத்தில் இருந்து தோன்றியது ஜன்னிய ராகம் எனப்படும். இது சேய் ராகம், பிறந்த ராகம் என்ற வேறு பெயர்களாலும் அழைக்கப்படுகின்றது. ஒவ்வொரு ஜன்னிய ராகமும் அதன் தாய்ராகத்தின் ஸ்வரங்களை அனுசரித்தே இருக்கும். ஜன்னிய ராகங்கள் வர்ஜ ராகம், வக்ர ராகம், உபாங்க ராகம், பாஷாங்க ராகம், நிஷாதாந்திய ராகம், தைவதாந்திய ராகம், பஞ்சமாந்திய ராகம் எனப் பல வகைப்படும். ஜன்னிய ராகங்களுக்கு உதாரணங்கள் : மோஹனம், ஹம்சத்வனி, மத்தியமாவதி, சகானா, ஸாவேரி, கானடா, அடானா. (05 புள்ளிகள்)

iii) **4 வகை விருத்திகள்**

நாட்டிய சாஸ்திரம் விருத்திகளை புராண நோக்கில் விளக்குகின்றது. அவ்விளக்கம் வருமாறு:

திருமால் மதுகைபட அரக்கர்கள் போர் செய்கின்ற போதே அவர்களுக்கிடையே சினம் பொங்கும் உரையாடல் தோன்றின. அது பாரதி விருத்தி ஆயிற்று. அரக்கர் திருமால் போரில் திருமாலின் வில்லாகிய சாரங்கம் என்பதின் நாணில் இருந்து தோன்றியது ஸாத்வதி விருத்தி. திருமால் விசித்திரமான அங்க ஹாரங்களை செய்ய அதிலிருந்து கைசிகி விருத்தி தோன்றியது. அரக்கர்களுடன் திருமால் விரைவும் பல வகை உணர்வும் மிகுந்த நடைபட பிரயோகங்கள் செய்ய அவைகள் ஆரபடி விருத்தி ஆயின.

இவைகளை பிரம்மா

1. திருமாலின் உரையாடல் - பாரதி விருத்தி
2. மண உணர்வுகள் - சாத்வதி விருத்தி
3. செய்கைகள் - கைசிகி விருத்தி
4. போர் முறைகள் - ஆரபடி விருத்தி என்று வகுத்துக் கொடுத்தார் என்று ஓர் இடத்தில் விளக்கிப் பின்னர் வேறு ஓர் இடத்தில் சொல்லைச் சார்ந்த பாரதி என்பதை ரிக் வேதத்தில் இருந்தும் மனதைச் சார்ந்த சாத்வதியை யசுர் வேதத்தில் இருந்தும் அபிநயத்தைச் சார்ந்த கைசிகியை சாம வேதத்திலிருந்தும் ஆரபடி விருத்தி அதர்வண வேதத்திலிருந்தும் பெற்றதாக விளங்குகின்றார்.

(05 புள்ளிகள்)

iv) **நாட்டிய சாஸ்திரம்**

பரத முனிவரால் எழுதப்பட்ட நூல் நாட்டிய சாஸ்திரம் ஆகும். கி.மு.2 - கி.பி.2 காலப் பகுதிகளில் எழுதப்பட்டதாகக் கருதப்படுகிறது. இந்நூல் பரதசாஸ்திரம் எனவும் அழைக்கப்படுகிறது. இது 36 அத்தியாயங்களைக் கொண்டுள்ளது.

முதலாவது அத்தியாயத்தில் நாட்டிய சாஸ்திரம் தோன்றிய வரலாறும், இரண்டாவது அத்தியாயத்தில் நாட்டிய அரங்கு பற்றியும், மூன்றாவது அத்தியாயத்தில் தெய்வ வழிபாட்டு முறைகள் மன்றங்கள் பற்றியும், நான்காம் அத்தியாயத்தில் 108 கரண வகைகளையும், ஐந்தாம் அத்தியாயத்தில் நாட்டிய நிகழ்ச்சிகள் அரங்கில் செய்ய வேண்டிய முறை பற்றியும், ஆறாம் ஏழாம் அத்தியாயத்தில் அபிநய முறைகள் பாடல் முறைகள் பற்றியும், எட்டாம் அத்தியாயத்தில் முத்திரைகள், அசைவுகள் பயன்படுத்தும் முறை பற்றியும், இருபத்திநான்காம் அத்தியாயத்தில் இரவு, பகல், நிலா, மகிழ்ச்சி, ஊக்கம் அவைகளுக்குரிய அபிநயம் பற்றியும், இருபத்தாறாம் அத்தியாயத்தில் இயற்கையின் மாறுபாடுகள் பற்றியும், இருபத்தியேழாம் அத்தியாயத்தில் நாட்டியம் வெற்றி பெறத் தேவையானவை பற்றியும், இருபத்தெட்டாம் அத்தியாயம் முதல் 33 ஆம் அத்தியாயம் வரை இசை, பண், தாளம், தாள கதிகள் என்பவை பற்றியும், முப்பத்துநான்காம் அத்தியாயம் தாளக் கருவி பற்றியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பத்தைந்தாம் அத்தியாயம் பாத்திரங்களை தேர்ந்தெடுக்கும் முறையையும் முப்பத்தாறாம் அத்தியாயம் நடனத்தின் பயனையும் விளக்குகின்றது.

நாடக அரங்கு கலை அனைத்தையும் பற்றிக் கூறும் பெரும் களஞ்சியமாக நாட்டிய சாஸ்திரம் விளங்குகின்றது. (05 புள்ளிகள்)

5. i) 19ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலிருந்து 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரை நாட்டியக் கலை நலிவடைந்து காணப்பட்டது. பின் வந்த கலைஞர்கள் கலை ஆர்வலர்கள் கல்வியியலாளர்களின் சிந்தனையும் வெளிநாட்டு நடனக் கலைஞர்களின் ஆர்வமும் நாட்டியக் கலையில் மறுமலர்ச்சி ஏற்பட ஏதுவாயின.

உலகப் புகழ்பெற்ற ரஷ்ய பலே நடன ராணியான அன்னா பவ்லோ 1922இல் இந்திய விஜயத்தின் போது கிருஷ்ணன் ராதா, இந்துத் திருமணம் என்ற இரு நாடகங்கள் தயாரித்து லண்டனில் உள்ள உதயசங்கரின் உதவியை நாடி அவரின் அறிவுரையால் நாட்டிய நாடகத்தில் ஈடுபட்டு உலகப் புகழ் பெற்றமை நாட்டிய மறுமலர்ச்சிக்கு உதவியது.

ஸ்ரீமதி ருக்மணி அருண்டேல் அன்னாவை நாட அன்னாவால் அறிவுறுத்தப்பட்டு தமிழகத்தின் சிறந்த நடனமாக பரதக் கலையைக் கற்குமாறு தூண்டப்பட்டமையால் சுதேசக் கலையான நாட்டியக்கலை மீள்நோக்குப் பெற்று மறுமலர்ச்சி பெற்றது.

வெளிநாடுகளிலும் பரதநாட்டியத்தை பரவச் செய்தவராக அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இருந்து 1925 இல் இந்தியாவிற்கு பெருமை தந்த ரூத் வெயின்ட் டென்னிவும் அவரது கணவரான டெட்ஷான் என்ற நடனக் கலைஞர்களின் பங்கு சுதேசக் கலைஞர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த நாட்டிய மறுமலர்ச்சி உருவாகத் தொடங்கியது.

1917 இல் ரவீந்திரநாத் தாகூர் தான் கண்ட மணிப்புரி நடனத்தால் கவரப்பட்டு தனது சாந்தி நிகேதனத்தில் அறிமுகம் செய்து மறுமலர்ச்சிக்கு உதவினார்.

கேரளத்தில் கவிஞர் வள்ளத்தோல் என்பவர் கதகளி எனும் நாட்டிய நடனத்திற்கு புத்துயிர் கொடுத்து நடனக்கலை மறுமலர்ச்சியில் உதவினார்.

மேடம் மேனகா என்ற கதக் நடனக் கலைஞர் பெர்லின் ஒலிம்பியாட்டில் பல அகில உலக பரிசு பெற்றமையும் நாட்டிய மறுமலர்ச்சிக்கு உதவியது.

லாடுமேரி எனும் அமெரிக்கப் பெண்மணி 1936 இல் பரதமும் கதக்கும் கற்றார். இதன் மூலம் ராம்கோபாலும் பந்தனை நல்லூர் மீனாட்சி சுந்தரமும் பிள்ளையிடமும் முத்துக்குமாரப் பிள்ளையிடமும் பரதம் பயின்று புகழ்பெற்று இந்தியர்களை நடனத்தில் ஈடுபடுத்தி ஆக்கத்தையும் ஊக்கத்தையும் ஏற்படுத்தினார்.

பிரபல வழக்கறிஞரான திரு. ஈ. கிருஷ்ணய்யர் அவர்களின் நடன ஆற்றுகைகள் இக்கலையின் மறுமலர்ச்சிக்கு வித்திட்டன.

ருக்மணி தேவியின் நடனப் பிரவேசம் நாட்டிய வரலாற்றில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது. பந்தனை நல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளையிடமும் மைலாப்பூர் கௌரி அம்மாளிடம் இருந்தும் பரதநாட்டியப் பயிற்சிக்கான பாடங்களைக் கற்றுக் கொண்டார்.

1835 இல் மேடை நிகழ்ச்சியில் பரத நாட்டியத்தின் போக்கில் மாற்றம் ஏற்படுத்தப் பல கீர்த்தனைகளை ருக்மணி அம்மையார் ஏற்படுதினார்.

பக்திக்கு முக்கியத்துவம் கொடுக்கும் பதங்களை புகுத்தி கீழ்த்தரமான எண்ணங்களை மாற்றிய மைத்தார். கலாஷேத்ரா கலைஞர்கள் ஒன்றுகூடும் இடமாகத் திகழ்ந்தது. சதிர் சாஸ்திரிய நடனமாகியது.

எல்லா குல நடுத்தரக் குடும்பப் பெண்கள் நடனம் கற்க முன்வந்தமை குறிப்பிடத்தக்கது. பரதக்கலை மறுமலர்ச்சியின் விளைவு கோயில்களில் இருந்து அரங்கத்திற்கு மாறியது. (10 புள்ளிகள்)

ii) மறுமலர்ச்சிக்கு ஈ. கிருஷ்ணய்யரின் பங்களிப்பு

இந்திய விடுதலையை இலட்சியமாகக் கொண்டு தோன்றிய விழிப்புணர்ச்சியின் தாக்கம் பண்டைய கலைகள் புத்துயிர் பெறுவதற்குக் காரணமாக அமைந்தது. 1926இல் இந்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திர போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ஈ. கிருஷ்ணய்யர் என்ற வழக்கறிஞர் சுப்பிரமணிய பாரதியாரின் பாடல்களைப் பாடியும் ஆடியும் மக்களிடையே சுதந்திர விழிப்புணர்வை ஏற்படுத்தி வந்தார். மேலட்டூர் நடேசய்யரிடம் பரதம் பயின்ற இவர் தானே பெண் வேடமிட்டு பரத நடனத்தை ஆடி மக்களிடையே இக்கலைக்கு ஏற்பட்டிருந்த களங்கத்தைத் துடைக்க முற்பட்டார். இம் முயற்சியில் art nautch இயக்கத்தினரின் எதிர்ப்புக்களை அவர் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. 1931 இல் சென்னை சங்கீத அக்கடமியில் திருவல்லிப்புத்தூர் கல்யாணியின் குமாரத்திகளான ராஜலட்சுமி ஜீவரட்ணம் ஆகியோரின் நடன நிகழ்ச்சிகளையும் நடத்தினார். 1932இல் அவர் அக்கடமியில் ஏற்பாடு செய்த மைலாப்பூர் கௌரி என்ற தேவதாஸியின் நடனமும் மிகப் பெரிய எதிர்ப்பை உருவாக்கின. இதைத் தன் எழுத்தாலும் செயலாலும் முறியடித்த கிருஷ்ணய்யர் 1933இல் கல்யாணியின் குமாரத்திகளை திரும்பவும் மேடை ஏற்றினார். இம்முறை இந்நிகழ்ச்சி பெரிய வரவேற்பைப் பெற்றது.

சென்னையில் சங்கீத சபை ஒன்றை நிறுவ வேண்டும் என 1919இல் திட்டமிட்டு சென்னையில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் ஒரு நிகழ்வாக அகில இந்திய இசை மாநாடு நடைபெற்றது. இதில் ஈ. ராதாகிருஷ்ணய்யரும் பேராசிரியர் சாம்பமூர்த்தியும் நியமிக்கப் பட்டனர். இதனைக் தொடர்ந்து 1928இல் சென்னை சங்கீத வித்வசபை தொடங்கப்பட்டது.

நடனக் கலையில் சில மாற்றங்களை ஏற்படுத்தினார். பக்கவாத்தியங்களாக இனிய நாதமுள்ள வீணை, தம்புராக்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி கச்சேரி செய்ய வேண்டுமென வழிகோலினர்.

இக்கலையால் இவருக்கு பல விருதுகள், பரிசில்கள், புகழ்மாலைகளும் வழங்கப்பட்டன. இதன் தூய்மை பேண பெரு மதிப்பும் அளித்து ஒவ்வொரு வீட்டிலும் கல்வி நிறுவனங்களிலும் பயில்வதற்கு இவர் வழிகோலியமை நன்கு பாராட்டத்தக்கது. (10 புள்ளிகள்)

6. i) குச்சுப்புடி நடனத்தின் தோற்றம், வளர்ச்சி

1. ஆந்திர மாநிலத்தின் கிருஷ்ண மாவட்டத்தில் குச்சுப்புடி என்ற கிராமத்தில் உருவான ஆடல்.
2. இங்கு வாழ்ந்த பிராமணர்கள் இதை உருவாக்கி வளர்த்தனர்.
3. கோல்கொண்டா மன்னரான அப்துல்ஹசன் தனேசா காலத்தில் குச்சுப்புடி நடனம் நேர்த்தி பெற்றது.
4. சித்தேந்திர யோகி என்பவர் இன்றைய குச்சுப்புடி ஆடல் வடிவத்தை அமைத்தவர் ஆவார்.
5. சித்தேந்திர யோகியின் குச்சுப்புடி நாட்டிய அமைப்பான பாமா கலாபம் ஆண்களுக்குரியதாகக் காணப்பட்டது.
6. காலப்போக்கில் இக்கலை பெண்களிடம் சென்றடைந்தது.
7. ஆந்திராவை மையமாகக் கொண்டு கி.பி. 220-225 வரை ஆட்சி செய்த விஷ்ணுவர்மன் ஆலயக் கிரியைகளில் நடனக் கலையைப் பயன்படுத்தியதாகக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.
8. ஆரம்ப காலத்தில் சைவசமயச் சார்புடைய ஆடல் பின் வைஷ்ணவ சமயச் சார்பாக வளர்ச்சி யடைந்துள்ளது.
9. ஆலயங்களில் கிருஷ்ண வழிபாடு செல்வாக்குப் பெற அந்தண அடியார்கள் பாகவத புராணத்தை அடிப்படையாகக் கொண்டு நடன நாடகங்களை அமைத்தனர்.
10. இவ்வாறு உருவான நடனக் கலைஞர் பாகவதர் என அழைக்கப்பட்டனர். இந்த ஆடல் வடிவம் பாகவத மேளா என அழைக்கப்பட்டது.
11. குசீலபுரம் என்ற பெயருடைய கிராமத்தின் பெயர் காலப்போக்கில் குச்சிப்புடி ஆயிற்று.
12. தமிழில் கூத்தி என்ற சொல் நடனக் கலைஞரைக் குறிப்பதைப் போல் தெலுங்கில் குச்சி என்ற சொல் நடனக் கலைஞரைக் குறிக்கும்.
13. புடி என்பது ஆற்றங்கரையில் வண்டல் மண் உள்ள ஒரு கிராமத்தைக் குறிக்கும்.
14. எனவே குச்சுப்புடி என்பது ஆற்றங்கரையிலுள்ள நடனக்காரரின் கிராமம் எனப் பொருள்படுகின்றது.
15. நாயக்க மன்னரான அச்சுதப்ப நாயக்க மன்னன் 1505இல் நடைபெற்ற போரினால் தஞ்சாவூருக்கு இடம்பெயர்ந்த கலைஞர்களுக்கு ஆதரவளித்து இதனை வளர்த்தான். (12 புள்ளிகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii) குச்சுப்புடி நடன நாடகங்கள்

1. கோவிலுக்கு முன் அமைக்கப்பட்ட அரங்கில் இந்நடன நாடகங்கள் இரவுவேளையில் நடைபெற்றன.
2. அரங்கில் வெளிச்சத்தைத் தோற்றுவிக்க இரு விளக்குகள் பயன்பட்டன. பல வர்ணத்திரைச் சீலைகளைத் தாங்கியிருப்பர்.
3. நடன நாடகத்தில் வாய்ப்பாட்டு, மிருதங்கம், சல்லரி முதலியன இடம்பெறும்.
4. ஆண்களே பெண் பாத்திரங்களை ஏற்றுக் கொள்வர்.
5. பாடலின் பொருள், அபிநயம் ஊமை நாடகம் நடனம் முதலியவற்றால் புலப்படுத்தப்படும்.
6. இராமாயணத்தை அடிப்படையாகக் கொண்ட இராம நாடகம் ருக்மிணி கல்யாணம், பிரகலாத சரிதம், பாணாசுரன் பாமாகலாபம் முதலானவை குச்சுப்புடி நடன நாடகங்கள்.
7. சித்தேந்திர யோகியின் பாமாகலாபம் குச்சுப்புடி பாகவதர்கள் விரும்பும் நடன நாடகமாகும்.
8. நாராயண தீட்த்தரின் (தீர்த்த நாராயணபதி) கிருஷ்ண லீலா தரங்கிணி குறிப்பிடத்தக்கது.
9. அரங்கிலுள்ள திரைக்குப் பின்னால் பிரார்த்தனைகள் இடம்பெறும். சூத்திரதாரி எனப்படும் அரங்க நடத்துனர் பார்வையாளர் முன் தோன்றி தெய்வத்தைக் கூவி அழைத்துப் பாடுவார்.

(08 புள்ளிகள்)

7. 1. இலங்கையில் பாடசாலைக் கலைத்திட்டத்தில் நாட்டியக்கலை புகுத்தப்பட்டமையானது சிறந்த கலைஞர்களையும் இரசிகர்களையும் உருவாக்க உதவுகின்றது.
2. மாணவரிடையே உள்ள தனியாள் வேறுபாட்டிற்கமைய அவர்களே ஒரு கலைஞனாக ரசிகனாக நடனக்கலையின் கற்றல் செயற்பாடுகள் உதவுகின்றன.
3. ஒருவனிடமுள்ள உள்ளார்ந்த திறன்களை வெளிக் கொணர்ந்து அவனது இயலுமைக்கேற்ப அவன் ரசிகனாக அல்லது கலைஞனாக உருவாக வழிகாட்டுகிறது.
4. மனிதனின் கற்பனைத்திறன் புலன்நுகர் காட்சிகள் சிந்தனை ஆர்வம் முதலிய உளவியல் உள்ளடங்கங்கள் பரந்த செயற்பாட்டினை நாட்டியக்கலை ஏற்படுத்துவதால் சிறந்த கலைஞன் சிறந்த ரசிகன் உருவாக முடிகிறது.
5. காணல், கேட்டல் ஆகிய புலன்களை ஒன்று சேர்த்துச் செயற்படுத்துவதால் உலகியல் அறிவியல் வளர்க்க வேண்டிய முன்னறிவு கிடைப்பதால் சிறந்த ரசிகர்களும் கலைஞர்களும் உருவாகிறார்கள்.
6. நடனக் கலையைப் பாடசாலைகளில் சிறு வயது முதல் பயில்வதால் உடல் உள ஆன்மீக முதிர்ச்சி மாணவர்களுக்குக் கிடைத்தது. இது சிறந்த கலைஞன் ரசிகன் உருவாகத் தேவையான ஆளுமைப் பண்புகளைத் தருகிறது.
7. கற்றற் செயற்பாடுகளில் ஒன்றான நயத்தல் பகுதியில் மாணவர்கள் பல்வேறு கலை நிகழ்ச்சிகளைப் பார்வையிடுவதால் அக் கலைஞர்கள் போல் தாமும் வளர்ச்சியுற உந்தப்படுவது கலைஞர்கள் உருவாக உதவுகிறது.
8. பாடசாலைக் கலைத்திட்டத்தில் நடனப் பாடத்தைக் கற்கும் போது மாணவர்கள் ஆக்கச் செயற் பாடுகளில் ஈடுபடுவது அவர்களிடம் மறைந்துள்ள ஆற்றலை வெளிக்கொண்டு வரும் சந்தர்ப்பம் கிடைக்க உதவுகிறது. இதுவும் ஒரு கலைஞன் ரசிகன் உருவாக வழி காட்டுகிறது.

(20 புள்ளிகள்)

8. "ஆலயங்களில் நடனக்கலையின் வளர்ச்சி"

1. ஆலயங்களில் கலைகளை வளர்ப்பதற்கு ஆதாரமாய் அமைவதற்கு தமிழகத்தை ஆண்ட மூவேந்தர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.
2. கற்கோவில்கள் கலைகளைப் பேணிக் காப்பதற்கென நிர்மாணித்த கரணங்கள், சிற்பங்கள், ஓவியங்கள் கலை வடிவங்களைப் பேணுகின்றன.
3. ஆரம்ப காலத்தில் புராண வரலாறு, வேதங்கள், ஆகமங்கள் கலைகளின் வளர்ச்சிக்கு உதவுவதாய் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஆடல் தெய்வமாக நடராஜர், அம்மன், விஷ்ணு, முருகன், விநாயகர் போன்றோர் கலைவடிவங்களாகப் போற்றப்படுகின்றனர். இவர்கள் கலை வளர்ச்சியின் அடிக்கல் நாட்டுபவர்களாக உள்ளனர்.

5. சிதம்பரத்தில் சிவன் 108 கரணங்களை ஆடினார். இது கலைகளின் வளர்ச்சிக்கு வித்திட்டது. இவற்றை கனகசபை, சிற்சபை, தேவசபை, நிருத்தசபை, ராஜசபை போன்ற சபைகளின் ஊடாகக் காணக்கூடியதாக உள்ளது.

6. நவசந்தி என்பது மூலமூர்த்தியின் அதிமுகமான கோவில் வாசலில் பிரம்மாவை கிழக்கு முதல் ஈசானம் வரையிலான எட்டுத் திசைகளிலும் இந்திரன் முதல் அட்டதிக்குப் பாலகர்களையும் உற்சவம் தொடங்கி முடியும் வரை அவ்வாத்தியங்களில் சமூகமாக காவல்புரியும்படி பூசித்து வேண்டிக்கொள்ளும் ஒரு வழிபாட்டில் நவசந்தி நாட்டியம் இடம்பெறுகிறது.

7. மகேந்திரவர்மன் எனும் பல்லவ அரசனின் காலத்தில் நடனக்கலை மிகவும் உன்னத நிலையை எய்தியது என்பதற்கு புதுக்கோட்டை சிலையிலுள்ள கல்வெட்டுக்களும் சித்தன்ன வாசல் குகைக்கோயில் விளக்குவதாக உள்ளது. மந்தவிலாசம் எனும் நூலில் சிவதாண்டவ நாடகத்தை காணக் கூடியதாக உள்ளது. மடங்களில் ஆடல் மகளிர் நியமிக்கப்பட்டனர். அவர்களுக்குத் தேவையான மானியங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். நடனமாதர் நடனக்கலையை வளர்த்த தற்கு ஆதாரமாய் "தேனார் மொழியார் தனபுத்தங் காடி திகழும் ....." என்ற பாடல் அடிகள் மூலம் அறியக்கூடியதாய் உள்ளது.

8. சோழர் காலத்தில் தமிழ்க்கூத்து, ஆரியக்கூத்து, சாந்திக்கூத்து என்பன ஆடப்பட்டது. ஆடல், பாடல் சிறப்புக்கு ஆதாரமாகும். தேவரடியார்கள் திருப்பணி செய்தனர். இவர்களை தளிர்சேரிப் பெண்கள் என அழைக்கப்பட்டனர். நடனக்கலையின் வல்லுநர்களுக்கு தலைக்கோலி எனும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்கள். ஆடல்வல்லானுக்கு பொன்னால் அமைந்த மரப்பள்ளி, தொங்கன் மகுடம், முத்துமகுடம், திருக்கொன்றை, குடைமகுடம் முதலியன பொன்னினால் செய்து நவமணி பதித்த அணிகலன் யாவும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

9. சோழர் காலத்தில் கோவில்களிலே திருக்குற்றாலக் குறவஞ்சியும் முக்கூடற்பள்ளும் நடன நாடகமாக நடிக்கப்பட்டன.

10. கோயில்களில் நடனக்கலையின் உன்னத வளர்ச்சி நிருத்தியோபசாரத்திலும் சிறப்பாக நடை பெற்றதைக் காணலாம்.

11. கி.பி. 5ம்-6ம் நூற்றாண்டுகளில் லலித நிலையிலுள்ள நடராஜர் சிலை எலிபத்தாவிலும் பரல் எனும் இடத்தில் எளிமையான கூத்தப்பிரானின் வடிவமும் கணங்கள் கடிந்த வாத்திய இசையும் அமைந்து காணப்படுகிறது.

(20 புள்ளிகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைப்பரீட்சைத் திணைக்களம் Department of Examinations Department of Examinations Department of Examinations Department of Examinations Department of

**Department of Examinations, Sri Lanka**

இலங்கைப்பரீட்சைத் திணைக்களம்

**53 T I**

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2011 ஓகஸ்ட்**

**General Certificate of Education (Adv. Level) Examination, August 2011**

பரதநாட்டியம் I
**Baratha Dancing I**

இரண்டு மணித்தியாலம்
**Two hours**

## பரதநாட்டியம் I

கவனிக்க:

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.
* விடைத்தாளின் பிறபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்க.
* 1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (X) இடுவதன் மூலம் காட்டுக.

1. 'திரிபங்' வடிவ நிலைகள் கொண்ட நடனம்
   1) கதக் 2) குச்சுப்புடி 3) மணிப்புரி 4) ஒடிஸி 5) மோகினியாட்டம்

2. சிருங்கார ரசத்தின் கடவுள்
   1) பிரம்மா 2) ருத்திரன் 3) விஷ்ணு 4) இந்திரன் 5) எமன்

3. முகாரி, ஸஹானா, ஆஹிரி, புன்னாகவராளி ஆகிய ராகங்களின் ரஸம்
   1) சாந்தம் 2) கருணா 3) பீபத்ஸம் 4) ஹாஸ்யம் 5) பயானகம்

4. இரு காதலர்களுக்கிடையேயான பாவம்
   1) வாத்ஸல்ய பாவம் 2) காந்த பாவம் 3) மதுர பாவம்
   4) தாஸிய பாவம் 5) சாக்கிய பாவம்

5. குச்சுப்புடி நடன மறுமலர்ச்சிக்கு காரணமானவர்
   1) புரந்திரதாசர் 2) இரவீந்திரநாத் தாகூர்
   3) வள்ளத்தோல் 4) நாராயண தீர்த்தர்
   5) சித்தேந்திரயோகி

6. முயலின் பாய்ச்சலில் வேகத்தையும் பயந்த சுபாவத்தையும் காட்டும் வண்ணம
   1) முசலடி வண்ணம 2) உக்குஸா வண்ணம 3) துரக வண்ணம
   4) நையடி வண்ணம 5) சவுளா வண்ணம்

7. இடது காலைத் தூக்கி நெற்றியைத் தொடும் கரணம்
   1) குஞ்சிதம் 2) பிரஸர்ப்பித 3) கரிஹஸ்த 4) ஜநித்த 5) லலாட திலகம்

8. சுந்தரி க்ரீவா அடிக்கடி பயன்படும் நடனம்
   1) பரதநாட்டியம் 2) கதக் 3) மணிப்புரி 4) மோகினியாட்டம் 5) ஒடிஸி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. டோல்கி என்ற மத்தளத்தைக் கழுத்தில் கட்டி கையினால் வாசித்தபடியே ஆடுவது

1) நட்டபாலா 2) கர்த்தாசோலோம் 3) புங்சோலோம் 4) லைச்சந்தன 5) சங்கீர்த்தன

10. திருமால் ஆடிய கூத்து வகை

1) கொடுகொட்டி 2) பாண்டரங்கம் 3) குடை 4) பாவை 5) அல்லியம்

11. கரணம் என்பது,

1) உடல் அசைவுகள், பாதங்கள், நிருத்தஹஸ்தங்களின் சேர்க்கை

2) நிலையாக நிற்றல்

3) அடவு

4) தீர்மானத்தை ஒத்தது

5) அசைவு

12. சூத்திரதாரா என்பவர்

1) நட்டுவனார் 2) நடனத்தை அறிமுகப்படுத்துபவர் 3) பிரதான நாயகி

4) பிரதான நாயகன் 5) விதூஸக

13. பரதநாட்டியம் எந்தப் பாரம்பரிய அடிப்படையில் நாட்டிய வடிவம் பெற்றது?

1) தெருக்கூத்து 2) துள்ளல், தோட்டம்

3) கூடியாட்டம், யக்ஷகானம் 4) பாகவதமேளா, குறவஞ்சி 5) குச்சுப்புடி

14. தஞ்சை சகோதரர்கள் எவ்வரசர் ஆட்சிக் காலத்தில் பரதநாட்டிய நுட்பங்களைத் தீர்மானித்தனர்?

1) சரபோஜி 2) துளஜா 3) சுவாதித்திருநாள்

4) சிவாஜி 5) சாமராஜேந்திர

15. "ஓ கனேஸ்யாம்! காலை நேரத்தில் யாரைத் திருப்திப்படுத்த நீ என்னிடம் வந்தாய்?" இதில் வரும் நாயகி,

1) விப்ரலப்தா 2) விரஹோத் கண்டிதா 3) கண்டிதா

4) ப்ரோஷிதபத்ருகா 5) கலஹாந்தரிதா

16. கண்டஜாதி துருவதாள சங்கீர்ண கதியின் மொத்த எண்ணிக்கை

1) 169 2) 85 3) 136 4) 108 5) 153

17. 'மது மயக்கம்' இதனைப் புலப்படுத்தப் பயன்படுத்தும் தலையசைவு

1) ஆலோலிதம் 2) துதம் 3) கம்பிதம் 4) பரிவாகிதம் 5) அதோமுகம்

18. ராஜராஜனின் தங்கை செம்பியன் மாதவி நடனமாடுவது போன்ற சிற்பம் அமைந்துள்ள கோயில் யாது?

1) பிரகதீஸ்வரர் 2) ரவிகுலமாணிக்கஈஸ்வரர் 3) அருணாசலேஸ்வரர்

4) கபாலீஸ்வரர் 5) சோமேஸ்வரர்

19. சங்கமருவிய காலத்தில் நடனம் ஆடியதாகக் கூறப்படும் பெண்கள்

1) கணிகையர் 2) கோடியர் 3) கூத்தியர் 4) வயிரியர் 5) பொருநர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. முருகன் சூரனை வென்று உடுக்கு அடித்தவாறு ஆடியது

1) கொடுகொட்டி 2) குடக்கூத்து 3) பேடிக்கூத்து 4) துடிக்கூத்து 5) கடையக்கூத்து

21. இராமநாதன் நுண்கலைப் பிரிவை தாபித்தவர்

1) ரி. எம். நாராயணசுவாமி 2) சு. நடேசபிள்ளை 3) விஸ்வநாத ஐயர்
4) வி. சந்தானம் 5) ஜெயரட்ணம்

22. யாழ். பிரதேச கலை மன்றத்தினால் ஏரம்பு சுப்பையா அவர்களைக் கௌரவித்து வழங்கிய பட்டம்

1) கலைஞர் 2) கலைச்செல்வன் 3) அபிநய அரசகேசரி
4) கலாபூஷணம் 5) வித்தியாஜோதி

23. வடகிழக்கிந்திய சாஸ்திரிய நடனங்கள்

1) கதக், ராஸ் 2) பரதநாட்டியம், குச்சுப்புடி 3) ஒடிஸி, மணிப்புரி
4) மணிப்புரி, கதக் 5) கதகளி, மோகினியாட்டம்

24. விஷ்ணு இரணியனை அழிக்க எடுத்த அவதாரம்

1) மட்சய 2) கூர்ம 3) வராக 4) நரசிம்ம 5) பரசுராம

25. 'கீதகோவிந்தம்' இக்காவியத்தின் கதாபாத்திரங்கள்

1) ராதா, கிருஷ்ணா 2) கிருஷ்ணா, கோபியர்
3) ருக்மணி, கிருஷ்ணா 4) ராதா, கிருஷ்ணா, சகி
5) பாமா, ருக்மணி, கிருஷ்ணா

26. தாள ஆவர்த்தனம் ஆரம்பித்தபின் பாடல் ஆரம்பித்தல்

1) சமஹிரஹம் 2) விஷமகிரஹம் 3) அதீதகிரஹம் 4)அனாகதகிஹம் 5) கிரஹம்

27. சம்போக சிருங்காரத்தில் பத்து செய்கைகள் சம்பவிக்கின்றன. அவற்றுள் சந்தோஷம், பயம், கோபம் ஆகிய உணர்வுகளினால் ஏற்படும் நரம்புத் தளர்ச்சி

1) விசால 2) விப்சிப்தி 3) குட்டமிதம் 4) கிலகிஞ்சித 5) லீலா

28. சதிரை பரதநாட்டியம் எனப் பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என்று சங்கீத வித்துவ சபையில் முன்மொழிந்தவர்

1) ருக்மிணிதேவி 2) ஈ. கிருஷ்ண ஐயர்
3) மீனாட்சி சுந்தரம்பிள்ளை 4) இராமையாப்பிள்ளை
5) சொக்கலிங்கம்பிள்ளை

29. 84 அட்சரங்களைக் கொண்ட மட்டிய தாளத்தின் ஜாதி - கதி

1) கண்ட ஜாதி - கண்ட கதி 2) மிஷ்ர ஜாதி - சதுஸ்ர கதி
3) கண்ட ஜாதி - மிஸ்ர கதி 4) சதுஸ்ர ஜாதி - சங்கீரண கதி
5) சங்கீரண ஜாதி - கண்ட கதி

30. 64 கலைகளுள் உள்வாங்கப்படாதது

1) காயங்களையும் இரத்தக் காயங்களையும் வெட்டிப் பார்த்தல்
2) கள்ளமாகப் பார்த்தல்
3) மரம் ஏறுதல்
4) யானைக்குப் பயிற்சி அளிததல்
5) தொலைக்காட்சி பார்த்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. பீடமர்தனன்

1) வஞ்சகமுள்ள ஒருவன் 2) சொல்வதைச் செய்யும் ஒருவன்
3) பாசமுள்ள ஒருவன் 4) தன்மானமில்லாத ஒருவன்
5) தைரியமுள்ள ஒருவன்

32. சிங்கார ரஸத்தின் ஆலம்பன விபாவம்

1) காதலன், காதலி 2) அழகிய பூந்தோட்டம் 3) புல்லாங்குல் இசை
4) காதலன், தோழி 5) சந்தன நறுமணம்

33. சிருங்கார ரஸத்திலிருந்து உற்பத்தியான ரஸம்

1) கருணா 2) ஸாஸ்யம் 3) ரௌத்திரம் 4) பயானகம் 5) சாந்தம்

34. அபஹஸித்தம் என்பது

1) சிரிப்பு 2) இளநகை 3) புன்முறுவல்
4) கண்ணீருடன் கூடிய சிரிப்பு 5) அட்டகாசமான சிரிப்பு

35. விப்ரலம்ப சிருங்கார ரஸத்திற்குப் பொருத்தமான உதாரணம்

1) கோலகலாபம் 2) பாமகலாபம் 3) அமிர்தமந்தன
4) த்வஜ சம்ஹார 5) ருக்மிணி கல்யாணம்

36. வசந்தவல்லி, குறத்தி ஆகிய பாத்திரங்கள் இடம்பெறும் குறவஞ்சி நாட்டிய நாடகம்

1) அழகர் குறவஞ்சி 2) அர்த்த நாரீஸ்வரர் குறவஞ்சி
3) திருமலை ஆண்டாள் குறவஞ்சி 4) வருணாபுரிக் குறவஞ்சி
5) திருக்குற்றாலக் குறவஞ்சி

37. உலக நடன தினமாகக் கொண்டாடப்படும் தினம்

1) தை 1ஆம் தேதி 2) ஆவணி 15ஆந் தேதி 3) மாசி 4ஆந் தேதி
4) ஆடி 24ஆந் தேதி 5) சித்திரை 29ஆந் திகதி

38. க்ஷேத்ரக்ஞரின் படைப்புக்களில் குறிக்கப்படும் முத்திரை

1) கோபால கிருஷ்ண 2) முல்ல கோபாலா 3) வேணு கோபாலா
4) குருகுக தாஸ 5) குருகுக பக்த

39. கதக் நடன இசை மரபு

1) கர்நாடக இசை 2) ஷோபான இசை 3) ஹிந்துஸ்தானி இசை
4) நட்டஷீஷாக் இசை 5) மேல்நாட்டு இசை

40. கோபுரத்தின நிழல் நிலத்தில் விழாதவாறு கலையம்சத்துடன் கோயிலைக் கட்டுவித்த அரசன்

1) ராஜசிம்மன் 2) முதலாம் ராஜராஜன்
3) கோப்பெருஞ்சிங்கன் 4) பாண்டியன்
5) மகேந்திரவர்மன்

41. கௌரி அம்மா ருக்மிணிதேவிக்கு முதலாவது பாடமாகக் கற்றுக்கொடுத்த நாட்டிய உருப்படி

1) ஸரஸிஜாஷுலு 2) ஆயசேரியர் 3) ஏரா ராரா 4) ஏதுக்கித்தனை 5) ஹரி ரிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42. விபுலானந்த இசைநடனக் கல்லூரி கட்டுவதற்கு நிலம் வழங்கி பேருதவி புரிந்தவர்

1) சுவாமி சிவானந்த மகராஜ்
2) சுவாமி விபுலானந்தர்
3) சுவாமி ஆத்மகதானந்த
4) சங்கராச்சாரியார்
5) யோகேஸ்வர சுவாமி

43. இரு கைகளையும் நிலத்தில் ஊன்றி உடலையும் கால்களையும் மேல்நோக்கி உயர்த்தி நின்று தலையைப் பின்னோக்கி உயர்த்தும் கரணம்

1) உட்கட்டிதம்
2) நிஸ்தம்பிதம்
3) வித்யுத்ப்ராந்தம்
4) கங்காவதரணம்
5) புஜங்காஞ்சிதகம்

44. நளினத்தை வெளிப்படுத்தும் விருத்தி

1) ஆரபடி
2) சாத்வதீ
3) பாரதீ
4) கைசிகீ
5) பாரதீ, அரபடி

45. பாத்திர இலட்சணத்தில் பிரகல்பா என்பது

1) மனோகரம்
2) இளைத்த உடல்
3) அழகு
4) புத்திசாதுரியம்
5) தன்னம்பிக்கை

46. சுக்கிரனை அபிநயிக்கப் பயன்படுத்தும் ஹஸ்தங்கள்

1) முஷ்டி - முஷ்டி
2) சிகரம் - சிகரம்
3) பாதகம் - சூசி
4) முஷ்டி - சூசி
5) பதாகம் - - அலபத்மம்

47. வர்ணப்பிரியா மேளகர்த்தா எந்த சக்கரத்திற்குரியது

1) வேத சக்கரம்
2) நேத்ரா சக்கரம்
3) இந்து சக்கரம்
4) ரிஷி சக்கரம்
5) ருது சக்கரம்

48. ஒடிஸி நடனத்தில் வரும் நடன உருப்படி

1) துக்ராஸ்
2) ஜதீஸ்வரம்
3) பிரவேசதரு
4) பங்கரா
5) மங்களச்சரண

49. நாயக நாயகி பாவத்தின் உட்கருத்துக்களை நுணுக்கமாகவும் தெளிவாகவும் வெளிக்காட்ட வாய்ப்புக்களைக் கொண்டுள்ள மதுர பக்தியை அதிகமாக உள்ளடக்கிய உருப்படி

1) பதம்
2) ஜாவளி
3) தில்லானா
4) அஷ்டபதி
5) ஜதீஸ்வரம்

50. தான வீரனுக்குரிய சரியான உதாரணம்

1) இராவணன்
2) கர்ணன்
3) கிருஷ்ணன்
4) விபீஷணன்
5) அரிச்சந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**53 | T | II**

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2011 ஒகஸ்ட்**
**General Certificate of Education (Adv. Level) Examination, August 2011**

பரதநாட்டியம் **II**
**Baratha Dancing II**

மூன்று மணித்தியாலம்
**Three hours**

## பரதநாட்டியம் II

அறிவுறுத்தல்:

* பகுதி **I** இல் முதலாம் வினா உட்பட இரண்டு வினாக்களுக்கும், பகுதி **II** இல் எவையேனும் மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

### பகுதி - I

1. i) நீர் கற்ற வர்ணத்தின் தத்துவ உள்ளடக்கத்தினை எழுதுக.
   ii) இவ்வர்ணத்தில் வரும் நாயகா - நாயகி, ரஸ - பாவ, ராக - தாள ஆகியவற்றைத் தருக.
   iii) இவ்வர்ணத்தின் முதலாவது தீர்மானத்தினை அங்க அடையாளங்களுடன் எழுதுக.

2. i) கிராமிய நடனத்தின் கருத்து யாது?
   ii) ஒயிலாட்டம், பொம்மலாட்டம், குதிரையாட்டம், காவடியாட்டம் ஆகிய கிராமிய நடனங்கள் எச்சந்தர்ப்பத்தில் ஆடப்படுகின்றது?
   iii) மேற்குறிப்பிட்ட நடனங்களின் ஆடல் முறையினை எழுதுக.
   iv) இவற்றிற்குப் பயன்படுத்தும் ஆடை, வேறு அலங்கார உபகரணங்கள் பற்றி விளக்குக.

3. i) சிவனின் ஐந்தொழில்களும் யாவை?
   ii) நடராஜ திருவுருவத்தின் ஒவ்வொரு அங்கங்களையும் குறிப்பிட்டு, அவற்றின் தத்துவத்தை விளக்குக.

### பகுதி - II

4. i) மேளகர்த்தா என்றால் என்ன?
   ii) 72 மேளகர்த்தா அட்டவணையை விளக்கமாகத் தருக.
   iii) ஜனக ராகங்கள் என்றால் என்ன?

5. i) கதகளி ஆட்டத்தின் வரலாற்றினை எழுதுக.
   ii) கதகளி ஆட்டத்திற்குப் பயன்படுத்தும் வேஷங்களை (முக ஒப்பனை) குறிப்பிடுக.
   iii) எல்லா வேஷங்களும் சத்விக், ரஜசிக், தாமசிக் என்று மூன்று குணங்களுக்குள்ளும் அடங்குகின்றன. விரும்பிய இரண்டு குணங்களுக்குரிய கதாபாத்திரங்களைக் குறிப்பிட்டு, அதற்குரிய வேஷத்தினை விவரிக்க.

6. i) கௌரியம்மா என்பவர் யார்?
   ii) அவர் எதற்கு பிரசித்தி பெற்றவர்?
   iii) அவர் நடனத்திற்கு செய்த பங்களிப்பு யாது?

7. நாயக்கர் காலத்தில் துளஜா மகாராஜாவும் சரபோஜி மகாராஜாவும் கலை வளர்ச்சிக்குப் பெரிதும் பங்களிப்புச் செய்தனர். இதனை ஆராய்க.

8. பரதநாட்டிய நிகழ்ச்சியில் காணப்படும் பிரதான ஆறு உருப்படிகளை விவரித்து எழுதுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரத நாட்டியம் I
## Baratha Dancing I
விடைகள் - 2011

| வினா இல | விடை | வினா இல | விடை | வினா இல | விடை | வினா இல | விடை | வினா இல | விடை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 4 | 11. | 1 | 21. | 2 | 31. | 5 | 41. | 1 |
| 02. | 3 | 12. | 2 | 22. | 2 | 32. | 1 | 42. | 1 |
| 03. | 2 | 13. | 4 | 23. | 3 | 33. | 2 | 43. | 4 |
| 04. | 3 | 14. | 1 | 24. | 4 | 34. | 4 | 44. | 4 |
| 05. | 5 | 15. | 3 | 25. | 4 | 35. | 2 | 45. | 5 |
| 06. | 1 | 16. | 5 | 26. | 4 | 36. | 5 | 46. | 1 |
| 07. | 5 | 17. | 1 | 27. | 4 | 37. | 5 | 47. | 1 |
| 08. | 2 | 18. | 2 | 28. | 2 | 38. | 2 | 48. | 5 |
| 09. | 3 | 19. | 1 | 29. | 3 | 39. | 3 | 49. | 1 |
| 10. | 5 | 20. | 4 | 30. | 5 | 40. | 2 | 50. | 2 |

(50 x 02 = 100 புள்ளிகள்)

## பரத நாட்டியம் II
## Baratha Dancing II
விடைகள் - 2011

**பகுதி - I**

1. i) வர்ணத்தில் நாயகியாகிய ஜீவாத்மா, நாயகனாகிய பரமாத்மாவை அடைந்து ஜீவன் முத்தியைப் பெற்று வீடுபேற்றை அடைதல் தத்துவ உள்ளடக்கமாகக் கூறப்படுகின்றது. (02 புளளிகள்)

ii) **வர்ணம் : "ஸகியே ..................."**

நாயகன் - அனுகூலன் / உத்தம நாயகன் / திரோத்தன்
நாயகி - விரஹோத் கண்டிதா
ரஸ - சிருங்காரம்
பாவ - மதுர பாவம்
இராகம் - ஆனந்தபைரவி
தாளம் - ஆதி

**வர்ணம் : "நீ இந்த மாயம் ....................."**

நாயகன் - சடன் / கபட நாயகன்
நாயகி - விரஹோத் கண்டிதா
ரஸ - சிருங்காரம்
பாவ - மதுர பாவம்
இராகம் - தன்யாசி
தாளம் - ஆதி (06 புள்ளிகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவர்ணம்

இராகம் - தன்யாசி
தாளம் - ஆதி (இரட்டைக்களை)

பல்லவி

**தீர்மானம் I**

**1ஆம் காலம்**

| | | | |
|---|---|---|---|
| 4 | O | O | |
| தாம்;;; தத்,; த,; கி,;ட,; ந,; க,; | /ஜெம்,; ; ; த, ; ரி, ; | /கி, ; ட, ; த, ; க, ; | // |
| தத,;த,;கி,; ட,; ந,;க,; ந,; க, ; | /ஜெம்,; ; ; த.; ரி, ; | /கி, ; ட,;த, ; க, ; | // |

**2 ஆம் காலம்**

| | | | |
|---|---|---|---|
| தாம்; த, த, கி, ட, ந, க ,ஜெம்,; த, ரி, கி, ட, த, க. | / ; ; த, த, கி, ட, ந, க, | /ஜெம்,; த, ரி, கி, ட, த, க, | // |

**3 ஆம் காலம்**

| | | | |
|---|---|---|---|
| தாம் தககிடநகஜெம், தரிகிடதக ; தககிடநகஜெம், தரி கிடதக | /தாம் தககிடதகஜெம், தரிகிட தக | /; தககிடநக ஜெம், தரிகிடதக | // |
| தாம் தககிடநகஜெம்,; தகுந்தரி குகுந்தரி கிடதக தககிடநகதக | /ஜெம் ,; தகுந்தரிகுகுந்தரிகிடதக | / * தகஜெம் தகணம் தகரும் தகதித் | // |
| தாம்த தகிடதகிட திகிட தாதீதா ததீ தரிகிட தொம் | /தாம் தககிடதகிட திகிட | /தாதீதா ததீ தரிகிட தொம் | // |
| தாம்த தகிட தகிட திகிட தாதீதா ததீ தரிகிடதொம் | /தாதீதா ததீ தரிகிட தொம் | /தாதீதா ததீ தரிகிட தொம் | // |

* இதிலிருந்து வருவன திஸ்ர கதியில் அமைந்துள்ளன.

**அறுதி**

த க த கிட திதெய், தெய், திதெய், திதெய், தெய்,
திதெய் திதெய் தெய் தி/ தாம்

III)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம் - ஆனந்தபைரவி
தாளம் - ஆதி (இரட்டைக் களை)

# பதவர்ணம்

தீர்மானம் I

பல்லவி

|4 O O

1ஆம் காலம்

தா ; ; ; ரித், ; த, ; ரித், ; த, ; கி, ; ண, ; / த, ; க, ; ண, ; க, ; / ஜெம், ; ; ; ஜெம் , ; ; ; //
த, ; த, ; ரித், ; த, ; ரித், ; த, ; கி, ; ண, ; / த, ; க, : ண, ; க, ; / ஜெம், ; ; : ஜெம், : : : //

2ஆம் காலம்

தா ; ரி, த, ரி, த, கி, ண, த, க, ண, க, ஜெம்,; ஜெம்,; / த, த, ரி, த, ரி, த, கி, ண, / த, க, ண, க, ஜெம், ; ஜெம், ; //

3ஆம் காலம்

தாரிதரிதகிண தகண க ஜெம், ஜெம்,
ததரிதரிதகிணதகணகஜெம், ஜெம் , / தாரிதரிதகிண தகணகஜெம், ஜெம், /ததரிதரிதகிணதகணக ஜெம், ஜெம் ,//
தார்தகிணஜெம், ததரிதகிணஜெம், ததிந்தக தித்,தா;
கிடதகதரிகிட தொம் , / தரிகிட தொம், ததிந்தக தித், தா; கிடதக/ தரிகிடதொம், தரிகிடதொம்,
ததிந்தக தித், தா//
கிடதக தரிகிடதொம் , தரிகிடதொம் , ; ; தத் ; தணா தத்; தணாதத்; த / ணா .............................................


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

2\. i) இசையும் நடனமும் நம் நினைவுக்கு எட்டாத காலத்தில் இருந்தே மனித உணர்வுகளின் வெளிப்பாடுகளாக கிராமிய நடனங்கள் நிலவி வந்துள்ளன. கிராமப்புறத்தில் வாழும் மக்களின் சமூக, பொருளாதார வாழ்க்கை முறையினையும் அவர்களின் இயல்பான வாழ்க்கை முறையினையும் இவர்களின் வாழ்வின் அன்றாட நிகழ்ச்சிகளையும் சித்திரித்துக் காட்டுவனவாக இக்கிராமிய நடனங்கள் அமைகின்றன.

(04 புள்ளிகள்)

ii) ஒயிலாட்டம் : விழாக்களின் போதும், கேளிக்கைக்காகவும்.

பொம்மலாட்டம் : விழாக்களின் போது

குதிரையாட்டம் : விழாக்களின் போது

காவடியாட்டம் : வேண்டுதலின் போதும், விழாக்களின் போதும். (04 புள்ளிகள்)

iii) ஒயிலாட்டம் :

- ஆண்களால் ஆடப்படும் ஓர் கிராமிய நடனமாகும்.
- கிராமத்துக் கோயில் திருவிழாக் காலங்களில் ஆடப்படும்.
- இது குழுவாகவே ஆடப்படும் நடனம்.
- இதில் 12 முதல் 20 பேர் ஆடுவார்கள்.
- இவர்கள் கைகளில் கைக்குட்டைகளை வைத்து அசைத்து அசைத்து லாவகமாக ஆடுவர்.
- வாத்தியார் என்ற ஒருவர் இந்த ஒயிலாட்டக் குழுவினருக்கு பயிற்சி அளிப்பார்.
- இதில் குழுவினர் ஒரே நேர்கோட்டில் அழகாக நிற்பார்கள். வாத்தியார் அவர்களுக்கு எதிரில் நிற்பார். பாடுவதையும் ஆடுவதையும் அவரே தொடக்கி வைப்பார்.
- இந்நடனத்திற்கான கதைகள் பெரும்பாலும் புராணக் கதைகளும் உள்ளூர் வீரர்களின் வாழ்க்கைக் கதைகளும் பாட்டாகப் பாடப்படும்.
- இது திறந்த வெளிகளில் தான் பெரும்பாலும் இடம்பெறும்.
- பாட்டின் வேகம் அதிகரிக்க அங்கங்களின் இயக்கமும் விரைவு பெற்று ஆடப்படும்.

பொம்மலாட்டம்:

- இது பொம்மைகளை நடிகர்களாகக் கொண்ட ஓர் நடாகமாகும்.
- தலைமைக் கலைஞன் அரங்கின் மறைவில் இருந்து கொண்டு மெல்லிய கறுப்பு நூல்களை தந்திரமாகவும் லாவகமாகவும் கையாண்டு பொம்மைகளை இயக்குவார்.
- பொம்மைகளை அவை ஏற்கும் நாடகப் பாத்திரங்களுக்கேற்ப அலங்கரித்து பொம்மைகள் நடந்து, ஆடி, ஓடி நிலைமைகளையும் நிகழ்ச்சிகளையும் சித்திரிப்பதற்குத் தேவையான அத்தனை சாடைகளையும் செய்து நடிக்கும்.
- பொம்மலாட்டக் கதைகள் பெரும்பாலும் மத சம்பந்தமாகவும் புராணக் கதைகள் சம்பந்தமாகவும் இருக்கும்.
- இப் பொம்மலாட்டத்தினை இயக்குபவர் "சூத்திரதாரி" என அழைக்கப்படுவர்.

குதிரையாட்டம்:

- மனித அசைவு, குதிரை அசைவு கலந்த இரு நிலை அசைவுகள் காணப்படும்.
- குதிரை பாய்வதுபோல அதன் தலைப்பகுதியை மேலும் கீழும் வலமும் இடமும் அசைத்து ஆடுவர்.
- தனிக் குதிரையாட்டம், ஆண் பெண் ஜோடிக் குதிரையாட்டம், 2 ஆணும் 1 பெண்ணும் இணைந்த குதிரையாட்டம் என ஆடப்படும்.
- ஆண், பெண் இரு சோடிகளைக் கொண்ட நான்கு குதிரையாட்டமும் ஆடப்படும்.
- தனிக் குதிரையாட்டத்தில் குதிரை தனது பிறப்பு, வளர்ப்பு மற்றும் பெருமைகளைச் சொல்லி ஆடுதல், தம் மீது ஏறி வெற்றி பெற்ற வீரர்களின் கதைகளைச் சொல்லி ஆடுவதும் சிறப்பாகும்.
- சோடிக் குதிரையாட்டத்தில் ஆண் குதிரை தனது பெருமைகளையும் பெண் குதிரை தன் பெருமைகளையும் சொல்லி போட்டி போட்டுக் கொண்டு ஆடலும் பாடலும் செய்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வாக்குவாதத்திலிருந்து காதல் பிறந்ததும் மூன்று குதிரை ஆட்டத்தில் ஆடிக் காட்டப்படும்.
- பெண் குதிரையாகவும் ஆண்களே ஆடினர்.
- பெண் குதிரைக்கும் ஆண் குதிரைக்கும் வேக நடை, தாவல், நடை, பாய்ச்சல் நடை, தொக்குநடை, கெந்தல் நடை, சறுக்கல் நடை முதலியன பொதுவாக அமைந்திருக்கும்.

காவடியாட்டம்:

- கந்தனுக்காகக் காவடித் தண்டில் காணிக்கை கொண்டு செல்லும்போது களைப்புத் தோன்றாமல் இருக்கக் கந்தன் புகழைப் பாடியும் ஆடியும் செல்வதிலிருந்து காவடியாட்டம் தோற்றம் பெற்றது.
- காவடித் தண்டு மிக அழகாக அலங்கரிக்கப்பட்டிருக்கும்.
- அதைக் கலைஞர்கள் தலை முதல் தொடை வரை தொடர்ந்து அசைத்துப் புரட்டி ஆடுவார்கள். நையாண்டி மேளத்திற்கேற்ப இவர்கள் காவடியோடு ஆடுவார்கள்.
- காவடி ஆடும்போது உடலை வளைத்தும், தலையைக் குனிந்தும், மேலே எழும்பியும் ஆடுவது திறமைக்குச் சவாலாகும். (08 புள்ளிகள்)

iv) ஒயிலாட்டம்:

- பளிச்சென்ற வர்ணங்களில் சட்டைகள், காற்சட்டை, கழுத்துப் பட்டைகள் அணிந்திருப்பார்கள்.
- கைகளில் வண்ண வண்ணக் கைக்குட்டைகளை வைத்து ஆடுவார்கள்.
- கால்களில் சலங்கை அணிவார்கள்.
- தலையில் வண்ணத் துண்டு கட்டியிருப்பார்கள்.

பொம்மலாட்டம்:

- பொம்மைகள் சுமார் இரண்டடி உயரமுடையதாகவும் மரத்தின் மேல் செய்த தலையை உடையதாகவும் இருக்கும்.
- கை, கால்களில் கந்தல் துணிகளைத் திணித்து அவற்றில் விரல்களைப் பொருத்தியிருப்பார்கள்.
- கண்கள் சாதாரண கண்களை விடப் பெரிதாக அமைக்கப்பட்டிருக்கும்.
- பொம்மைகளுக்கு இடுப்பின் கீழ் கால்களைத் தனியாகவோ அல்லது அதற்குப் பதிலாக கீழாடைகள் தொங்கும் வண்ணமோ போடப்பட்டிருக்கும்.

குதிரையாட்டம்:

- ஆண் குதிரை, பெண் குதிரைகள் முறையே அரசன், அரசி போன்ற வேடங்களில் ஆடை அணிகலன்கள் அணிந்து ஆடுவார்கள்.

காவடியாட்டம்:

- தார்பாச்சி பட்டு வேட்டி கட்டியிருப்பார்.
- கழுத்தில் பூமாலை அணிந்திருப்பர்.
- கால்களில் சதங்கை அணிந்திருப்பார்கள். (04 புள்ளிகள்)

3. i) படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் (05 புள்ளிகள்)

ii) நடராஜரின் வலது திருக்கரம் : ஆனந்தக் கூத்தன் திருக்கரங்கள் நான்கினுள் பின்னதாகிய வலக்கரத்தில் துடி (உடுக்கு) இருக்கிறது.

வலது அபயகரம்: பிறவிச் சுழலில் அகப்பட்டு ஓடி வந்த உயிர்களுக்கு அபயம் அளிக்கும் அந்தக் கை வலக்கரங்களுள் ஒன்று. இது காத்தல் தொழிலைக் குறிக்கின்றது.

இடது திருக்கரம்: இறைவன் இடது கையில் தீயை ஏந்தி இருக்கிறான். இது அழித்தல் செயலை அறிவிக்கிறது.

இடது வரத ஹஸ்தம்: இறைவனுடைய இடக்கை டோலா ஹஸ்தத்தோடு தூக்கிய திருவடியை நோக்கி நிற்பது வரதஹஸ்தமாகும். பரிபாகமுற்றிருக்கும் ஆன்மாக்களை நோக்கி இது தான் நீ அடையக்கூடிய இன்பமயமான இடம் சுட்டும் திருக்கரம் மோட்சத்தைக் குறிக்கின்றது.

ஊன்றிய திருவடி : ஒளி இருளில் தேயாது அதன் வியாயத்தை அடக்கி நிற்பது போல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயலகனைத் தீண்டியும் தீண்டாத நிலையில் ஒளியும் இருளும் தோன்றுவதனால் இப்படித்தான் இருக்கும் என்பதைக் கூறுகின்றது. மறைத்தலைக் குறிக்கும். ஆணவத்தை அடக்கும்.

**முயலகன் :** இதனை அபஸ்மாரன் என்பார்கள். இது ஆணவ மலத்தின் அடையாளம். ஆணவமலம் தலையெடுப்பதினாலேயே உயிர்களின் அனு வினைக்கீடாக அவதிப்படுகின்றன. உயிர்கள் வீடுபேறு பெறுகின்றன.

**பாம்பணி :** இறைவன் சடை, மார்பு, வயிறு, மணிக்கட்டுக்கள், அரைக்கால்கள் இவற்றில் பாம்புகள் அணிந்திருக்கின்றார். காற்றையே உணவாக உட்கொண்டு வேறொன்றும் உட்கொள்ளாது ஐந்து பேறறிவும் கண்களே கொள்ளும் நிலையில் அன்பர்க்கு எளியனாய் உணர்த்துகின்றது.

**தோடும் குழையும்:** வலக்காதில் குழையும், இடக்காதில் தோடும் இறைவன் அணிந்திருக்கின்றார். ஆணோடு பெண்ணாய் அமைந்தது இவ்வுலகம் என்பதாகும். அறிவாற்றலைக் குறிக்கும்.

**திருவெண்ணீறு :** இறைவனது பவளம் போன்ற மேனியில் பால் வெண்ணீறாக விளங்குகின்றது. சுட்ட நீற்றைச் சுடினும் நிறம் ஊட்டப்படினும் வெண்மைத் தன்மையை இழக்காது திருமேனியில் தரித்திருப்பது நித்தியமானவை என்பதை அறிவிக்க திருநீறு பராசக்தியின் வடிவாய் அமைந்துள்ளது.

**கோவணம் :** உலகிலுள்ள 64 கலைகளாலும் அறியப்படும் பரஞானக் கலையை நான்கு வேதங்களாக அரைஞாணில் கோர்த்து அணிந்துள்ளார்.

**திருமுகம்:** தலைமை நிலையினையும் எல்லையில்லா அழகினையும் இனிய தண்ணொளியையும் உணர்த்துகின்றது.

**திருமேனி :** பவளநிறச் சிவந்த திருமேனி அவரின் தூய்மைப்படுத்தும் தன்மையைக் காட்டும்.

**திருக்கரங்கள்:** நான்கு திருக்கரங்கள் திசைகளைக் காட்டுகிறது. இது அவரின் எல்லையில்லா ஆற்றலைக் குறிக்கும்.

**பூணூல் :** இறைவனுடைய திருமார்பில் உந்திவரை தொங்குவது. மூலாதாரத்திலிருந்து நாவிற்கு மேலாக எழும் குண்டலினியைக் குறிப்பது.

**நீலகண்டம்:** இறைவனுடைய நித்தியத் தன்மையை விளக்குகின்றது.

**சிலம்பும் கழலும் :** இறைவனுடைய திருவடிகளை அலங்கரிக்கின்றன.

**முக்கண்:** உணர்ச்சியை ஊட்டவல்ல புறச்சோதிகளான சூரியன், சந்திரன், தீ ஆகிய முச்சுடர்களை மூன்று கண்கள் கொண்டு இறைவன் விஸ்வரூபமாக விளங்குகின்றார்.

**சூலம்:** மூன்று கிளைகளும் முக்குணங்களை விளக்கி நிற்கிறது.

**சடாமுடி:** ஆன்மாக்களுக்கு ஞானம் அருள வேண்டி சடாமுடி தரித்திருக்கிறார். முடிச்சடை ஒன்று பட்டுக் குவிந்த ஞானத்தையும் பரந்த சடை விரிந்து உலக உயிர்களுக்கு ஞானமூட்டும் நிலையையும் உணர்த்துகின்றன.

**குமிண் சிரிப்பு:** துன்பங்களை இறைவன் தன்னுடைய புன்முறுவலால் நீக்குவதைக் குறிக்கும்.

**பிறை:** இறைவன் பிறைமதி இறைவனுடைய அளவில்லாத ஞானத்தை அறிவிப்பது.

**கங்கை:** இறைவனின் எண் குணங்களில் அளவிலா ஆற்றலை குறிக்கின்றது.

**புலித்தோல்:** கோபத்தை அடக்குபவர்.

**மான்:** வேத நாயகன் என்பதை காட்டுகிறது.

**அங்குசம்:** உயிர்களை வலிந்து இழிந்து அவற்றின் ஆணவக் கயிற்றை அடக்கி ஆளுவது.

**வாள்:** அளவிலா ஆற்றலை விளக்கும்.

**பாசம்:** திருவருட் சக்தி போலே உயிர்களுக்கு மோட்சத்தை அருளுவது.

**கபாலம்:** இறைவனின் விருப்பு, வெறுப்பு அற்றவன் என்பதை விளக்குகின்றது.

**ஊமத்தம்பூ:** திருமுடியில் ஊமத்தம்பூ, எருக்கு, அறுகு இவற்றை அணிந்திருக்கின்றார்.

**திருச்செவி:** தீய ஒலிகளையும் பராகாசத்தில் ஏற்று அடக்கி அருளும் அவறிவாற்றலையும் உடையது.

**மணி:** பிரணவ நாத ஒலியை கேட்பித்து அருளும் ஆற்றல் உடையது.

**கபாலமாலை:** இருபத்தொரு ரக கபாலங்கள் இறைவனுடைய கழுத்தில் இலங்குகின்றது.

(15 புள்ளிகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி - II

4. i) மேளகர்த்தா: தாய் இராகங்களை ஒழுங்கு முறையில் காட்டும் அமைப்பு மேளகர்த்தா எனப்படும். எந்தவொரு இராகத்தில் இலக்ஷணத்தையும் இந்த அமைப்பின் உதவியுடன் எளிதாகக் கண்டறியலாம். இந்த அமைப்பு வெங்கடமகி அவர்களின் சதுர்தண்டிப் பிரகாசிகை, கோவிந்தா சாரியாரின் சங்கிரகூடம் என்ற நூலிலும் காணப்படுகின்றது. 12 பிரிவுகள் உடையது. ஒவ்வொரு பிரிவிற்கும் 6 இராகங்கள் வீதம் இச்சக்கரம் பூர்வ மேளகர்த்தா, உத்தர மேளகர்த்தா என வகைபபடுத்தப்பட்டுள்ளது. 1-36 வரையானவை சுத்த மத்திம் எனவும், 37-72 வரையானவை பிரதிமத்திமம் எனவும் அழைக்கப்படும்.

(04 புள்ளிகள்)

ii) 72 மேளகர்த்தா சக்கரம்

| பூர்வாங்க மேளகர்த்தாக்கள் அல்லது சுத்த மத்யம மேளகர்த்தாக்கள் | | | ரிஷப, காந்தார, தைவத, நிஷாத பேதங்கள் | | | | உத்தர மேளகர்த்தாக்கள் அல்லது பிரதி மத்யம மேளகர்த்தாக்கள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சக்கரத்தின் இல. பெயர் | தொடர் இல. | மேளகர்த்தா இராகங்களின் பெயர் | ரி | க | த | நி | மேளகர்த்தா இராகங்களின் பெயர் | தொடர் இல. | சக்கரத்தின் இல. பெயர் |
| I இந்து | 1 | கனகாங்கி | சுத்த | சுத்த | சுத்த | சுத்த | ஸாலகம் | 37 | VII ரிஷி |
| | 2 | ரத்னாங்கி | சுத்த | சுத்த | சுத்த | கைசிகி | ஜலார்ணவம் | 38 | |
| | 3 | கானமூர்த்தி | சுத்த | சுத்த | சுத்த | காகலி | ஜாலவராளி | 39 | |
| | 4 | வனஸ்பதி | சுத்த | சுத்த | சதுஸ்ருதி | கைசிகி | நவநீதம் | 40 | |
| | 5 | மானவதி | சுத்த | சுத்த | சதுஸ்ருதி | காகலி | பாவனி | 41 | |
| | 6 | தானரூபி | சுத்த | சுத்த | ஷட்ச்ருதி | காகலி | ரகுப்ரியா | 42 | |
| II நேத்ர | 7 | ஸேனாவதி | சுத்த | சாதாரண | சுத்த | சுத்த | கவாம்போதி | 43 | VIII வஸு |
| | 8 | ஹனுமதோடி | சுத்த | சாதாரண | சுத்த | கைசிகி | பவப்ரிய | 44 | |
| | 9 | தேனுகா | சுத்த | சாதாரண | சுத்த | காகலி | சுபபந்துவராளி | 45 | |
| | 10 | நாடகப்ரியா | சுத்த | சாதாரண | சதுஸ்ருதி | கைசிகி | ஷட்விதமார்க்கினி | 46 | |
| | 11 | கோகிலப்ரிய | சுத்த | சாதாரண | சதுஸ்ருதி | காகலி | ஸுவர்ணாங்கி | 47 | |
| | 12 | ரூபவதி | சுத்த | சாதாரண | ஷட்ச்ருதி | காகலி | திவ்யமணி | 48 | |
| III அக்னி | 13 | காயகப்ரிய | சுத்த | அந்தர | சுத்த | சுத்த | தவளாம்பரி | 49 | IX ப்ரஹ்ம |
| | 14 | வகுளாபரணம் | சுத்த | அந்தர | சுத்த | கைசிகி | நாமநாராயணி | 50 | |
| | 15 | மாயாமாளவகௌளை | சுத்த | அந்தர | சுத்த | காகலி | காமவர்த்தனி | 51 | |
| | 16 | சக்கரவாகம் | சுத்த | அந்தர | சதுஸ்ருதி | கைசிகி | ராமப்ரிய | 52 | |
| | 17 | ஸூர்யகாந்தம் | சுத்த | அந்தர | சதுஸ்ருதி | காகலி | கமனச்ரம | 53 | |
| | 18 | ஹாடகாம்பரி | சுத்த | அந்தர | ஷட்ச்ருதி | காகலி | விச்வம்பரி | 54 | |
| IV வேத | 19 | ஜங்காரத்வனி | சதுஸ்ருதி | சாதாரண | சுத்த | சுத்த | சியாமளாங்கி | 55 | X திசி |
| | 20 | நடபைரவி | சதுஸ்ருதி | சாதாரண | சுத்த | கைசிகி | ஷண்முகப்ரிய | 56 | |
| | 21 | கீரவாணி | சதுஸ்ருதி | சாதாரண | சுத்த | காகலி | ஸிம்மேந்திர மத்யமம் | 57 | |
| | 22 | கரஹரப்ப்ரியா | சதுஸ்ருதி | சாதாரண | சதுஸ்ருதி | கைசிகி | ஹேமவதி | 58 | |
| | 23 | கௌரீமனோஹரி | சதுஸ்ருதி | சாதாரண | சதுஸ்ருதி | காகலி | தர்மவதி | 59 | |
| | 24 | வருணப்ரிய | சதுஸ்ருதி | சாதாரண | ஷட்ச்ருதி | காகலி | நீதிமதி | 60 | |
| V பாண | 25 | மாரரஞ்ஜனி | சதுஸ்ருதி | அந்தர | சுத்த | சுத்த | காந்தாமணி | 61 | XI ருத்ர |
| | 26 | சாருகேசி | சதுஸ்ருதி | அந்தர | சுத்த | கைசிகி | ரிஷபப்ரிய | 62 | |
| | 27 | ஸரசாங்கி | சதுஸ்ருதி | அந்தர | சுத்த | காகலி | லதாங்கி | 63 | |
| | 28 | ஹரிகாம்போஜி | சதுஸ்ருதி | அந்தர | சதுஸ்ருதி | கைசிகி | வாசஸ்பதி | 64 | |
| | 29 | தீரசங்கராபரணம் | சதுஸ்ருதி | அந்தர | சதுஸ்ருதி | காகலி | மேஷகல்யாணி | 65 | |
| | 30 | நாகானந்தினி | சதுஸ்ருதி | அந்தர | ஷட்ச்ருதி | காகலி | சித்ராம்பரி | 66 | |
| VI ருது | 31 | யாகப்ரிய | ஷட்ச்ருதி | அந்தர | சுத்த | சுத்த | ஸுசரித்ர | 67 | XII ஆதித்ய |
| | 32 | ராகவர்த்தனி | ஷட்ச்ருதி | அந்தர | சுத்த | கைசிகி | ஜ்யோதிஸ்வரூபிணி | 68 | |
| | 33 | காங்கேயபூஷிணி | ஷட்ச்ருதி | அந்தர | சுத்த | காகலி | தாதுவர்த்தனி | 69 | |
| | 34 | வாகதீச்வரி | ஷட்ச்ருதி | அந்தர | சதுஸ்ருதி | கைசிகி | நாஸிகாபூஷணி | 70 | |
| | 35 | சூலினி | ஷட்ச்ருதி | அந்தர | சதுஸ்ருதி | காகலி | கோஸலம் | 71 | |
| | 36 | சலநாட | ஷட்ச்ருதி | அந்தர | ஷட்ச்ருதி | காகலி | ரஸிகப்ரிய | 72 | |

(12 புள்ளிகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii) ஜனக ராகம்: தாய் இராகங்களை ஜனக இராகங்கள் என்றும் ஜனக இராகத்திற்கு மேளராகம், கர்த்தாராகம், சம்பூர்ண இராகம், தாய் இராகம், இராகாங்க ராகம் என்று வேறு பெயர்களும் உண்டு. ஜனக இராகங்களின் முக்கிய இலட்சணமாக விளங்குபவை:

1. சம்பூர்ண ஆரோகண அவரோகணம்.
2. கிரம சம்பூர்ண ஆரோகண அவரோகணம்.
3. ஆரோகண ஸ்வரஸ்தானங்கள் அவரோகணத்திலும் இடம்பெறல்.
4. அஷ்டகமாக விளங்கும் ஆரோகண அவரோகணம்.

5. i) கதகளி ஆட்டத்தின் வரலாறு:

- தென்னிந்தியாவின் கேரள மாநிலத்தில் தோற்றம் பெற்றது.
- கதகளி என்பது கதை கூறும் நாடகம் எனப் பொருள்படும்.
- இந்தியாவின் தென்மேற்குப் பகுதியில் காணப்படும் வெவ்வேறு நடன மரபுகளிலிருந்து தோன்றியது.
- பண்பாட்டுடன் வளர்ந்த கூடியாட்டம் என்ற நாடகப் பாணியும், சடங்குகள் மலிந்த ஆடல் வகைகளும் கதகளியின் தோற்றத்திற்குக் காரணங்காக அமைந்தன.
- உடற்பயிற்சி, வாள் பயிற்சி முதலானவற்றிலிருநது கதகளி உத்திகள் உருவாக்கப்பட்டுள்ளன.
- 17ஆம் நூற்றாண்டில் தனியான நடன நாடகப் பத்ததியாக உருவாகியது.
- பரத முனிவரின் நாட்டிய சாஸ்திரம் கதகளிக்கான பிரதான நூல் ஆகும்.
- ஹஸ்த லக்ஷண தீபிகா என்பது கதகளி ஆடலுக்கு உரிய பிறிதொரு நூலாகும்.
- பாட்டுக்காரர், மத்தளக் கலைஞர், செண்டைக் கலைஞர், சல்லாரி போடுபவர் ஆகியோர் கதகளி ஆடலுக்குப் பிரதான பங்களிப்பை வழங்குகின்றனர்.
- கதகளி ஆடல் வளர்ச்சியில் கள்ளக்கோட்டை ஸாமரினுக்குப் பெரும்பங்குண்டு.
- கிருஷ்ணனாட்டம், இராமனாட்டம் ஆகிய நாடகங்களை கதகளியில் பிரபல்யமானவை.
- கொட்டாரக்கரை, கோட்டையம் அதிபர்கள், கார்த்திகைத் திருநாள், அசுவதி திருநாள், வித்வான் குயில் தம்பிரான், திருவாங்கூர் மகாராஜாக்களான ஸ்வாதித்திருநாள், இராமவர்மா ஆகியோர் கதகளி வளர்ச்சிக்கு உதவியவர்கள்.
- முடியேத்து, கோலம் துள்ளல் போன்ற சமயச் சடங்குகள் இன்றைய கதகளி வடிவத்திற்கு வழிவகுத்தன.
- தெற்கத்திய பாணி, வடக்கத்திய பாணி என இருவகை பாணிகள் கதகளியில் உண்டு.
- 16ஆம் நூற்றாண்டிலேயே கதகளி அசைவுகள் காணப்பட்டமைக்குக் கேரள ஆலய சிற்பங்கள், பத்மநாப சுவாமி கோயில், மட்டன் சேரி கோயில் ஓவியங்கள் சான்று பகர்கின்றன.
- 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் "தெய்வம்", "பகவதி வழிபாடு" போன்ற சடங்கு சார்பான ஆடல்களும், மெருகூட்டப்பட்ட ஆடல்களான கூடியாட்டம், கிருஷ்ணனாட்டம், இராமனாட்டம் என்பனவும் இடம்பெற்றன.
- கதகளிக்குப் புத்துயிர் அளித்த கவிவள்ளத்தோல் 1932இல் கேரள கலாமண்டலத்தை ஆரம்பித்து குரு இராமுண்ணிமேனன், குருகுஞ்சுகுருப் போன்ற நாட்டிய ஆசிரியர்களுடன் இணைந்து கதகளியை வளர்த்தார்.
- புத்துயிர் பெற்ற கதகளியை வளர்த்தவர்களில் குருகோபிநாத், மனைவி தங்கமணி குறிப்பிடத் தக்கவர்கள். (01 புள்ளிகள்)

ii) கதகளி ஆட்டத்திற்குப் பயன்படுத்தும் வேஷங்கள் (முக ஒப்பனை) - பச்சை, கத்தி, கரி, மினுக்கு, தாடி, டெப்பு. (06 புள்ளிகள்)

iii) சாத்விக குணத்திற்குரிய கதாபாத்திரங்கள்: ரிஷிகள், ஸ்ரீகிருஷ்ணர், ஸ்ரீஇராமன், வீரர், சிறந்த மனிதர்கள்.

இவர்களுக்கான வேஷங்கள்: அடிப்படை ஒப்பனை பச்சை நிறம். தாடை எலும்பு வரையுள்ள கன்னங்கள் லேசான பச்சைப் பசையாலே பூசப்படும். கறுத்த கண்களுக்கும் சிவப்பு உதடுகளுக்கு மிடையில் முகத்திற்குப் பச்சை பூசப்படும். அரிசிமாவும் சுண்ணாம்பும் சேர்ந்த சுட்டி முகவாய்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டையில் இருந்தும் கீழ்ப் பகுதிகளிலிருந்தும் மேலே நோக்கிக் காணப்படும். தாமரைக்கண் மாதிரி அலங்காரம் என வர்ணிக்கக்கூடிய வகையில் கண்கள் நீண்டு காணப்படும். நெற்றியில் வெண்ணிற வண்ணமிருக்கும். பாத்திரத்திற்கேற்றவாறு பல்வேறு மாதிரிகளில் அலங்காரம் அமையும். ஆடையுடன் சேர்ந்த ஒப்பனை நடிகனை அமானுஷ நிலைக்குக் கொண்டு செல்லும். சுட்டியின் வளைவு ஓரமாகவே பொய் மோவாய்க்கட்டை, தாடை ஆகியவற்றிற்கான ஒப்பனைகள் காணப்படும்.

ராஜச குணத்திற்குரிய கதாபாத்திரங்கள்: இராவணன் போன்றோரை ராஜச பாத்திரங்களாக வர்ணிக்கும்போது அடிப்படைப் பச்சை ஒப்பனை மீது சிவந்த பூச்சு இடம்பெறும். அடிப்படைப் பச்சை ஒப்பனை மீது மூக்கிலும் மேல் கன்னத்திலும் முட்டை வடிவான வெண்ணிற மாதிரி அலங்காரம் செய்யப்படும். மேலே திருப்பப்பட்டுள்ள மீசை கத்தி எனப்படும். மூக்கின் இரு பக்கங்களிலும் கண்புருவங்கள் மீதும் சிவப்பு, வெள்ளை நிறப் பூச்சும் முகத்தில் ஏனைய பகுதிகளில் பச்சையும் பூசப்படும். வெண்ணிறப் பசையாலான மீசையின் ஓரங்களில் சிவப்பு மை பூசப்பட்டிருக்கும். தாடியின் சுருள் மயிர் கன்னங்களில் விரவிக் காணப்படும். கழுத்து இளம் சிவப்பு (pink) நிறத்தில் அமைந்திருக்கும். யானைத் தந்தத்திலான இரு கோரைப்பற்கள் மேல் உதட்டில் காணப்படும்.

தாமஸ குணத்திற்கான கதாபாத்திரங்கள்: ஆதிவாசிகள், வேடர்கள், சாதாரண மனிதர்கள். மூக்கின் கீழிருந்து கண்வரை கத்திபோல வெள்ளை பூசி அதில் இரத்தச் சிவப்பினால் (பூச்சினால்) மேலே குறித்த பச்சை வேஷத்தில் மாற்றம் ஏற்பட்டுக் கத்தி உருவாகிறது. நெற்றியில் புருவங்களுக் கிடையிலும் மூக்கு நுனியிலும் வெள்ளை உருண்டைகள் ஒட்டப்பட்டு, முகத்தின் தோற்றம் மாறு பாடடைகின்றது. கோரைப் பற்களும் இங்கு காணப்படும். கறுப்புத் தாடிகள் இவற்றின் சிறப்பான ஒப்பனையாகும். சிறிய வட்டத்தகட்டுடன் கூடிய விரிவான, பதிந்த கூர் உருளை வடிவான முடியினைத் தரிப்பர். மடிப்புப் பின்னால் பருமனாக ஆக்கப்பட்டுள்ள சட்டைகள் மூலம் நடிகனின் அளவைப் பெரிதாக்குவது குறிப்பிடத்தக்கது. (04 புள்ளிகள்)

6. i) கௌரியம்மா பரத நாட்டியக் கலைஞர் / தாசி குலத்தவர் (03 புள்ளிகள்)

ii) பதங்களை அபிநயிப்பதற்குப் பிரசித்தி பெற்றவர். (03 புள்ளிகள்)

iii) நடனத்திற்குச் செய்த பங்களிப்பு :

- தியாகராஜ நகரில் சில சிறுமிகளுக்குக் குறைந்த மாத ஊதியத்தில் நாட்டியத்தைக் கற்பித்தார்.
- ஸ்ரீமதி ருக்மணிதேவி அருண்டேலின் முதல் குரு என்ற பெருமைக்குரியவர்.
- பாலசரஸ்வதி, சொக்கம்மாள், டிவி. வெங்கட்ராமன் போன்றோர் இவரிடம் நடனம் பயின்றதுடன், இசைக் கலைஞர்களான அரியகுட்டி ராமானுஜ ஐயங்கார், எஸ். ராஜம் போன்றோர் கௌரியம்மா விடம் பதங்களைக் கற்றவர்கள்.
- நிருத்தம் என்ற அம்சத்தைவிட தன் அபிநய அழகினால் திறமையை வெளிப்படுத்தினார்.
- ஆலயச்சேவை மட்டுமன்றி பல்வேறு அரங்குகளிலும் நடன ஆற்றுகை நிகழ்த்தி வந்தார்.
- முன்னுசுவாமி நட்டுவனாரும் அவர் மறைந்த பின், அவரது மகன் கந்தப்ப நட்டுவனாரும் இவருடைய ஆற்றுகைகளுக்கு நட்டுவாங்கம் செய்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள்.
- ஆந்திர மாநில சமஸ்தானங்கள் பலவற்றில் ஆடிப் பெருமளவில் சன்மானம் பெற்றார்.

(14 புள்ளிகள்)

7.
- நாயக்கர் காலம் கி.பி. 14-16 இற்கும் உட்பட்ட காலமாகும்.
- ரகுநாத நாயக்கர், இவரது மகன் விஜயராகவ நாயக்கர் காலத்தில் தஞ்சையிலும் மதுரையிலும் ஆடற்கலை வளர்ச்சிக்கு மன்னர் ஆதரவும் பங்களிப்பும் செய்தனர்.
- செங்கணார் கோவிலில் கண்ட தஞ்சை சகோதரர்களுக்கு தேவாரப்பணி, நட்டுவாங்கப்பணிகளுக்கு ஆதரவு நல்கி துளஜா மகாராஜா உதவி புரிந்தார்.
- தஞ்சை நால்வருக்கு சங்கீத, சாகித்திய பரதசிரேஷ்டா என்னும் பட்டத்தைக் கொடுத்து அவர்களின் நடனப் பணியை ஊக்குவித்தனர்.
- சரபோஜி மகாராஜா நாட்டியக்கலைக்கு பேராதரவு தந்து தன் அரண்மனையில் சிலம்பகூடம் அமைத்து பலரைத் தயார் செய்து ஆதரவு அளித்தனர்.
- தஞ்சை சகோதரர்கள் வகுத்த பாணியிலேயே நாட்டியக் கச்சேரிகள் தம் பிரதேசத்திலுள்ள எல்லா ஆலயங்களிலும் நடைபெற இவர்கள் வழிவகை செய்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஸ்ரீமுத்துஸ்வாமி தீட்சிதரிடம் குருகுல வாசத்தில் மும்மொழிப் பாண்டித்தியம் பெற விசேடமாக வழிவகுத்தவர்கள்.
- தஞ்சை சகோதரர்கள் வர்ணங்கள், பதங்கள் அரங்கேற்ற வழிவகுத்தனர்.

8. அலாரிப்பு: நாட்டிய உருப்படிகளில் முதலாவதாக இடம்பெறும் உருப்படி அலாரிப்பாகும். இவ்வுருப்படியை அலரு, அலரி, அலரிப்பூ, அலர்பூ, அல்லரிப்பு என்று பலவேறாகக் குறிப்பிடுவர். இது சுத்த நிருத்தமாகும். தனிச் சொற்கட்டுக்களால் ஆனது. விளம்ப, மத்திமம், துரித என்று மூன்று காலங்களிலும் அமையப் பெற்றிருக்கும். தாதெய் தெய்யும் தத்தாம் கிடதக என்ற சொற்கட்டில் அமைந்திருக்கும். ஐந்து ஜாதிகளிலும் செய்யலாம்.

ஜதீஸ்வரம்: பரதநாட்டிய நிகழ்ச்சிகளில் ஆரம்ப நடனத்துக்கு அடுத்தபடியாகச் செய்யப்படுகின்ற நடனம் ஜதீஸ்வரம் என்பதாகும். பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற பகுதிகளை உடையதாக இருக்கின்றது. இவ்வுருப்படியினை மெருகூட்டுவதற்காக மெய்யடவுகள் ஆரம்பத்திலும் இடையிலும் இறுதியிலும் செய்யப்படுகின்றன. ஸ்வரங்களுக்கு ஏற்றவாறு கோர்வை அமைக்கப்பட்டுள்ளது. பல இராகங்களிலும் தாளங்களிலும் கையாளப்பட்டு வருகிறது.

ஜதீஸ்வரத்தை பொன்னையாபிள்ளை, ஸ்வாதித்திருநாள் மகாராஜா போன்ற பலர் இயற்றியுள்ளனர். 5/6 நிமிடங்களுக்குரிய உருப்படியாகும். இதனை ஸ்வரபல்லவி என்றும் அழைப்பர்.

சப்தம்: நாட்டிய சம்பந்தமான உருப்படிகளில் இது ஒன்றாகும். இவ்வுருப்படியிலே தான் முதன்முதலாக அபிநயம் வெளிப்படுத்தப்படுகிறது. சொற்கட்டுக்களுடன் தொடங்குவதால் இதற்கு சப்தம் என்று பெயர். சப்தம் என்றால், "சொல்" என்று பொருள். அர்த்தம் நிறைந்த சாஹித்தியமும் சிறு ஜதிகளும் ஸ்வரங்களும் இணைந்து வருவது மிக அழகாக இருக்கும். பாடல் வரிகள் கண்டிகையாக அமைந்திருக்கும். இது பக்தி, சிருங்கார ரஸங்களில் அமைந்திருக்கும். சப்தம் மிஸ்ரசாபு தாளத்தில் காம்போதி அல்லது ராகமாலிகையில் அமைந்திருக்கும். சப்தத்தின் இறுதியில் சாலமுரே அல்லது நமோஸ்துதே இடம்பெறும். திரு. வடிவேலு, திரு. பொன்னையாப்பிள்ளை போன்றவர்கள் இயற்றியுள்ளனர்.

பதவர்ணம்: பரதநாட்டியக் கச்சேரியில் நான்காவதாக இடம்பெறுவது நாட்டியம் ஆடுவதற்கென்று அமைக்கப்பட்ட வர்ணம் பதவர்ணம் ஆகும். பாட்டிற்குரிய வகையினை தானவர்ணம் என்றும் கூறுவர். வர்ணம் பூர்வாங்கம், உத்தராங்கம் என்னும் இரு பிரிவுகளையுடையது. பூர்வாங்கம் என்பது பல்லவி, அனுபல்லவி, முத்தாயிஸ்வரம் என்ற முறையைக் கொண்டது. உத்தராங்கம் என்பது சரணம், சரணஸ்வரங்கள் என்பவற்றைக் கொண்டிருக்கும். சரணத்திற்கு எத்துக்கடைப் பல்லவி, உபபல்லவி, சிட்டைப்பல்லவி எனப் பெயர்கள் உண்டு. பதவர்ணத்தில் எல்லா அங்கங்களிலும் சாஹித்தியம் உண்டு. தாது நிருத்தத்திற்கும் மாது நிருத்தியத்திற்கும் ஏற்றதாக அமைந்துள்ளன. 30 நிமிடங்கள் ஆடக்கூடிய சிறுவர்ணங்களும் ஒரு மணித்தியாலம் வரை ஆடக்கூடிய வர்ணங்களும் உண்டு. இசை, பாவம், நடனம் ஆகிய மூன்று அம்சத்திலும் மிகச் சிறப்பாக விளங்கக்கூடிய உருப்படியாகும். இவ்வுருப்படியை திரு. பொன்னையாப்பிள்ளை, சிவானந்தம், ஸ்வாதித் திருநாள் மகாராஜா போன்றவர்கள் இயற்றியுள்ளனர்.

பதம் அல்லது கீர்த்தனை

பதம்: வேகமான போக்குடைய வர்ணத்தைத் தொடர்ந்து வேகம் குறைந்த போக்குள்ள பதம் இடம்பெறும். பதம் எனில் 'சொல்', 'வார்த்தை' எனப் பல பொருள்படும். உணர்ச்சியின் பல நிலைகளை சிறப்பாக காதல் நிலைகளைச் சித்திரித்து அபிநயித்துக் காட்டுவதற்கான சாஹித்தியங்கள் 'பதம்' என அழைக்கப்படும். நாயக நாயகி பாவனையிலே உலகியல் ரீதியிலே காதலனுக்கும் காதலிக்கும் இடையிலும் ஆன்மீக ரீதியிலே இறைவன், ஆன்மா ஆகியோருக்கு இடையிலும் முறையே சிற்றின்ப, பேரின்ப உணர்வுகளையும் சுவையினையும் பதம் எடுத்துக் காட்டுகின்றது. மதுர பக்தியை வெளிப் படுத்துகிறது. பதங்களில் சௌக்ககாலப் பதங்கள், மத்திமகாலப் பதங்களும் உண்டு.

கனம் கிருஷ்ணய்யா, அருணாசலக்கவிராயர், சுப்பராமய்யர், முத்துத்தாண்டவர், கவிக்குஞ்சர பாரதி போன்றோர் பதங்களை இயற்றியுள்ளனர்.

கீர்த்தனை: கீர்த்தனை எனும் சொல் இசைப்பாடல், புகழ்ச்சி எனப் பொருள்படும். இது பல்லவி, அனுபல்லவி, சரணம் ஆகிய பிரிவுகளைக் கொண்டது. கீர்த்தனைகள் பக்திச்சுவை மிகுந்தவை. சில கீர்த்தனைகளின் சொற்கட்டுகளுக்கு அடவுகள் செய்யப்படுகின்றன. சில கீர்த்தனைகளுக்கு ஸ்வரங்கள் பாடப்பட்டு அதற்கும் அடவுகள் கோர்வைகள் செய்யப்படுகின்றன. பல உருப்படிகள் இறைவன் மேல் பாடப்பட்டவையாகவே காணப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது வெளியீடுகளை இலங்கை முழுவதும் உள்ள முன்னணி புத்தகசாலைகள் அனைத்திலும் பெற்றுக் கொள்ளலாம்

**எமது A/L வெளியீடுகள்**

- இணைந்த கணிதம்
- பௌதிகவியல்
- இரசாயனவியல்
- உயிரியல்

- வர்த்தகம்
- பொருளியல்
- கணக்கீடு

- தமிழ்
- புவியியல்
- அரசறிவியல்
- வரலாறு
- மனைப்பொருளியல்
- பரத நாட்டியம்
- சங்கீதம்

**எமது விருப்பத்தேர்ச்சிப் பாட வெளியீடுகள்:**

- சுகாதாரமும் உடற்கல்வியும்
- நாடகமும் அரங்கியலும்
- கத்தோலிக்க திருமறை
- மனைப்பொருளியல்
- குடியுரிமைக் கல்வி
- கர்நாடக சங்கீதம்
- புவியியல்
- விவசாயம்
- இஸ்லாம்
- நடனம்
- சித்திரம்

புதிய பாடத்திட்டம்

**சகானியா வெளியீடு**
**Sakaniya Publications**
70/21, Peterson Lane, Colombo 06. T.P: 0777 164966
Email: sakaniyapublications@yahoo.com
Website: sakaniyapublications.com

விலை 350/=

978-955-0196-01-02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sri Lanka Book Publisher's Association Membership Number : TM - 03
Reg. No.: W/A 91748